T03737
R001I04

General 24723
1970
தமிழ்
3737

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்

விளாஞ்சோலைப்பிள்ளை பணித்த

# ஸப்தகாதை

அருளாளப்பெருமாளெம்பெருமானர் அருளிச்செய்த

# ஞானஸாரம் ப்ரமேயஸாரம்

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
RECEIVED
AUG 1970
TANJORE

இவை

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கராசாரியர்**

இயற்றிய தெளிவுரையுடன்

ஸ்ரீராமாநுஜன் வெளியீடு

விலை 1–0–0

கிடைக்குமிடம் :

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

1953

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பிள்ளைலோகாசாரியர் திருவடிபணிந்துய்ந்த

# விளாஞ்சோலைப்பிள்ளை பணித்த ஸப்தகாதை—உரையுடன்

(உரையாசிரியர்—ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர்)

## — அவதாரிகை —

---

*எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா* என்று நம்மாழ்வாரருளிச்செய்தபடியே எம்பெருமான் பலபல யோனிகளிலும் திருவவதாரங்கள் செய்யுமாபோலே அவனடியார்களும் அப்படியே திருவவதாரங்கள் செய்து வருவது உலகப் பிரசித்தம். * क्रिमप्यत्राभिजायन्ते योगिनः सर्वयोनिषु। प्रत्यक्षितात्मनाथानां नैषां चिन्त्यं कुलादिकम्— கிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ் ஸர்வயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்* என்பது முதலிய பல பிரமாணங்களினால் தொண்டக்குலத்தின் சிறப்பு அறியக்கிடக்கின்றது. யோகிகளான மஹான்கள் ஸகல யோனிகளிலும் பிறப்பர்களென்றும், எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்தவர்களான அவர்களுடைய ஜாதி முதலியவற்றிலே கண்வைக்கலாகாதென்றும் மேலே யெடுத்துக் காட்டிய பிரமாணம் கூறுகின்றது. அப்படி அவதரித்த மஹான்களில், பிள்ளையுறங்காவில்லிதாஸர் ஏறு திருவுடையதாஸர் பிள்ளைவானமாமலைதாஸர் முதலான மஹாபாகவதோத்தமர்கள் மிகச்சிறந்து விளங்குபவர்கள். பிள்ளையுறங்காவில்லிதாஸர் எம்பெருமானார்க்கு அந்தரங்கராயிருந்தவர்; ஏறுதிருவுடையதாஸர் நம்பிள்ளைக்கு அணுக்கராயிருந்தவர்; பிள்ளைவானமாமலைதாஸர் நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர்க்கு அன்பராயிருந்தவர். இவர்களைப் போன்றவரும், இவர்களில் விஞ்சிய பெருமைவாய்ந்தவருமான விளாஞ்சோலைப்பிள்ளை யென்பவர் பிள்ளை லோகாசாரியருடைய திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகல ரஹஸ்யார்த்தங்களுங் கேட்டு உஜ்ஜீவிக்கப் பெற்றவர்.

இவர், பிள்ளையுலகாசிரியர் திருவாய்மலர்ந்தருளிய அஷ்டாதசரஹஸ்யங்களினுள்ளும் *உன்னில் திகழ்வசன பூடணத்தின் சீர்மை யொன்றுக்கில்லை* என்று நிஸ்ஸமாப்யதிகமாகப் போற்றப்படுகின்ற ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்திலே மிகவும் ஊன்றினவராய் அதிலுள்ள அர்த்த விசேஷங்களை நிரந்தரம் அநுபவிப்பது தவிர வேறொன்று அறியாதவராயிருந்தாரென்று ப்ரஸித்தம். பகவத்கீதைக்குள் சரமச்லோகம் சிறப்பெய்தியதுபோல, ஸ்ரீவசநபூஷணத்திற்குள் சரமபர்வநிஷ்டாப்ரகரணம் சிறப்புற்றதாகையாலே அந்த ப்ரகரணத்திலுள்ள முக்கியமான அர்த்தவிசேஷங்களையும் மற்றும் இதர ப்ரகரணங்களிலுள்ள சில அர்த்தவிசேஷங்களையும் திரட்டி லகுவானதொரு பிரபந்தம் பணிக்கவேணுமென்று கருதித் திருவாசிரியம்போலே ஏழு பாட்டாயமைந்த ஸப்தகாதை யென்னுமிந்த ப்ரபந்தத்தைப் பணித்தருளினார். நம்மாழ்வாருடைய ஸப்தகாதையான திருவாசிரியம் ப்ரதமபர்வத்திற்கு அமைந்தது; இவருடைய ஸப்தகாதை சரமபர்வத்திற்கு அமைந்தது. இதுவாயிற்று இதனுக்கு ஏற்றம். ஆசிரியப்பாவான அதிலுங்காட்டில் வெண்பாவான இதுதனக்கு இன்னமும் ஏற்றமுண்டு. ஸ்ரீமதுரகவிகளும் வடுகநம்பியும் தங்கள் சரமபர்வநிஷ்டையை உக்தியனுஷ்டானங்களாலே காட்டினதுபோல இப்பிள்ளையும் காட்டியருளினாராயிற்று. ... *

அவதாரிகை முற்றிற்று.

---

ஸ்ரீ:

# ஸப்தகாதை

அம்போன் னரங்கர்க்கு மாவிக்கு மந்தரங்க
சம்பந்தங் காட்டித் தடைகாட்டி—உம்பர்
திவமன்னும் வாழ்வுக்குச் சேர்ந்தநெறி காட்டு
மவனன்றே ஆசாரியன். 1

| | |
|---|---|
| அம் பொன் அரங்கர்க்கும் | அழகிய பொன்னரங்கத்தில் வாழும் பெரிய பெருமாளுக்கும் |
| ஆவிக்கும் | ஜீவாத்ம வர்க்கத்திற்கும் (உண்டான) |
| அந்தரங்க சம்பந்தம் காட்டி | மிகவுள்ளீடான ஸம்பந்தத்தை யெடுத்துரைத்து |
| தடை காட்டி | ஸ்வரூப விரோதி முதலான விரோதி ஸ்வரூபங்களையும் காட்டிக் கொடுத்து |

| | |
|---|---|
| உம்பர் திவம் மன்னும் வாழ்வுக்கு | நித்ய முக்தர்களின் ஸ்தானமான பரமபதத்திலே மன்னியிருந்து நித்ய கைங்கரியம் பண்ணுகையாகிற வாழ்ச்சிக்கு |
| சேர்ந்த நெறி | அநுரூபமான மார்க்கமாகிய ப்ரபத்தியை |
| காட்டுமவன் அன்றே ஆசாரியன் | உபதேச முகத்தாலே காட்டுகிறவனே ஆசாரியன். |

* * *—இப்பாட்டால் ஆசாரியன் படியைப் பேசுகிறார். ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவோடே ஒருவிதமான ஸம்பந்தமன்று, நவவிதமான ஸம்பந்தங்களுள்ளன; 1. பிதாபுத்ர பாவம். 2. ரக்ஷ்யரக்ஷக பாவம். 3. சேஷசேஷி பாவம். 4. பர்த்ருபார்யா பாவம். 5. ஜ்ஞாத்ருஜ்ஞேய பாவம். 6. ஸ்வஸ்வாமி பாவம். 7. ஆதாராதேய பாவம். 8. சரீராத்ம பாவம். 9. போக்த்ருபோக்ய பாவம்—என்றிப்படி ஒன்பது வகைப்பட்ட ஸம்பந்தங்கள் திருமந்திரத்தில் தேறுகின்றன. இந்த ஸம்பந்தத்தை யுணர்த்துவான் ஆசார்யன். இவ்வளவோடும் நில்லாமல் [நடைகாட்டி] ஸ்வரூப விரோதி, உபாயவிரோதி, ப்ராப்யவிரோதி என்று மூவகைப்பட்ட விரோதிகளையும் நம: பதத்திலே நிரூபித்துக் காட்டுவன் ஆசார்யன். இவ்வளவேயுமன்றிக்கே [உம்பர் திவமன்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டும்] இதை இரண்டு வாக்கியார்த்தமாகப் பிரித்து அநுஸந்தித்துக் கொள்ளலாம்; உம்பர் திவமன்னும் வாழ்வைக் காட்டும், அந்த வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டும்—என்று. ப்ராப்யமான புருஷார்த்தத்தையும் அதற்கு ப்ராபகமான உபாயத்தையும் காட்டுவனென்றபடி. ஆக இவற்றையெல்லாம் காட்டுமவனன்றே ஆசாரியன் என்றது—இவற்றை நிஷ்கல்மஷமாகக் காட்டிக் கொடுப்பதுதான் ஆசார்யக்ருத்யம் என்றபடி.

"அம்பொன்னரங்கர்க்கும்" என்று ஸ்ரீரங்கநாதனைக் குறித்தது அந்த விசேஷ வ்யக்தியில் நோக்காகவன்று; பொதுப்பட நாராயணனைச் சொன்னபடி. அந்த நாராயணன் அம்பொன்னரங்கனாக ஸேவை ஸாதிக்கையாலே விசேஷ சப்தத்தையிட்டுச் சொல்லிற்றென்று கொள்க. "அந்தரங்க சம்பந்தம்" என்கையாலே நம்முடைய தர்சனத்திற்கு அந்தரங்கமாகக் கொள்ளப்படுகிற சரீராத்மபாவ ஸம்பந்தத்தைச் சொல்லிற்றாகவுமாம். "உம்பர் திவமென்னும்" என்பது சிலருடைய பாடம். ... 1

அஞ்சு பொருளு மளித்தவன்பா லன்பிலார்
நஞ்சில் மிகக்கோடியர் நாம்சொன்னோம்—நஞ்சுதான்
ஊனை முடிக்கு மதுயிர் முடிக்குமேன்
றீனமிலார் சொன்னா ரிவை. 2

| | |
|---|---|
| அஞ்சு பொருளும் அளித்தவன் பால் | அர்த்த பஞ்சகத்தை உபதேசித்தருளின ஆசார்யன் பக்கலில் |
| அன்பு இலார் | பக்தி யில்லாதவர்கள் |
| நஞ்சின் மிக கொடியர் | விஷத்திற் காட்டிலும் மிகவும் கொடியராயிருப்பர்; |
| நாம் சொன்னோம் | இதனை உறுதியாகச் சொல்லுகின்றோம். |

(நஞ்சின் மிகக் கொடுமை எங்ஙனே யென்னில்;)

| | |
|---|---|
| நஞ்சு தான் ஊனை முடிக்கும் | விஷமானது சரீரத்தை மாத்திரமே முடித்திடவல்லது; |
| அது உயிர் முடிக்கும் | ஆசார்ய ப்ரேமமில்லாதிருத்தலானது ஆத்ம நாசத்தையே பண்ணி விடும்; |
| என்று இவை | என்னுமிவ்வர்த்தத்தை |
| ஈனம் இலார் சொன்னார் | ஒன்றிலும் குறைவற்றவர்களான பூருவர்கள் அருளிச் செய்து வைத்தார்கள். |

* * *—இப்பாட்டாலே, ஆசார்ய ப்ரேமமில்லாதவர்கள் ஆத்மநாசத்தைத் தா களே விளைத்துக் கொள்ளுமவர்களென்கிறார். "அஞ்சு பொருளுமளித்தவன்" என் கிற சொல்லால் ஆசார்யனைக் கூறுகின்றார். கீழ்ப்பாட்டில், ஜீவபரஸம்பந்தங் காட் தல் விரோதிகளைக் காட்டுதல் உபாயோபேயங்களைக் காட்டுதல் இவை ஆசார்ய க்ருத் மாகச் சொல்லிற்று. அர்த்த பஞ்சகமுபதேசித்தல் ஆசார்ய க்ருத்யமாக இதிற் சொல் கிறது. *மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும் தக்கநெறியும் தடையாகித் தொ கியலு மூழ்வினையும் வாழ்வினையுமோதும்* என்கிற திருவாய்மொழித் தனியனி அஞ்சு பொருள்கள் [அர்த்த பஞ்சகம்] இன்னவையென்று நிரூபிக்கப்பட்டிருக்கின் றமை யுணர்க. இந்தப் பிரபந்தந்தன்னிலும் மேலே (4) *தன்னை யிறையைத் தடை யைச் சரணெறியை மன்னு பெருவாழ்வை* என்னும் பாசுரத்தில் வ்யக்தமாகச் சொல் யிருப்பதுங் காண்க. ஆக இப்படிப்பட்ட அஞ்சு பொருள்களையு மளித்தவனான ஆசா யன் பக்கலிலே அன்பில்லாதவர்கள் நஞ்சில் மிகக் கொடியர்—நஞ்சு கொடிது; இவர்க மிகக்கொடியராயிருப்பரென்கை. மிகக்கொடியரென்னுமிடத்தைப் பின்னடிகளாலே மூதலிக்கிறார். *ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளானாரல்லாதார், மானிடவரல் ரென்று என் மனத்தே வைத்தேனே* என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்ததுபோ இவரும் 'நாம் சொன்னோம்' என்கிறார்.

நஞ்சுதான் ஊனை முடிக்கும்—விஷமுண்டவர்களுக்கு தேஹநாசம் விளையுமேயல்ல ஆத்மநாசம் விளையாது; அது உயிர் முடிக்கும்—அஞ்சு பொருளுமளித்தவன்பால் அ பில்லாமையானது ஆத்மநாசத்தையே விளைக்குமாயிற்று ஸ்ரீவசநபூஷணத்தில் (349 "இவனுக்கு சரீராவஸானத்தளவும் ஆசார்ய விஷயத்தில் *என்னைத் தீமனங் கெடு தாய்* மருவித்தொழும் மனமே தந்தாய்* என்று உபகாரஸ்ம்ருதி நடக்கவேணும் என்ற சூர்ணையை இங்கே அநுஸந்திப்பது ... ... ...

பார்த்த குருவி னளவிற் பரிவின்றிச்
சீர்த்தமிகு ஞானமெலாஞ் சேர்ந்தாலும்—கார்த்தகடல்
மண்ணின்மேல் துன்புற்று மங்குமே தேங்காமல்
நண்ணுமே கீழா நரகு.

| | | | |
|---|---|---|---|
| பார்த்த குரு வின் அளவில் பரிவு இன்றி | ப்ரத்யக்ஷதைவமான ஆசார்யன் திறத்தில் பக்தி யில்லாமல் | கார்த்த கடல் மண்ணின் மேல் துன் புற்று மங்கும் | கருங்கடல் சூழ்ந்த இப்பூமண் லத்தில் பலவகைத் துன்ப களையுமனுபவித்து (அ நீசன்) நசித்தொழிவன்; |
| சீர்த்த மிகு ஞானம் எலாம் சேர்ந் தாலும் | சுனத்த மஹாஜ்ஞானங்களெல் லாம் சேரப்பெற்றாலும் | கீழ் ஆம் நரகு தேங்காமல் நண்ணும் | அதோகதியான நரகத்தை நிரந்தரமாக அடைந்திடுவன். |

* * *—சிஷ்யன் ஈடேற வேண்டுவது சாஸ்த்ரதாத்பர்யஜ்ஞான விசேஷத்த லன்றோ; அது குறையற்றிருக்குமாகில் உஜ்ஜீவிக்கத்தட்டில்லையே. ஆசார்யப்ரேம இருந்தாலென்ன? இல்லையாகிலென்ன? என்று சிலர் சொல்லக்கூடுமாகையாலே அதற்கு மறுப்புரைக்கிறது இப்பாட்டு. எத்தனை ஞானவிகாஸமுடையனாயிருந்தாலு ஆசார்யனளவில் பரிவில்லையாகில் அதோகதியே கதி என்கிறாராயிற்று இதில். பார்த் குரு என்பதற்குப் பலவகையாகப் பொருள் கொள்ளலாம்; நம் கண்ணாலே பார்க்க படுகிற குரு என்னுதல்; நம்மளவிலே விசேஷகடாக்ஷம் செய்தருளின குருவென்னு தல்; எம்பெருமான் தேடிப்பார்த்து வைத்த குருவென்னுதல். இப்படிப்பட்ட கு வின் பக்கலிலே பரிவின்றிக்கேயிருந்து; [சீர்த்தமிகு ஞானமெல்லாம் சேர்ந்தாலும்] ஞான மிகுஞானம், சீர்த்தமிகுஞானம் என்று மூன்றாகக் கொள்வது. ஸம்ஸ்க்ருத வேதாந் ஜ்ஞானம் த்ராவிட வேதாந்தஜ்ஞானம் ரஹஸ்யார்த்தஜ்ஞானம் என்கிற மூன் ஞானங்களையுங் கொள்க. இதற்கும் மேற்பட எல்லாம் என்கையாலே மற்றுமுள் ஸகலார்த்தஜ்ஞானங்களையுங் கொள்வது. இவை சேர்ந்தாலும்; பார்த்த குருவின வில் பரிவில்லையாகில்;

கார்த்தகடல் மண்ணின்மேல் துன்புற்று மங்குமே—இதற்கு எழுவாய் வருவித்துக் கொள்ள வேணும்; குருவினளவில் பரிவின்றியிருப்பவன் கருங்கடல் சூழ்ந்த மண்ணுலகில் அநுபவிக்கக்கூடிய க்லேசங்களை யெல்லாமனுபவித்துக் கொண்டுழல்வன். இங்கே காண இப்பிறப்பே மகிழ்வரெல்லியுங் காலையே* என்றதற்கு எதிராக * अत्युत्कटै : पुण्यपापैरिहैव फलमश्नुते—அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமச்நுதே* என்கிற சாஸ்த்ரம் இவற்கே பலிக்குமென்றபடி. இஹலோகத்தில் துன்புறுவதோடும் இல்லாமல் நரகபாதனைகளையும் அநுபவிக்க நேருமென்கிறார் தேங்காமல் நண்ணுமே கீழாரகு என்பதனால். நித்ய ஸம்ஸாரியாய்க் கிடந்துழல்வனென்றதாகவுமாம். ... 3

தன்னை யிறையைத் தடையைச் சரணெறியை
மன்னுபெரு வாழ்வையொரு மந்திரத்தின்—இன்னருளால்
அஞ்சிலுங் கேடோட வளித்தவன்பா லன்பிலார்
நஞ்சிலுங்கே டென்றிருப்பன் நான். 4

| | |
|---|---|
| தன்னை இறையை தடையை சரண் நெறியை மன்னு பெரு வாழ்வை | ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, விரோதிஸ்வரூப, உபாய ஸ்வரூப, புருஷார்த்த ஸ்வரூபங்களாகிற இவற்றை |
| ஒரு மந்திரத்தின் | பெரிய திருமந்திரத்தின் மூலமாக |
| இன் அருளால் | பரமகிருபையினாலே |
| அஞ்சிலும் கேடு ஓட | மேற்சொன்ன ஐந்து பொருளிலும் ஒருவகையான கெடுதலுமின்றியே |
| அளித்தவன் பால் | உபதேசித்தருளின ஆசார்யன் பக்கலிலே |
| அன்பு இலார் | பிரேமமில்லாதவர்கள் |
| நஞ்சிலும் கேடு என்று நான் இருப்பன் | விஷத்திற் காட்டிலும் கொடியவர்களென்று நான் உறுதிகொண்டிருப்பேன். |

* * *—கீழிரண்டாம் பாட்டை வியாக்கியானிக்கிறதாயிருக்கிறது இப்பாட்டு, அதில் அஞ்சுபொருளென்றதை ஒன்றரையடிகளால் விவரிக்கின்றார். * प्राप्यस्य ब्रह्मणो रूपं प्राप्तुश्च प्रत्यगात्मन:। प्राप्त्युपायं फलं प्राप्तेस्तथा प्राप्तिविरोधि च—ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந:, ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச* என்கிற ச்லோகத்தில் சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகம் க்ரம விவக்ஷையின்றிக்கே விவரிக்கப்பட்டதிங்கு. இவ்வர்த்த பஞ்சகமும் திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்திலிருந்து உபதேசிக்கப்படும் ஆசார்யனாலே. எங்ஙனேயென்னில்; ப்ரணவத்தில் மகாரத்தாலும் லுப்தசதுர்த்தியாலும் உகாரத்தாலும் ஸ்வஸ்வரூபம்; அகாரத்தாலே பரஸ்வரூபம்; நமஸ்ஸில் (ம:) என்பதனாலே விரோதிஸ்வரூபம்; நமஸ்ஸாலே உபாயஸ்வரூபம்; நாராயணாய என்பதனாலே உபேயஸ்வரூபம். 'அஞ்சிலும் கேடோடவளித்தவன்' என்றது—அர்த்தபஞ்சகத்திலும் அஜ்ஞாநஸம்சய விபர்யயங்கள் அறும்படி உபதேசித்தவனென்கை. அவன் பக்கலிலே அன்பிலாதார் நஞ்சிலும் கேடு. ... ... 4

என்பக்க லோதினா ரின்னா ரேனுமியல்வும்
என்பக்கல் நன்மை யெனுமியல்வும்—மன்பக்கல்
சேவிப்பார்க் கன்புடையோர் சன்ம நிருபணமும்
ஆவிக்கு நேரே யழுக்கு. 5

| | |
|---|---|
| இன்னார் என் பக்கல் ஓதினார் எனும் இயல்வும் | இவர்கள் என்னிடத்தில் ஓதி என்னை ஆசார்யனாகக் கொண்டவர்களென்றிருப்பதும் |
| என் பக்கல் நன்மை எனும் இயல்பும் | 'என் பக்கலிலே ஆசார்யத்வ பூர்த்தியுள்ளது' என்றிருப்பதும் |
| மன் பக்கல் சேவிப்பார்க்கு அன்பு உடையோர் சன்ம நிருபணமும் | பகவத்பக்த பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களிடத்திலே ஜாதி நிருபணம் பண்ணுகையுமாகிறவிவை |
| ஆவிக்கு நேரே அழுக்கு | ஆத்மாவுக்கு நிச்சயமாக நாசகம். |

* * *—கீழ்ப்பாட்டுக்களிலே சிஷ்யனுக்காகும் குறைகளைப் பேசினார்; இப்பாட்டில் ஆசார்யனுக்கு நேரக்கூடிய அவத்யத்தைப் பேசுகிறார். ஸ்ரீவசநபூஷணத்தில் (308.) "தான் ஹிதோபதேசம் பண்ணும்போது தன்னையும் சிஷ்யனையும் பலத்தை

யும் மாறுடி நினைக்கை க்ரூரநிஷித்தம். தன்னை மாறுடி நினைக்கையாவது தன்னை ஆசார்யனென்று நினைக்கை; சிஷ்யனை மாறுடி நினைக்கையாவது தனக்கு சிஷ்யனென்று நினைக்கை." என்கிற ஸ்ரீஸூக்தியையும்; (194) "பாகவதாபசாரந்தான் அநேகவிதம்; அதிலேயொன்று அவர்கள்பக்கல் ஜன்மநிரூபணம்; இதுதான் அர்ச்சாவதாரத்தில் உபாதாநஸ்ம்ருதியிலுங் காட்டில் க்ரூரம்" என்கிற ஸ்ரீஸூக்தியையுங் கொண்டு இப்பாட்டு அவதரிக்கிறது. உபதேசிக்குமவன் உபதேசஸமயத்திலே தன்னுடைய ஆசார்யனையே இவனுக்கு உபதேசகர்த்தாவாகவும் தான் அவ்வாசாரியர்க்குக் கரணபூதனாகவும் ப்ரதிபத்திபண்ணிக்கொணடு உபதேசிக்க வேண்டியிருக்க, அப்படி செய்யாதே ஸ்வாசார்ய பரதந்த்ரனாயிருக்கிற தன்னை இவனுக்கு ஆசார்யனென்று நினைக்கை தவறுகையாலே அது இப்பாட்டின் முதலடியில் தெரிவிக்கப்படுகிறது. அதற்குமேல், உபதேசபாத்ர பூதனானவனையும் தன்னைப்போலே தன்னுடைய ஆசார்யனுக்கு சிஷ்யனாக ப்ரதிபத்திபண்ணி உபதேசிக்கவேண்டியிருக்க, அதுசெய்யாதே இவனைத் தனக்கு சிஷ்யனென்று நினைத்துத் தன்னிடத்தில் ஆசார்யத்வமுள்ளதாக நினைக்கையும் தவறுகையாலே அஃது இரண்டாமடியில் தெரிவிக்கப்படுகிறது.

இனி, சதுர்த்தவர்ணம் முதலானவற்றிலே அவதரித்த பாகவதர்களிடத்தில் பகவத்ஸம்பந்தப்ரயுக்தமான சிறப்பைப்பாராதே நிகர்ஷபுத்தியினால் அவரவர்களுடைய ஜன்மங்களை நிரூபிக்கையும் மஹாபசாரமாகையாலே அது மூன்றுமடியில் தெரிவிக்கப்பட்டது. ஆக இவையெல்லாம் ஆவிக்கு நேரேயழுக்கு என்று சொல்லித் தலைக்கட்டப்பட்டது. ... ... ... ... ... 5

அழுக்கென் றிவையறிந்தே னம்பொ னரங்கா!
ஒழித்தருளா யுள்ளில் வினையைப்—பழிப்பிலா
என்னா ரியர்க்காக எம்பெருமா னார்க்காக
உன்னா ரருட்காக வுற்று. 6

3737

| | |
|---|---|
| அம் பொன் அரங்கா | ஸ்ரீரங்கநாதனே! |
| இவை அழுக்கு என்று அறிந்தேன் | கீழ்ச்சொன்னவையெல்லாம் (ஆத்மாவுக்கு) அவத்யாவஹமென்று தெரிந்து கொண்டேன்; |
| பழிப்பு இலா என் ஆரியர்க்கு ஆக | ஸகல கல்யாணகுண பரிபூர்ணராய் அஸ்மதாசார்யரான பிள்ளை லோகாசார்யருக்காகவும் |
| எம்பெருமானார்க்கு ஆக | (ஜகதாசார்யரான) எம்பெருமானாருக்காகவும் |
| உன் ஆர் அருட்கு ஆக | உன்னுடைய பரமக்ருபைக்காகவும் |
| உற்று | திருவுள்ளம்பற்றி |
| உள்ளில் வினையை ஒழித்தருளாய் | என்னுள்ளுறையும் பாபஸமூஹத்தைப் போக்கியருளவேணும். |

கீழ்ப்பாட்டுக்களில் ஆவிக்கு அழுக்காகத் தெரிவிக்கப்பட்ட விஷயங்களைப் பலர் அழுக்கென்று அறிந்திருக்கச் செய்தேயும் ப்ரக்ருதி வாஸனை தப்பவொண்ணாதாகையாலே அவரவர்கள் இவ்வழுக்குகளிலே அகப்பட்டு நசிக்கிறார்களென்னுமிடத்தை யநுஸந்தித்து, இப்படிப்பட்ட அவத்யம் தமக்கு நேராதிருக்கவேணுமென்று எம்பெருமான் திருவடிகளிலே பிரார்த்திக்கிறார் இப்பாட்டால். "அழுக்கென்றிவையறிந்தேன்" என்றதற்குப்பின் (ஆகிலும்) என்று கூட்டிக்கொள்வது நன்று. 'இவை அவத்யம்' என்கிற ப்ரதிபத்தி அடியேனுக்கிருந்தாலும் என்றேனும் கெடுதல் நேராதபடி உள்ளில் வினையை ஒழித்தருளாய் என்று அம்பொன்னரங்கனை ப்ரார்த்தித்தாராயிற்று. இவ்வேண்டுகோளை எம்பெருமான் அவசியம் நிறைவேற்றியருளவேணு மென்கைக்கு ஆவர்ஜநீயஹேதுக்களைப் பின்னடிகளிற் பேசுகிறார்; அஸ்மதாசார்யரானபிள்ளை லோகாசாரியர்க்காகவும், உலகுக்கோருயிரான எம்பெருமானார்க்காகவும் தேவரீருடைய திருவருள் பழுதுபடாமைக்காகவும் இவ்வருள் செய்தேயாக வேணுமென்றாராயிற்று. 6

தீங்கேது மில்லாத தேசிகன் தன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையோர்—ஓங்காரத்
தேரின்மே லேறிச் செழுங்கதிரினூடுபோய்ச்
சாருவரே யந்தாமந் தான். 7

| | | | |
|---|---|---|---|
| தீங்கு ஏதும் இல்லாத | ஒருவகைப் பொல்லாங்குமின் றிக்கேயிருக்கிற | ஓங்காரம் தேரின் மேல் ஏறி | பிரணவமாகிற தேரின் மீதே றிக் கொண்டு |
| தேசிகன் தன் சிந்தைக்கு பாங்காக | ஆசாரியனுடைய திருவுள்ளத் திற்கு அனுகூலமாக | செழும் கதிரின் ஊடு போய் | ஸூர்யமண்டல மார்க்கமாகச் சென்று |
| நேரே பரிவு உடையோர் | உண்மையான அன்பையுடைய வர்கள் | அம் தாமம் சாருவர் | சாச்வதஸ்தானமாகிய திரு நாட்டைக் கிட்டப் பெறுவர் கள். |

ஆசாரியன்பக்கலில் அன்பில்லாதார்க்கு அதோகதியே யென்னுமிடத்தைப் பல் வகையாலும் சொல்லினின்றார் கீழ்; அதற்கு ப்ரதிகோடியாக ஆசார்யப்ரேமம் கனத் திருக்குமவனுக்கு உஜ்ஜீவனமுண்டென்னுமிடம் சொல்லவேண்டுகையாலே அதனை இப்பாசுரத்திலே சொல்லித் தலைக்கட்டுகிறாராயிற்று. "தீங்கேதுமில்லாத தேசிகன் தன்சிந்தைக்குப்பாங்காக நேரே பரிவுடையோர்" என்றது ஆசார்யப்ரேமம் கனத்தி ருப்பவர்களென்றபடி. தேசிகன்—ஆசார்யன்; அவனுக்குத் தீங்கேது மில்லாமையாவது ஸ்வாசார்யன்பக்கல் ப்ரேமமற்றிருக்கைமுதலான அவத்தியங்களில்லாமை. இவை உண்டாகிக்கழிகையன்றிக்கே முதலிலேயே இவற்றின் ஸ்பர்சமின்றியே யிருக்கையைச் சொன்னபடி. இப்படிப்பட்டவர்களாய் மஹோபகாரகர்களான ஸ்வாசார்யர்கள் திருவுள் ளத்துக்கு அநுகூலமாம்படி, தமக்கு அநுபாவ்யமான அவரது திருமேனியைப் பேணிக் கொண்டு அவர்பக்கலிலே நிரவதிகமான ப்ரேமத்தையுடையவர்கள்; இப்படிப்பட்ட ஸச்சிஷ்யர்கள் பெறும்பேற்றைப் பின்னடிகளிற் பேசுகின்றார். வைகுந்தமாநகர் இவர் களுடைய கையது என்கிறார். * வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண் ணூடே * என்கிறபடியே இங்கிருக்குநாள் தங்கள் வ்யாவ்ருத்தி தோற்றவும் ஸ்வரூபா நுரூபமாகவும் பரமபதங்கூடத் தங்கள் சிறுமுறிக்குச்செல்லும்படியாகவும் உபய வேதாந்த காலக்ஷேபஸ்ரீயோடும் ததீயாராதந ஸ்ரீயோடும் உகந்தருளின நிலங்களில் மங்களாசாஸநஸ்ரீயோடும் தத்கைங்கர்ய ஸ்ரீயோடும் எம்பெருமானாரைப் போலே நெடுங் காலம்வாழ்ந்திருந்து சரீராவஸாநத்தில் பரமபக்திதலையெடுத்து அந்தமில் பேரின்பத் தடியரோடு ஒரு கோவையாயிருக்கவேணுமென்கிற ப்ராப்யத்வரை விஞ்சி * हार्दानुग्रहल- ब्धमध्यधमनिद्वारा बहिर्निर्गतர்களாய் *ஓங்கார ரதமாருஹ்ய* என்கிறபடியே மநஸ்ஸு ஸாரத்யம் பண்ண ப்ரணவமாகிற தேரின்மேலேறி; தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக்கீண்டு க்கு ஆராவமுதமங்கெய்தி வாழ்ந்திருக்கப்பெறுவர் என்று கூறி இப்பிரபந்தத்தையும் தலைக்கட்டினாராயிற்று. ... ... ... ... .... 7

விளாஞ்சோலைப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கராசாரியர்**

இயற்றிய

ஸப்தகாதையுரை முற்றுப்பெற்றது.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்த

# ஞானஸாரம்

## (ஸ்ரீகாஞ்சி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய தெளிவுரையுடன்.)

### (அவதாரிகை)

*நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன, நாரணனைக்காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ் மறைவாழ்ந்தது* என்னும்படியாக எம்பெருமானார் தர்சந நிர்வாஹம் செய்து கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளி யிருக்குமளவிலே யஜ்ஞ மூர்த்தி என்றொரு மாயாவாதி ஸந்ந்யாஸி ஸ்வாமியின் வைபவாதிசயங்களைக் கேட்டு ஸ்வாமியோடே தர்க்கித்து வெற்றிபெற வேணுமென்று விரும்பி ஸ்வாமிமடத்திலே வந்து ஸேவித்து 'நான் கேட்கிற கேள்விகளுக் கெல்லாம் தேவரீர் விடை கூறவேணும்; திருப்திகரமாக விடை பெற்றேனாகில் தேவரீருக்கு சிஷ்யனாகக் கடவேன்' என்று சொல்ல, ஸ்வாமியும் இசைந்தருள, பதினேழு நாள் வரையில் வெற்றி தோல்வியின்றியே வினாவிடை செல்லா நிற்க, முடிவில் உத்தர மருளிச் செய்ய வேண்டிய பொறுப்பு ஸ்வாமி பக்கலிலே நின்று விஷயம் தோன்றாமே யிருக்கையில் 'நாளையாகிறது' என்று சொல்லி ஸபாவிஸர்ஜநமாக; பிறகு ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வியாகுலப் பட்டு, தம் திருவாராதனமான பேரருளாளரைத் திருவடி விளக்கி அமுது செய்யப்பண்ணி 'ஆழ்வார் தொடங்கி ஆளவந்தாரளவாக இத்தனை காலம் ஒரு குறையுமின்றியே விளங்கி வந்த இத்தரிசனம் இன்று அடியேனால் பங்கமடைவதோ? இப்படியும் ஒரு லீலை கொண்டாடத் திருவுள்ளமாயிற்றோ?' என்று விண்ணப்பஞ் செய்து அமுது செய்யாமலே திருக்கண் வளர்ந்தருள, அன்றிரவு பேரருளாளர் கனவிலே யெழுந்தருளி ஸேவை ஸாதித்து மாயாவாதியின் வாயடங்கும்படியான சில அர்த்த விசேஷங்களை ஸ்புரிக்கச் செய்து மறைய, ஸ்வாமியும் சிற்றஞ் சிறுகாலை யெழுந்து பரமஸந்துஷ்டராய் நித்யாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ப்ரஸந்ந கம்பீரராய் விசார கோஷ்டிக்கு எழுந்தருள, அவ்வளவிலேயே யஜ்ஞமூர்த்தி இன்று நமக்குத் தோல்வியே திண்ணமென்று அறுதியிட்டு அப்போதே யெழுந்து ஸ்வாமி திருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி நின்று 'அடியேனை யங்கீகரித்தருளவேணும்' என்று கைகூப்பி ப்ரார்த்திக்க, 'மேலை விஷய விசாரம் நடைபெற வேண்டியிருக்க, இதுவென்?' என்று ஸ்வாமி கேட்க, அதற்கு யஜ்ஞமூர்த்தி 'ஸ்வாமிந்! தேவரீருக்குப் பெரிய பெருமாள் ப்ரத்[illegible]க்ஷட[illegible]ன பின்பு தேவரீரென்றும் பெருமாளென்றும் வாசியுண்டோ? இனி அடியேன் தேவரீர் ஸன்னிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல ப்ராப்தியில்லை; இந்த ஆத்மா இதுவரையில் அநர்த்தப்பட்டது போதும், இனியும் அநர்த்தப்படாதபடி நோக்கி யருள வேணும்' என்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் திருவருளைப் பெற்று அப்போதே

ஏக தண்டத்தை முறித்தெறிந்து ப்ராயச்சித்த பூர்வகமாய் சிகா யஜ்ஞோபவீதங்களை யும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்று முக்கோல்பிடித்த முனியாகி, சாஸ்த்ரப்படி ஆசார்யனுடைய நாமத்தையே வஹிக்க விரும்பி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் பேரருளாள னுடைய ப்ரஸாதமடியாகவே இவர் ஆட்பட்டாரென்கிற உபகாரஸ்ம்ருதி உலகப்ரஸித்த மாம்படி அருளாளப் பெருமாளெம் பெருமானுர் என்று திருநாமம் சாத்தியருளினார். உடனே அவரை யழைத்துக் கொண்டுபோய்ப் பெரிய பெருமாளை ஸேவிக்கப்பண்ணிச் சிறப்பு களும்பெறுவித்து அன்று முதலாகவே திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரமு மோது வித்து மற்றும் தத்வ சிக்ஷைகளும் செய்தருளினார்.

அவரும் ஸ்வாமி திருவடிகளிலே நிழலுமடிதாறுமாக விருந்து ஸகல தத்வார்த்தங் களையும் கேட்டு தத்வ ஹித புருஷார்த்தங்களில் விசததம ஜ்ஞாநமுடையராய் அவ்வர்த்த விசேஷங்களைப் பின்புள்ளாரு மநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும் படியாக ஆசார்ய நியமநத் தாலே இரண்டு ப்ரபந்தங்களை யருளிச் செய்தார். அவற்றுக்கு ஞானஸார மென்றும் ப்ரமேய ஸார மென்றும் திருநாமம் வழங்கும். இத்திருநாமம் ஸ்வாமி யெம்பெருமானார் தாமே இட்டருளின தென்று பெரியார் பகரக் கேட்டிருக்கை. பகவச் சாஸ்த்ராதிகளிலே பல பல வசனங்கள் முமுக்ஷுக்களுக்கு அவச்யஜ்ஞாதவ்யங்களான பரமார்த்தங்களைத் தெளிவாகத் தெரிவிப்பனவாயிருக்கும்; அந்த வசனங்களையே ஒவ்வொரு பாட்டாக அமைத்து ப்ரபந்தீகரித்ததாயிருக்கும் ப்ரதம ப்ரபந்தமான ஞானஸாரம். ஜ்ஞாதவ் யார்த்த ப்ரகாசகங்களான ப்ரமாணங்களின் ஸாரமாயிருக்கையாலே ஞானஸாரமென்று பேராயிற்று. அந்த ப்ரமாண வசனங்களை யெல்லாம் அவ்வோ பாசுரங்களுக்குச் சேர ஸங்க்ரஹித்தருளி ஸம்க்ஷிப்தமானதோர் உரையும் இட்டருளினார் மணவாளமாமுனி கள். இராமாநுச நூற்றந்தாதிக்கு அருளிச் செய்திருந்த உரையைத் தழுவி வியாக் கியானமிட்ட பிள்ளை லோகஞ்சீயர் இந்த ஞானஸாரப்ரமேயஸாரங்களுக்கும் வியாக்கி யானமிட்டிருக்கிறார். இதுதான் அச்சாகி வெளிவந்துளதென்றும் இது மணவாள மாமுனிகளின் உரையன்று என்றும் அஸ்மதாசார்யரான அழகிய மணவாளச் சீயர் அரு ளிச் செய்யக் கேட்டிருக்கை. இவ்விரண்டு திவ்விய நூல்களிலும் அர்த்தபுஷ்டி ஒரு புற மிருக்க, மன்னிய சீர்வெண்பாவில் வைத்துப் பாடுகையாலே சொல்லழகும் மிகச் சிறந் திருக்கும். ஸ்வாசார்யரான எம்பெருமானார் தாமே இவ்விரண்டு நூல்களையும் அருளிச் செய்வதாக இந்நூலாசிரியருடைய கருத்தாகையாலே எம்பெருமானார்க்குக் காப்புச் செய் யுள்கூட இயற்றுது விட்டனர்.

அவதாரிகை முற்றிற்று.

---

## ஞானஸாரத் தனியன்

சுருளார் கருங்குழல் தோகையர் வேல்விழியில் துவளும்
மருளாம் வினைகெடும் மார்க்கம் பெற்றேன், மறை நான்குஞ் சொன்ன
பொருள் ஞானசாரத்தைப் புந்தியில் தந்தவன் பொங்கு புகழ்
அருளாளமாமுனி யம்பொற்கழல்க ளடைந்த பின்னே.

கருத்துரை:—நான்கு வேதங்களிலு மமைந்த பொருள்களைக் கொண்ட ஞானசார மென்னும் பிரபந்தத்தை யருளிச் செய்த மஹாகீர்த்திவாய்ந்த அருளாளப்பெருமா ளெம்பெருமானாருடைய திருவடிகளை யடையப் பெற்றதனால் விஷயாந்தரப்ராவண்யம் தொலையும் படியான நல்வழியைத் தெரிந்து கொண்டே னென்பதாம். ... *

---

ஸ்ரீ:

அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருவடிகளே சரணம்

# ஞானஸாரம்

ஊன வுடற்சிறைநீத்து ஒண்கமலை கேள்வனடித்
தேனுகரு மாசைமிகு சிந்தையராய்த்—தானே
பழத்தால் வீழுங்கனிபோல் பற்றற்று வீழும்
விழக்காடே தானருளும் வீடு. 1

| | | | |
|---|---|---|---|
| ஊன உடல் சிறை நீத்து | மாம்ஸமயமான வுடலாகிற சிறையில் நின்றும் விடுபட்டு | பழுத்தால் தானே வீழும் கனி போல் | பழுத்து (க் கிளையில் தங்கியிருக்க முடியாமல்) தானே விழுகிற பழம் போன்று |
| ஒண் கமலைகேள்வன் அடி தேன் நுகரும் ஆசை மிகு சிந்தையர் ஆல் | ஸ்ரீமஹாலக்ஷ்மீபதியின் திருவடித் தேனையநுபவிக்க வேணுமென்னுமாசை மிகுந்த மனமுடையவர்களாய்க் கொண்டு | பற்று அற்று வீழும் விழக்காடே தான் | (உபாயாந்தரங்களிலும் உபேயாந்தரங்களிலும்) ஸங்கமற்று விழும் விழுகைதான் |
| | | வீடு அருளும் | மோக்ஷப்ராபகமாகும். |

* * *—ஆர்த்தப்ரபத்தி யென்றும் த்ருப்தப்ரபத்தி யென்றும் ப்ரபத்தி இருவகையாகச் சொல்லப்படுகிறது. தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தை இசைந்திருக்குமதிகாரி செய்யும் ப்ரபத்தி த்ருப்தப்ரபத்தியாம். அவ்வளவு விலம்பத்தைப் பொறுக்கவில்லாதே சடக்கென வீடுபெற விரும்பி நிற்கும் அதிகாரி செய்யும் ப்ரபத்தி ஆர்த்தப்ரபத்தியாம். இவ்விருள் தருமா ஞாலத்தில் ஒரு நொடிப்பொழுதும் இருப்பு ஸஹிக்க முடியாமையே ஆர்த்தப்ரபத்திக்கு அடியாகிறது. மரத்தில் காய் காய்த்து அது பழமாகப் பரிணமிக்கிறது; அந்தப் பழமானது மரத்தில் தங்கி நிற்குமளவு ஒன்றுண்டு; அந்த அளவு கடந்தால் தானாகவே மரத்தை விட்டு நழுவிக் கீழேவிழும்படியைக் காணாநின்றோம். இவ்வண்ணமாகவே இந்நிலத்தில் தங்கியிருக்குமளவு கழிந்த வோர் அதிகாரியானவன் ஒரு க்ஷணமும் தரித்திருக்க முடியாமல் தானாகவே விழுகிற விழுகைதான் ஆர்த்தப்ரபத்தி யென்பது; அது வீட்டையருளும்—என்றதாயிற்று.

ஸநத்குமாரஸம்ஹிதையில்—* यदा परानन्वयिभिः दुश्शकः स्मृतिभिर्विना। तेन तत्पुरतः पातः सा प्रपत्तिस्तदा भवेत्—யதா பராநந்வயிபி: துச்சக: ஸ்ம்ருதிபிர், விநா, தேந தத்புரத: பாதஸ் ஸா ப்ரபத்திஸ் ததா பவேத் *என்றுள்ள ச்லோகம் இப்பாசுரத்திற்கு மூலமாயிருக்கும். இதன் பொருளாவது—[பர அநந்வயிபி:] இப்பதம் (ஸ்ம்ருதிபி:) என்று மேலுள்ள விசேஷ்யத்தில் அந்வயிக்கும் விசேஷணமாகையாலே ஸ்த்ரீலிங்கமான வதற்குச் சேர (பராநந்வயிநீபி:) என்று இதுவும் ஸ்த்ரீலிங்கமாக இருக்கவேணும்: அப்படியில்லாமை "ஆர்ஷத்வாத் ந தோஷ:" என்கிற கட்டளையிலே அதுஷ்டமாகவே கொள்ளத்தக்கது. பராநந்வயிபிঃ ஸ்ம்ருதிபிர் விநா துச்சக:—இதர விஷயங்களிலே அந்வயமற்ற சிந்தனைகளில்லாமல் இந்நிலத்தில் தரித்திருக்க முடியாதவனாய் என்றபடி. விஷயாந்தர ஸ்மரண லேசமுமின்றிக்கே எம்பெருமானொருவனையே சிந்தித்து நிற்க வேண்டும்படியான தசை பிறந்தவனாக என்று கருத்து. இப்படிப்பட்டவனாக, யதா—எப்போது ஆகிறானோ; ததா—அப்போது, தேந— तादृशदशाविशेषेण என்றபடி. அப்படிப்பட்ட நிலைமையோடு. தத்புரத: பாத:—எம்பெருமான் திருமுன்பே விழுகை யென்பது யாதொன்றுண்டோ, ஸா ப்ரபத்தி: பவேத்— அதுதான் ப்ரபத்தியாகும் என்றபடி. இந்த ச்லோகத்தின் பொருள் இப்பாசுரத்திலே காணத்தக்கது. "ஊனவுடற் சிறை நீத்து ஒண்கமலை கேள்வனடித் தேனுகரு மாசைமிகு சிந்தையினால்" என்கிற (இப்பாட்டின்) முன்னடியும் மேலெடுத்த ச்லோகத்தின் பூர்வார்த்தமும் பர்யாயமாயிருக்கும்.

தானே பழுத்தால் விழுங்கனி போல்:—பழுத்தால் தானே விழுங்கனிபோல் என்று யோஜிப்பது. சில பழங்கள் கீழே விழாமல் மரக்கிளையிலேயே யிருக்கக் கண்டோமாகில் இன்னமும் முற்றப் பழுக்கவில்லை யென்றெ நினைக்கநேரும். முற்றப் பழுத்தபின் ஒரு க்ஷணமும் கிளையில் தங்காதென்பது சொல்லவேண்டா. அதுபோலவே, ஆர்த்தியின் பரிபாகம் சரமாவஸ்தையளவாக முதிர்ந்த பின்பு ஒரு க்ஷணமும் இங்நிலத்தில் இருப்பு அரிதாகி ஆர்த்தப்ரபத்தி செய்யுமளவில் * आर्तेष्वाशुफला–ஆர்த்தேஷு ஆசுபலா* என்கிற ந்யாஸ திலகஸூக்திப்படியே கடுகப்பலன் கைபுகும் என்றதாயிற்று. ... 1

நரகும் சுவர்க்கமும் நாண்மலராள் கோனைப்
பிரிவும் பிரியாமையுமாய்த்—துரிசற்றுச்
சாதகம்போல் நாதன் தனதருளே பார்த்திருத்தல்
கோதி லடியார் குணம். 2

| | | | |
|---|---|---|---|
| நாள் மலராள் கோனை பிரிவு நரகு ஆய் | திருமாலைப் பிரிந்திருத்தல் நரகமாகவும் | சாதகம் போல் | சாதக பக்ஷியானது மேகத்தையே எதிர்பார்த்திருப்பதுபோல |
| பிரியாமை சுவர்க்கம் ஆய் | பிரியாமல் கூடியிருத்தல் ஸ்வர்க்கமாகவும் பெற்று | நாதன் தனது அருளே பார்த்திருத்தல் | எம்பெருமானுடைய திருவருளொன்றையே நிரீக்ஷித்திருப்பதானது |
| துரிசு அற்று | இப்படிப்பட்ட ப்ரேமத்தை உபாயமாகக் கொள்ளுகையாகிற தோஷமின்றிக்கே | கோது இல் அடியார் குணம் | குற்றமற்ற சேஷபூதர்களின் இயல்வு. |

* * *—*यस्त्वया सह स स्वर्गो निरयो यस्त्वया विना—யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா* என்கிற ஸ்ரீராமாயண (அயோ-30-23.) ச்லோகத்தை யுட்கொண்டு முன்னடிகளும், * प्रपन्नश्चातको यद्वत्प्रपत्तव्यः कपोतवत्। रक्ष्यरक्षकयोरेतल्लक्ष्यं लक्षणमेतयोः—ப்ரபந்நச் சாதகோ யத்வத் ப்ரபத்தவ்ய: கபோதவத், ரக்ஷ்ய ரக்ஷகயோரேதத் லக்ஷ்யம் லக்ஷணமேதயோ:* என்கிற பகவச் சாஸ்த்ரவசனத்தை யுட்கொண்டு பின்னடிகளும் பேசப்பட்டன. பெருமாள் காட்டுக்குப் புறப்படுகிறபோது பிராட்டியை நிறுத்திப் போவதாகநினைத்து வார்த்தையருளிச் செய்தவளவிலே பெருமாளை நோக்கிப் பிராட்டி சொன்னது [யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்க: நிரயோ யஸ் த்வயா விநா] உம்மோடு கூடியிருப்பது தான் ஸ்வர்க்கம்; உம்மைப் பிரிந்திருப்பது தான் நரகம் என்று. இப்படி உறுதிகொண்டிருப்பதுதான் பரம பக்தனுடைய படியாகும். நாண் மலராள் கோனைப் பிரிவு நரகு; (அவனைப்) பிரியாமை சுவர்க்கம் என்றது முன்னடிகளில். * प्रपन्ने चातकन्यायः—ப்ரபந்நே சாதகந்யாய:* என்கிறவர்த்தம் பின்னடிகளிலுறையும். * एकः कृती शकुन्तेषु योऽन्यं शक्रान्न याचते—ஏக: க்ருதீ சகுந்தேஷு யோந்யம் சக்ராத் ந யாசதே* என்கிறபடியே சாதகபக்ஷியானது மேகத்தையேஎதிர்பார்த்திருப்பதுபோல, ப்ரபந்நனும் களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்* என்றும் *உனக்குப் பணி செய்திருக்குந்தவமுடையேன் இனிப்போயொருவன்றனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின் சாயையழிவு கண்டாய்* என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானருளையே யெதிர்பார்த்திருக்கவேணும். ஆக, எம்பெருமானைப் பிரிந்துகிடப்பதை நரக ப்ராயமாக நினைப்பதும் அவனதருளையே பார்த்திருப்பதும் பரமபக்தர்களின் லக்ஷணமென்றதாயிற்று. ... ... ... 2

ஆனை யிடர்கடிந்த ஆழியங்கை யம்புயத்தாள்
கோனைவிடில் நீரிற் குதித்தெழுந்த—மீனெனவே
ஆக்கை முடியும் படிபிறத்த லன்னவன்தாள்
நீக்கமிலா வன்பர் நிலை. 3

| | | | |
|---|---|---|---|
| ஆனை இடர் கடிந்த ஆழி அம் கை | கஜேந்திராழ்வானுடைய துன்பத்தைப்போக்கின திருவாழியை அழகிய திருக்கையிலேயுடைய | நீரின் குதித்து எழுந்த மீன் எனவே | நீரைவிட்டுக்கிளம்பியெழுந்த [நீரைப்பிரிந்த] மீன்போல |
| | | ஆக்கை முடியும் படி பிறத்தல் | உடல் முடியும்படியான நிலைமை விளைதல் |
| அம்புயத்தாள் கோனை விடில் | திருமாலை விட்டுப்பிரிந்தால் | அன்னவன் தாள் நீக்கம் இலா அன்பர் நிலை | அப்பெருமானுடைய திருவடிகளைவிட்டு நீங்கல் இல்லாத பரமபக்தர்களின் இயல்வாம். |

* * *—ஸ்ரீராமாயணத்தில் இளையபெருமாளுடைய வார்த்தை [அயோ—53. 31.] *न च सीता त्वया हीना न चाहमपि राघव। मुहूर्तमपि जीवावो जलान्मत्स्याविवोद्धृतौ—ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யா விவோத்த்ருதௌ* என்பது. இதனால், எம்பெருமானைப் பிரிந்தவாறே நீரைவிட்டுப் பிரிந்த மீன்போல் துடிப்பது பரமபக்தனுடைய லக்ஷணமென்று சிக்ஷிதமாகிறது. இதனையுட்கொண்டது இப்பாசுரம். *மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த கானமர்வேழம் கையெடுத்தலறக் கராவதன்காலினைக் கதுவ ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்றாழி தொட்ட திருமால் பக்தர்களிடத்து அன்பே நிரூபகமானவன்—என்றறிந்து அத்திருக் குணத்திலே யீடுபட்டு அப்பெருமானைவிட்டுப் பிரிந்தால் நீரைவிட்டுப் பிரிந்த மீன்படும்பாடுபடுமதே மெய்யன்பர்களின் நிலை என்றதாயிற்று. ... ... ... 3

மற்றொன்றை யெண்ணாதே மாதவனுக் காட்செயலே
உற்றதிதுவென் றுளந்தெளிந்து—பெற்ற
பெரும்பேற்றின் மேலுளவோ பேறென் றிருப்பார்
அரும்பேறு வானத் தவர்க்கு. 4

| | | | |
|---|---|---|---|
| மற்று ஒன்றை எண்ணாதே | (பகவத்கைங்கர்யமல்லது) வேறொன்றை நெஞ்சிலும் நினையாமல் | பெற்ற பெரு பேற்றின் மேல் பேறு உளதோ என்று இருப்பார் | (பகவத் கைங்கரியம் பெற்றால்) அப்படி பெற்ற மஹாபுருஷார்த்தத்திற்கு மேலே ஒரு புருஷார்த்தமுண்டோ என்று அத்யவஸாயங்கொண்டிருக்குமவர்கள் |
| மாதவனுக்கு ஆட் செயல் இதுவே உற்றது என்று உளம் தெளிந்து | திருமாலுக்கு அடிமைத் தொழில் செய்வதொன்றே ஸ்வரூபாநுரூபமென்று மனந் தேறி | வானத்தவர்க்கு அரு பேறு | நித்யஸூரிகளுக்கு அலப்யலாபமாயிருப்பார்கள். |

* * * —ஸ்ரீ சாஸ்த்ரத்தில் * ये ब्रह्मन् भगवद्दास्यभोगैकनिरतास्सदा। ते प्रियातिथयः प्रोक्ताः श्रीवैकुण्ठनिवासिनाम्—யே ப்ரஹ்மந்! பகவத் தாஸ்யபோகைகநிரதாஸ் ஸதா, தே ப்ரியாதிதய: ப்ரோக்தா: ஸ்ரீவைகுண்ட நிவாஸிநாம்* என்றுள்ள வசனத்தையுட்கொண்டு அருளிச் செய்ததாமிப்பாசுரம். இந்த ச்லோகத்தினிரண்டாம் பாதத்திலுள்ள ஏக சப்தத்தை விவரிக்கிறது பாசுரத்தினடியில் * மற்றொன்றையெண்ணாதே * என்பது. மாதவனுக்கு ஆட்செய்வதே ஸ்வயம் ப்ரயோஜநமென்று கொண்டு ப்ரயோஜநாந்தரத்தை விரும்பாதே பகவத் கைங்கர்யத்தைப்பண்ணி 'இதனில் மிக்கோர் புருஷார்த்த முண்டோ?' என்று உகந்திருக்குமவர்கள் வைகுண்டவாஸிகளான நித்யமுக்தர்களுக்கு அலப்யலாபமாவர்கள். அவர்களுக்குத் திருநாடு திண்ணமென்றபடி. ... 4

தீர்த்தமுயன் ருடுவதும் செய்தவங்கள் செய்வனவும்
பார்த்தனைமுன் காத்தபிரான் பார்ப்பதன்முன்—சீர்த்துவரை
மன்னனடி யோமேன்னும் வாழ்வுநமக் கீந்ததற்பின்
என்னகுறை வேண்டு மினி. 5

| | | | |
|---|---|---|---|
| ூயன்று தீர்த்தம் ஆடுவதும் | பலக்ஷேத்திரங்களுக்குச்செல்லுகையாகிற முயற்சிகளைச் செய்து புண்ய தீர்த்தங்களில் நீராடுவதும் | சீர் துவரை மன்னன் | ஸ்ரீமத் த்வாரகாநாதனை அக் கண்ணபிரான் |
| ெசய் தவங்கள் செய்வனவும் | ஊன்வாட வுண்ணுதுயிர் காவலிட்டுச் செய்யும் தவங்கள் செய்வதும் | அடியோம் என்னும் வாழ்வு நமக்கு ஈந்ததற்பின் | அடிமைச் செல்வத்தை நமக்கு அருளின பின்பு |
| ூன் பார்த்தனை காத்தபிரான் பார்ப்பதன் முன் | முன்பு அர்ஜுனனைக் காத்தருளினவனை கண்ணபிரானுடைய கடாக்ஷலாபத்திற்கு முன்னம் எற்குமத்தனை ; | இனி வேண்டும் குறை என்ன | இனி என்ன குறையுள்ளது. (தீர்த்தங்களாடவும் தவம் புரியவும் வேண்டா வென்கை.) |

* * * तावद्गच्छेत्तु तीर्थानि सरितश्च सरांसि च। यावन्नाभूच्च भूपाल! विष्णुभक्तिपरं मनः—தாவத் கச்சேத் து தீர்த்தாநி ஸரிதச் ச ஸராம்ஸி ச, யாவந் நாபூச்ச பூபால! விஷ்ணு பக்திபரம் மந:* என்று ஸ்ரீ விஷ்ணு தர்மத்திலும், * किं तस्य दानैः किं तीर्थैः किं तपोभिः किमध्वरैः। यो नित्यं ध्यायते देवं नारायणमनन्यधीः—கிம் தஸ்ய தாநை: கிம் தீர்த்தை: கிம் தபோபி: கிமத்வரை:, யோ நித்யம் த்யாயதே தேவம் நாராயணமநந்யதீ:* என்று இதிஹாஸஸமுச்சயத்திலுமுள்ள வசனங்களையுட்கொண்டு அருளிச்செய்ததா மிப்பாசுரம். பார்த்தனை முன் காத்தபிரான் என்றது—கீதையையும் அதன் ஸாரமான சரமச்லோகத்தையும் உபதேசித்து அர்ஜுநனை * ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ * என்னப் பண்ணினவன் என்றபடி. அவன் பார்ப்பதன் முன்வரைக்குமே தீர்த்தமுயன்ருடுவதும் செய்தவங்கள் செய்வனவும்—என்றது, சரமச்லோகார்த்த நிஷ்டை உண்டாகுமளவுமே அந்த ப்ரவ்ருத்திகளுக்கு அவகாச முள்ளது; அதன் பிறகு * यमो वैवस्वतो राजा यस्तवैष हृदि स्थितः। तेन चेदविवादस्ते मा गङ्गां मा कुरून् गमः—யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி ஸ்தித:, தேந சேத் அவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கம:* என்கிறபடியே க்ஷேத்ர தீர்த்த பர்யடநத்திலாவ தொன்றுமில்லை என்றபடி. [சீர்த்துவரை மன்னன் அடியோமென்னும் வாழ்வு நமக்கு ஈந்ததற்பின்] என்றது— *அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:* என்றருளிச்செய்து நம்மை வாழ்வித்தபின்பு என்றபடி. இது அர்ஜுனனை நோக்கி அருளிச்செய்ததாயினும் அவனை வியாஜமாகக் கொண்டு எல்லார்க்குமாக அருளிச் செய்ததாகவன்றே பரமார்த்தமுள்ளது. * செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பர் * என்கிறபடியே இவ்வாசிரியர்தாமும் அதற்கு அதிகாரியாகையாலே *வாழ்வு நமக்கீந்ததற்பின் என்ன குறைவேண்டு மினி * என்றருளிச்செய்யக் குறையில்லை. இப்பாசுரத்தை அநுஸந்திப்பவர்களும் அதிகாரிகளாய்க் குறையற்றவர்களாவர். 5

... ...

புண்டரிகை கேள்வ னடியாரப் பூமிசையோன்
அண்ட மோருபோருளா வாதரியார்—மண்டி
மலங்கவோரு மீன்புரண்ட மாத்திரத்தா லார்த்துக்
கலங்கிடுமோ முந்நீர்க் கடல். 6

| | | | |
|---|---|---|---|
| புண்டரிகை கேள்வன் அடியார் | திருமாமகள் கணவனுடைய அடியார்களான பாகவதோத்தமர்கள் | ஒருமீன் மண்டி மலங்க புரண்ட மாத்திரத்தால் | ஒரு மீனனது ஆழ விழிந்து கீழும் மேலுங் கலக்க வேணுமென்று புரண்டவளவால் |
| அப்பூமிசையோன் அண்டம் | அப்பிரமனுடைய அண்டத்தை | முந்நீர் கடல் | மூவகை நீரையுடைய கடலானது |
| ஒரு பொருளா ஆதரியார் | ஒரு சரக்காகவே மதிக்க மாட்டார்கள் ; | ஆர்த்து கலங்கிடுமோ | நிலைமாறி யொலித்துக் கலங்குமோ ? |

* * *— * ब्रह्माण्डमण्डलीमात्रं किं लोभाय मनस्विन । शफरीस्फुरितेनाब्धेः क्षुब्धता नैव जायते— ப்ரஹ்மாண்ட மண்லீமாத்ரம் கிம் லோபாய மநஸ்விநः, சபரீஸ்புரிதேநாப்தேः க்ஷுப்ததா நைவ ஜாயதே* என்கிற வசனத்தையுட்கொண்டு இப்பாசுரமருளிச் செய்தது. உண்மையான பகவத் பக்தர்கள் மஹத்தான ஐச்வரியத்தையும் ஒரு பொருளாக மதிக்க மாட்டார்கள். ப்ரஹ்மாண்டைச்வர்யமென்பது ப்ராக்ருதர்களுக்குப் பெரிதாகத் தோற்றினாலும் பகவத்பக்தர்கள் அதை ஒரு க்ஷுத்ரவஸ்துவாக நினைப்பர்களே யல்லது பெரிய வஸ்துவாக நினையார்கள். அந்த ப்ரஹ்மாண்டைச்வர்யத்தை இவர்கள்தாம் விரும்பாதொழிந்தாலும் அது இவர்களுடைய உள்ளத்தைக் கலக்கமாட்டாதோ வென்னில் ; மஹத்தான தத்வமாகிய ஸமுத்திரத்தை ஒரு க்ஷுத்ரமத்ஸ்யம் கலக்கவல்லதோ ? அந்த க்ஷுத்ர ஜந்து எத்தனை கோலாஹலங்கள் செய்தாலும் கடல் சிறிதும் கலக்கமுறுவதில்லையன்றோ. அதுபோலவேயாம் இதுவும் என்றதாயிற்று. பக்தர்கள் கடலின் ஸ்தானத்திலும், ப்ரஹ்மாண்டைச்வர்யம் ஒரு சிறுமீன் ஸ்தானத்திலும் கொள்ளப்பட்டதென்க. புண்டரிகை கேள்வன்—லக்ஷ்மீபதி. தாமரைக்கு வாசகமான கமலமென்னும் சொல் கமலா என்றும், பத்மமென்னுஞ் சொல் பத்மா என்றும் பிராட்டியைக் குறிப்பது போல, தாமரைக்கு வாசகமான புண்டரீகமென்னுஞ் சொல்லும் 'புண்டரீகா' என்று பிராட்டியைக் குறிப்பதாகத் தமிழ் மரபு. இது ஸம்ஸ்க்ருத மர்யாதைக்குச் சேர்ந்ததன்று. கோகனகை, சரோருகை, அரவிந்தை என்னுஞ் சொற்களால் பிராட்டியைக் குறிப்பது தமிழ்நூற்களில் மாத்திரமே கண்டதாகும்.

முந்நீர்—ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்று மூவகை நீரையுமுடையது கடல்; தந்நகரமாகக் கொள்ளாமல் றன்னகரமாக (அதாவது முன்னீர் என்று) கொள்வதுமுண்டு; அப்போது *अप एव ससर्जादौ—அப ஏவ ஸஸர்ஜாதௌ* என்கிற ப்ரமாணத்தின்படி ஸ்ருஷ்டியில் முற்பட்ட நீர் என்றதாகும் ; முன் நீர் - முன்னீர். இச்சொல்லே கடலைக் குறிப்பதாயிருக்க 'முந்நீர்க் கடல்' என்றது 'கரிகலபம்' என்னுமாபோலே. 6

தோளார் சுடர்த்திகிரி சங்குடைய சுந்தரனுக்கு*
ஆளானார் மற்றொன்றி லன்புசெயார்—மீளாப்
பொருவரிய விண்ணாட்டிற் போகம் நுகர்வார்க்கு*
நரகன்றோ இந்திரன்தன் நாடு. 7

| | | | |
|---|---|---|---|
| தோள் ஆர் சுடர் திகிரி சங்கு உடைய சுந்தரனுக்கு | திருத்தோள்களோடு சேர்ந்து விளங்குகின்ற திருவாழி திருச்சங்குகளையுடைய அழகியானுக்கு | மீளா பொருவு அரிய விண்நாட்டில் போகம் நுகர்வார்க்கு | மீட்சியற்றதாய் ஒப்பற்றதாய் அரிதான திருநாட்டிலே பேரின்பமநுபவிக்கக் குதூஹலமுடையவர்களுக்கு |
| ஆள் ஆனார் | அடிமைப்பட்டவர்கள் | | |
| மற்று ஒன்றில் அன்பு செயார் | அவ்வடிமைக்கு மாறான எதிலும் ஆதரம் செய்யமாட்டார்கள் ; | இந்திரன் நாடு நரகு அன்றோ | ஸ்வர்க்க லோகம் நரகப்ராயமன்றோ. |

* * *—*तत्पदं प्राप्तुकामा ये विष्णोस्तेषां महात्मनाम् । भोगाः पुरन्दरादीनां ते सर्वे निरयोपमाः—தத் பதம் ப்ராப்துகாமா யே விஷ்ணோஸ் தேஷாம் மஹாத்மநாம், போகாः புரந்தராதீநாம் தே ஸர்வே நிரயோபமாः.* என்கிற ப்ரஹ்மாண்ட புராணவசனத்தை யுட்

கொண்டு அருளிச்செய்ததாம் இந்தப்பாசுரம். கீழ்ப்பாட்டின் முன்னடிகளின் கருத்தும் இப்பாட்டின் முன்னடிகளின் கருத்தும் ஒருவாறு ஒற்றுமைப்பட்டிருந்தாலும் பின்னடிகளின் பொருளில் வேற்றுமை காண்க. உட்கொண்ட ப்ரமாணவசனத்தை யடியொற்றின மொழிபெயர்ப்பு எம்பெருமான் திருவாழியும் திருச்சங்குமேந்தி நிற்கு மழகிலே யீடுபட்டவர்கள் அஃதொழிந்த மற்றெதிலும் அன்பு பாராட்டமாட்டார்கள்; அப்ராக்ருதமாய் அதிமநோஹரமாயிருக்கும் விஷயத்தின் வாசியறிந்து அதிலே தோற்றிருக்குமவர்கள் மிகவும் ஆபாஸமாய் அவிலக்ஷணமாயிருக்கின்ற ப்ராக்ருத விஷயங்களை விரும்புவார்களோ? *மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே* என்னும்படி ஸித்தமாயிருக்கின்ற விண்ணாட்டி லநுபவத்திலே ருசியுள்ளவர்களுக்கு இஹலோக போகம் நரகப்ராயமன்றோ. ... ... ... 7

முற்றப் புவனமெலா முண்ட முகில்வண்ணன்
கற்றைத் துழாய்சேர் கழலன்றி—மற்றொன்றை
இச்சியா வன்பர்தனக் கேங்ஙனே செய்திடினும்
உச்சியா லேற்கு முகந்து. 8

புவனம் எலாம் முற்ற உண்ட — ஸகல லோகங்களையும் பூர்த்தியாகத் திரு வயிற்றிலே வைத்து நோக்கின
முகில்வண்ணன் — காளமேக நிறத்தனான பெருமானுடைய
கற்றை துழாய் சேர் கழல் அன்றி — திருத்துழாய்த் தார்கள் சேர்ந்த திருவடிகள் தவிர
மற்று ஒன்றை இச்சியா அன்பர் — வேறு எதையும் விரும்பாத பக்தர்கள்
தனக்கு எங்ஙனே செய்திடினும் — எம்பெருமானாகிய தனக்கு எதை எவ்விதமாகச் செய்தாலும்
உகந்து உச்சியால் எற்கும் — திருவுள்ள முகந்து சிரஸா வஹிப்பன் (அப்பெருமான்).

* * *— மஹாபாரதத்தில் மோக்ஷதருமத்தில் * याः क्रियास्संप्रयुक्तास्स्युरेकान्तगतबुद्धिभिः । तास्सर्वाः शिरसा देवः प्रतिगृह्णाति वै स्वयम् —யாஃ க்ரியாஸ் ஸம்ப்ரயுக்தாஸ் ஸ்யுஃ ஏகாந்த கத புத்திபிஃ, தாஸ் ஸர்வாச் சிரஸா தேவஃ ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம் * என்றுள்ள ச்லோகத்தை யடியொற்றிப் பணித்ததாமிப்பாசுரம். உண்மையான பக்தர்கள் இடுமதையெல்லாம் எம்பெருமான் தன் திருமுடியாலே ஏற்றுக்கொள்ளுகிறானென்பதே மேற்குறித்த ச்லோகத்திற்கும் பாட்டுக்கும் கருத்து. ப்ரளயத்திலழியாமே ஸகலலோகங்களையும் திருவயிற்றிலே வைத்து நோக்கின நீலமேகச்யாமலனான எம்பெருமானுடைய திருவடிகளைத் தவிர மற்றொன்றை விரும்பாத பக்தர்கள் வகுத்த சேஷிக்கு அடிமை செய்யுமிடத்தில் ப்ரேமபரவசராய்க் கொண்டு அக்ரமமாகவாதல் ஸக்ரம மாகவாதல் எப்படி செய்தாலும் திருவுள்ளமுகந்து சிரஸா வஹித்தருள்வன் அப்பெருமான். இவன் காலாலே போகட்டவற்றை அவன் தலையாலே ஏற்குமென்று விவக்ஷிதம். ... 8

ஆசி லருளா லனைத்துலகுங் காத்தளிக்கும்
வாசமலராள் மணவாளன் — தேசுபோலி
விண்ணாட்டிற் சால விரும்புமே, வேறொன்றை
யெண்ணாதார் நெஞ்சத் திருப்பு, 9

ஆசு இல் அருளால் — குற்றமற்ற கருணையினாலே
அனைத்து உலகும் காத்து அளிக்கும் — எல்லாவுலகங்களையும் ரக்ஷித்தருளாநின்றவனும்
வாசம் மலராள் மணவாளன் — நறுமணம் மிக்க தாமரை மலரில் தோன்றிய பிராட்டிக்குக் கொழுநனுமான எம்பெருமான்
வேறு ஒன்றை எண்ணாதார் நெஞ்சத்து இருப்பு — தன்னைத்தவிர்த்து வேறொன்றை யெண்ணாதவர்களான பரமைகாந்திகளினுள்ளத்தில் வஸிப்பதை
விண் நாட்டில் சால விரும்பும் — திருநாட்டில் வஸிப்பதைவிட மிகவுமுத்தேச்யமாகக் கொள்வன்.

* * *— பகவச் சாஸ்த்ரத்தில் * येऽनन्यमनसः शुद्धा ये दास्यैकमनोरथाः। तेषां मे हृदयं विष्णोः वैकुण्ठात्परमं पदम् — யேऽநந்யமநஸச் சுத்தா யே தாஸ்யைகமநோரதா:, தேஷாம் மே ஹ்ருதயம் விஷ்ணோர் வைகுண்டாத் பரமம் பதம் * என்று எம்பெருமான் தானே சொல்லிவைத்தான்; அநந்யமநஸ்கர்களும் பரமபவித்திரர்களும அடிமை செய்வதொன்றிலேயே ஊக்கமுள்ளவர்களுமான பக்தர்களின் உள்ளமானது விஷ்ணுவானவெனக்கு ஸ்ரீவைகுண்டத்திற்காட்டிலும் சிறந்த ஸ்தானமாகு மென்பது ச்லோகத்தின் கருத்து; இதுவே கருத்துத் தான் பாசுரத்திற்கும். நிர்ஹேதுக கருணையாலே ஸமஸ்த லோகங்களையும் காத்தருளாநின்ற திருமால் அநந்ய பக்தர்களின் உள்ளத்தி லிருப்பைத் திருநாட்டில் வஸிப்பதிலுங்காட்டில் பரமபோக்யமாகக் கொள்ளுவனென்கை. [ஆசு இல் அருளால்] ஆசு என்று குற்றத்திற்குப் பெயர்; அருளுக்குக் குற்றமாவது ஸஹேதுகமாயிருத்தல்; அஃதில்லையெனவே நிர்ஹேதுக க்ருபை யென்றதாயிற்று. ... 9

நாளுமுலகை நலிகின்ற வாளரக்கன்
தோளுமுடியும் துணித்தவன்றன்—தாளில்
பொருந்தாதா ருள்ளத்திற் பூமடந்தை கேள்வன்
இருந்தாலு முண்மே லிருப்பு. 10

| | | | |
|---|---|---|---|
| பூமடந்தை கேள்வன் | லக்ஷ்மீபதியான எம்பெருமான், | பொருந்தாதார் உள்ளத்தில் இருந்தாலும் | பொருத்தமற்ற பாபிகளின் நெஞ்சிலே இருந்தாலும். |
| உலகை நாளும் நலிகின்ற வாள் அரக்கன் | உலகங்களையெல்லாம் இடைவிடாது நலிந்து கொண்டிருந்த இராவணனுடைய | | |
| தோளும் முடியும் துணித்தவன் தன் தாளில் | தோள்களையும் தலைகளையும் துணித்தவனான தன்னுடைய திருவருடிகளில். | முள் மேல் இருப்பு | (அவ்விருப்பானது) முள் மேலிருப்பது போலாகும். |

* * *—ப்ரஹ்மாண்டபுராணத்தில்— * भगवच्चरणद्वंद्वे भक्तिर्येषां न विद्यते। तेषां हृदि स्थितो देवः कण्टकाग्र इव स्थितः— பகவச்சரணத்வந்த்வே பக்திர் யேஷாம் ந வித்யதே, தேஷாம் ஹ்ருதி ஸ்திதோ தேவ: கண்டகாக்ர இவ ஸ்தித: * என்று சொல்லிற்று. எம்பெருமான் தனது திருவடியிணையில் பக்தியில்லாதாருடைய நெஞ்சில் எழுந்தருளியிருந்தாலும் அவ்விருப்பு முள்மேலிருப்புப் போன்றதேயென்பது ச்லோகத்தின கருத்து. இதுவேதான் இப்பாசுரத்தின் கருத்தும். சிவனையுபாஸித்து அவன் பக்கலிலே வாளைப்பெற்று அந்தச் செருக்கினால் அநவரதமும் உலகை நலிந்து கொண்டிருந்த லங்கேச்வரனுடைய தோள்களையும் தலைகளையும் துணித்தவனான திருமகள்கொழுநன் தனது திருவடிகளில் ஆதரமற்றவர்களின் நெஞ்சில் பொருந்தவேமாட்டான்; ஸர்வவ்யாப்திஸித்திக்காக அங்கும பொருந்தினாலும் முள்மேலிருப்பாகவே காணுமிருப்பது —என்றாராயிற்று. ... ... ... ... 10

தன்பொன் னடியன்றி மற்றொன்றில் தாழ்வுசெய்யா
அன்பருகந் திட்ட தணுவேனினும்—பொன்பிறழும்
மேருவாய்க் கொள்ளும் விரையார் துழாயலங்கல்
மாரிமாக் கொண்டனிகர் மால். 11

| | | | |
|---|---|---|---|
| விரை ஆர் துழாய் அலங்கல் | பரிமளம் மிக்க திருத்துழாய் மாலையையணிந்துள்ளவனும் | மாரி மா கொண்டல் நிகர் மால் | கார் காலத் தெழுகின்ற காளமேகத்தை யொத்தவனுமான எம்பெருமான் |

| | | | |
|---|---|---|---|
| தன் பொன் அடி அன்றி மற்று ஒன்றில் தாழ்வு செய்யா அன்பர் | தனது திருவடிகளைத் தவிர்த்து வேறொன்றில் கால்தாழாத பக்தர்கள் | உகந்து இட்டது அணு எனினும் | அன்போடு ஸமர்ப்பிக்குமது அணுவானாலும் |
| | | பொன் பிறழும் மேரு ஆய்க் கொள்ளும் | பொன்னாக விளங்குகின்ற மேரு மலையாகவே அதனைத் திருவுள்ளம் பற்றுவன். |

* * *— பௌஷ்கரஸம்ஹிதையில் — * भक्तैरण्वप्युपानीतं प्रेम्णा भूर्यैव मे भवेत्। भूर्यप्यभक्तोपहृतं न मे तोषाय कल्पते — பக்தைரண்வப்யுபாநீதம் ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத், பூர்யப்யபக்தோபஹ்ருதம் ந மே தோஷாய கல்பதே * என்று பகவான் தன்னுடைய திருவாக்கு உள்ளது. [இந்த வசனம் ஸ்ரீபாகவதத்திலும் காண்கிறது.] பக்தர்கள் பக்தியுடனே அணுவளவு இட்டாலும் அது எனக்கு மிகப் பெரிதாகவே தோற்றும்; பக்தியற்றவர்கள் மிகப்பெரிதாக இட்டாலும் அதனால் நான் உகக்கமாட்டேனென்கிறான் எம்பெருமான். இப்பாசுரத்தின் கருத்து மிதுவேயாகும். மேற்குறித்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தை மாத்திரமே பாசுரமாக்கியுள்ளார்; உத்தரார்த்தத்தின் கருத்து தன்னடையே பெறலாகுமென்று. அடுத்த மேற்பாசுரமும் குறிக்கொள்ளத் தக்கது.

"விரையார் துழாயலங்கல் மாரிமாக் கொண்டல் நிகர் மால்" என்றதில் விசேஷணமும் விசேஷ்யமும் கருத்தோடு கூடியது. ஒரு திருத்துழாய்த் தளத்தினால் த்ருப்தியடையக் கூடியவன் என்று காட்டுகிறது விசேஷணம். மேகம் எப்படி கொடுக்கப் பிறந்ததோ அப்படி எம்பெருமானும் கொடுக்க விருப்ப முடையவனேயன்றிக் கொள்ள விருப்ப முடையவனல்லன் என்னுங் கருத்தைத் தெரிவிக்கின்றது விசேஷ்யம். இப்படிப்பட்ட எம்பெருமான் தன திருவடியல்லது மற்றொன்றில் கால் தாழாத அன்பர் உகப்புடனே இடுமது அணுவளவிற்றே யானாலும் அதனை மேருவாகக் கொள்வன் என்றதாயிற்று. குசேலமுனிவனிடத்துக் கண்ணபிரான் கூறியது காண்க. ... 11

மாறு யிணைந்த மருத மிறத்தவழ்ந்த
சேறு ரரவிந்தச் சேவடியைப்—பேறாக
உள்ளாதா ரொண்ணிதியை யீந்திடினும் தானுகந்து
கொள்ளான் மலர்மடந்தை கோன். 12

| | | | |
|---|---|---|---|
| மலர்மடந்தை கோன் | தாமரையாள் கேள்வனான எம்பெருமான், | பேறு ஆக உள்ளாதார் | சிறப்பாகச் சிந்திக்கமாட்டாதவர்கள் |
| மாறு ஆய் இணைந்த மருதம் இற தவழ்ந்த | தன்பால் பகைமை பூண்டு சேர்ந்து நின்ற இரட்டை மருத மரங்கள் இற்று விழும்படி தவழ்ந்த | ஒள் நிதியை ஈந்திடினும் | சீரிய நிதியை ஸமர்ப்பித்தாலும் |
| சேறு ஆர் அரவிந்தம் சே அடியை | (தன்னுடைய) பாத பங்கஜத்தை | தான் உகந்து கொள்ளான் | (அதனைத்) தான் விரும்பி ஏற்றுக் கொள்ளமாட்டான். |

* * *— * पृथिवीं रत्नसंपूर्णां यः कृष्णाय प्रयच्छति। तस्याप्यन्यमनस्कस्य सुलभो न जनार्दनः— ப்ருதிவீம் ரத்நஸம்பூர்ணாம் யஃ க்ருஷ்ணாய ப்ரயச்சதி, தஸ்யாப்யந்யமநஸ்கஸ்ய ஸுலபோ ந ஜநார்த்தநஃ * என்கிற ச்லோகமும், கீழ்ப்பாசுரத்திலுதாஹரித்த ச்லோகத்தின் உத்தரார்த்தமும இப்பாசுரமாகப் பரிணமித்தன வென்க. நெஞ்சு கனிந்திராமல் நவநிதிகளை யிட்டாலும் அவற்றை எம்பெருமான் கண்ணெடுத்துப் பாரான் என்றதாயிற்று.

மாருயிணைந்த மருத மிறத் தவழ்ந்தது க்ருஷ்ணவதாரத்தில் நடந்த யமளார்ஜுநபங்க சரித்திரத்தில், நாரத முனிவருடைய சாபத்தினால் நளகூபரன் மணிக்ரீவனென்கிற குபேர புத்திரர்களிருவரும் திருவாய்ப்பாடியில் இரட்டை மருத மரங்களாகத் தோன்றியிருந்தன ரென்றும், வெண்ணெய் களவுகண்ட குற்றத்திற்காக உரலிலே பிணைத்துக் கட்டப்பட்டிருந்த கண்ணபிரான் அவ்வுரலையு மிழுத்துக்கொண்டு தவழ்ந்து இவ்விரட்டை மரங்களினிடையே செல்லுகையில் உரலின் உறைதலால் அம்மரங்கள் முறிந்து விழுந்து சாபோபஹதர்களாயிருந்த யக்ஷகுமாரர்களிருவரும் சாபம் தீர்ந்து பகவானைத் துதித்து விடைபெற்றுச் சென்றன ரென்றும் புராணவரலாறு உள்ளது. இங்கு "மாருயிணைந்த மருதம்" என்று இவரருளிச் செய்வது *பொய்ம்மாய மருதான வசுரரைப் பொன்றுவித் தின்று நீ வந்தாய்* (பெரியாழ்வார் திருமொழி-3. 1. 3.) என்கிற அருளிச் செயலை யடியொற்றி யென்க. திருவாய்ப்பாடியில் எழும்பூண்டெல்லாம் அசுரப்பூண்டாகையாலே அஸுராவேசமில்லாத வஸ்து எதுவுமே யில்லையென்பது மங்களாசாஸனபரர்களான ஆழ்வார்களின் கொள்கை. இப்பாட்டின் இரண்டாமடியின் முடிவில் "பேருக, வேருக" என்பன பாடபேதங்கள். ... ... 12

பண்டே யுயிரனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே*
தொண்டா மெனத்தெளிந்த தூமனத்தார்க்கு—உண்டோ
பலகற்றும் தம்முடம்பைப் பார்த்தபிமா னிக்கும்
உலக த்தவரோ டுறவு. 13

| | |
|---|---|
| உயிர் அனைத்தும் | ஆத்ம வர்க்கங்களெல்லாம் |
| பண்டே | அநாதிகாலமாகவே |
| பங்கயத்தாள் நாயகற்கே தொண்டு ஆம் என தெளிந்த | திருமாலுக்கே சேஷப் பட்டதென்று தெளிவு பெற்றிருக்கின்ற |
| தூ மனத்தார்க்கு | பரிசுத்தமான மனமுடைய பக்தர்களுக்கு |
| பல கற்றும் தம் உடம்பை பார்த்து அபிமானிக்கும் உலகத்தவரோடு | பல சாஸத்ரங்களை யதிகரித்துங்கூட நாம் ஜாதியிற் சிறந்திருக்கிறோ மென்று செருக்குற்ற ப்ராக்ருதர்களோடு |
| உறவு உண்டோ | பொருத்தமுண்டோ? |

* * *—திருவயிந்திரபுரத்திலே வில்லிபுத்தூர்ப் பகவரென்று ஓர் உத்தமர் வாழ்ந்து வந்தார். அவர் அவ்வூரில் ஸ்வாமிகளெல்லாரும் அநுஷ்டாநம் செய்கிற துறையில் இறங்காமல் தமக்கென்று தனியேயொரு துறை வைத்துக் கொண்டு அதிலே அநுஷ்டானம் பண்ணிப் போவது வழக்கம். இப்படியிருக்க ஒருநாள் மற்றவர்கள் இவரை நோக்கி 'வாரீர்!, தேவரீர் தனியேயொரு துறையிற் செல்லுவானேன்? எங்கள் துறையிலேகூடி அநுஷ்டிக்கலாகாதோ?' என்று கேட்க; அதற்கு அவர் விடைகூறினர்:—" विष्णुदासा वयं यूयं ब्राह्मणा वर्णधर्मिणः । अस्माकं दासवृत्तीनां युष्माभिर्नास्ति संगतिः । नास्ति संगतिरस्माकं युष्माकं च परस्परम् । वयं तु किङ्करा विष्णोर्यूयमिन्द्रियकिङ्कराः—விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணதர்மிணஃ, அஸ்மாகம் தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாபிர் நாஸ்தி ஸங்கதிஃ. நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகஞ் ச பரஸ்பரம், வயம் து கிங்கரா விஷ்ணோர் யூயமிந்த்ரியகிங்கராஃ—" என்று. இதனால் அவர்களோடு தாம் உறவறுத்துக்கொண்டு பேசினரென்பது விளங்கும். * आविद्यः प्राकृतः प्रोक्तो वैद्यो वैष्णव उच्यते । आविद्येन न केनापि वैद्यः किञ्चित्समाचरेत्—ஆவித்யஃ ப்ராக்ருதஃ ப்ரோக்தோ வைத்யோ வைஷ்ணவ உச்யதே, ஆவித்யேந ந கேநாபி வைத்யஃ கிஞ்சித் ஸமாசரேத்.* என்று பகவச்சாஸ்த்ரங்களிலும் சொல்லிற்று. இவற்றின் பொருளே இப்பாட்டாக வடிவெடுத்திருக்கிறது. ஆசார்யஹ்ருதயத்தில் "ஸாதந ஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திகளென்று துறை வேறிடுவித்தது" என்கிற சூர்ணையும் அவ்

விடத்து வியாக்கியானமும் இங்கே அநுஸந்தேயம். திருமந்திரப்பொருளை நன்கு தெளியப்பெற்ற பரமைகாந்திகளுக்கு தேஹாத்மாபிமாநிகளோடே சேர்ந்து வாழ்வது பொருந்தாது என்றபடி. ... ... ... ... ... 13

பூதங்க ளைந்தும் பொருந்துடலி னாற்பிறந்த
சாதங்கள் நான்கினொடும் சங்கதமாம்—பேதங்கொண்
டென்ன பயன்பெறுவீ ரெவ்வுயிர்க்கு மிந்திரைகோன்
தன்னடியே காணுஞ் சரண். 14

| | | | |
|---|---|---|---|
| பூதங்கள் ஐந்தும் பொருந்து உடலினால் பிறந்த | பஞ்சபூதங்களின் சேர்க்கையான தேஹமடியாக வுண்டான | என்ன பயன் பெறுவீர் | என்ன பலனடையப் போகிறீர்கள்? |
| சாதங்கள் நான்கினொடும் | நான்கு ஜாதிகளோடும் | எவ் உயிர்க்கும் | எல்லாவாத்மாக்களுக்கும் |
| சங்கதம் ஆம் பேதம் கொண்டு | சேர்கின்ற பேதத்தைக் கொண்டு [ஜாதிப்ரயுக்தமான பேதத்தை பத்திபண்ணி] | இந்திரை கோன் தன் அடியே சரண் காணும் | திருமாலின் திருவடிகளே புகல் காண்மின். |

* * *—देहात्मज्ञानकार्येण वर्णभेदेन किं फलम् । गतिस्सर्वात्मनां श्रीमन्नारायणपदद्वयम्— தேஹாத்மஜ்ஞாநகார்யேண வர்ணபேதேந கிம் பலம், கதிஸ் ஸர்வாத்மநாம் ஸ்ரீமந் நாராயண பதத்வயம்* என்று பரமைகாந்தி தருமத்தில் சொல்லப்பட்டவர்த்தம் பேசுகிறதாயிற்று இப்பாட்டு. நிஷ்க்ருஷ்டாத்ம ஸ்வரூபத்தில் ஜாதிபேதம் எதுவுமில்லை. சேஷத்வத்தையிட்டே நிரூபிக்கப்படுபவனான ஆத்மா ப்ராஹ்மணக்ஷத்ரியாதி ஜாதிகளிலே ஒன்றையுமுடையனல்லன். பஞ்ச பூதாத்மகமான சரீரத்தின் அமைப்பில்தான் ஜாதிபேதங்கள் காணப்படுவன. ஆகவே, நச்வரமான சரீரத்தைப்பற்றி நிற்கும் ஜாதிபேதங்களிற் கண்ணைச் செலுத்தி இகழ்வதனால் என்னாகும்? ஸகலாத்ம வர்க்கங்களுக்கும் பொதுவான பகவச்சேஷத்வம் எந்த ஆத்மாவில் பொலிகின்றதோ, அந்த ஆத்மாவில் உகந்திருப்பதே உற்றதாம் என்றதாயிற்று. ... ... 14

குடியுங் குலமுமெல்லாம் கோகனகை கேள்வன்
அடியார்க் கவனடியே யாகும்—படியின்மேல்
நீர்கெழுவு மாறுகளின் பேரும் நிறமுமெல்லாம்
ஆர்கலியைச் சேர்ந்திடமாய்ந் தற்று. 15

| | | | |
|---|---|---|---|
| கோகனகை கேள்வன் அடியார்க்கு | லக்ஷ்மீநாதனான எம்பெருமானுடைய பக்தர்களுக்கு | நீர் கெழுவும் ஆறுகளின் | நீர்நிரம்பிய மஹா நதிகளினுடைய |
| குடியும் குலமும் எல்லாம் அவன் அடியே ஆகும் | க்ராம குலாதிகளெல்லாம் அப்பெருமானுடைய திருவடி ஸம்பந்தத்தை யிட்டேயாம்; | பேரும் நிறமும் எல்லாம் | பேர்களும் நிறங்களுமாகிய எல்லாமும் |
| படியின் மேல் | (எதுபோலவெனில்;) பூமியின் மீது (காணப்படுகின்ற) | ஆர்கலியை சேர்ந்திட | கடலைச் சென்று சேர்ந்த பிறகு |
| | | மாய்ந்தற்று | மாய்ந்து போவது போல. |

* * *—एकान्ती व्यपदेष्टव्यो नैव ग्रामकुलादिभिः । विष्णुना व्यपदेष्टव्यस्तस्य सर्वं स एव हि ॥ नद्या नश्यति नामादि प्रविष्टाया यथाऽर्णवम् । सर्वात्मना प्रपन्नस्य विष्णुमेकान्तिनस्तथा—ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:, விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி. நத்யா நச்யதி நாமாதி ப்ரவிஷ்டாயா யதார்ணவம், ஸர்வாத்மநா ப்ரபந்நஸ்ய விஷ்ணுமேகாந்திநஸ் ததா* என்கிற ப்ரமாணவசனத்தை யடியொற்றியது இப்பாசுரம். ஸ்ரீவசநபூஷணத்தில் (77) "அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாதபேர் அடியானென்றிறே. க்ராமகுலாதிகளால் வரும் பேர் அநர்த்த ஹேது. ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:*" என்கிற சூர்ணைகளை இங்கே யநுஸந்திப்பது. பாகவத

ரல்லாதார்க்கே குலகோத்ராதிகள் நிரூபகமாகிறது ; பாகவதரானார்க்கு எல்லாம் அவன் திருவடியேயாகும். ஆறுகள் கடலில் சேர்வதற்கு முன்பு கங்கை, யமுனை, கோதாவரி இத்யாதி நாமபேதங்களையும், வெண்மை கருமை முதலான நிறவேற்றுமைகளையும் தாங்கி நிற்கின்றன. கடலிற்புகுந்த பின்பு முன்பிருந்த நாமபேதங்களையும் வர்ண பேதங்களையும் அறவே விட்டிட்டு, கடலின் நிறமேகொண்டு கடலின் பெயரினாலேயே வழங்கப்படுவதை இங்கு உவமையாக எடுத்துக் காட்டினது மிகப்பொருந்தும். ஆர்கலி யென்று கடலுக்குப் பெயர். ... ... ... ... 15

தேவர் மனிசர் திரியக்குத் தாவரமாம்
யாவையு மல்ல னிலகுமுயிர்—பூவின்மிசை
ஆரணங்கின் கேள்வ னமல னறிவேவடிவாம்
நாரணன் தாட் கேயடிமை நான். 16

| | | | |
|---|---|---|---|
| இலகும் உயிர் | ஒளிவடிவனான ஜீவன் | கேள்வன் | கணவனாய் |
| தேவர் மனிசர் திரியக்கு தாவரம் ஆம் யாவையும் அல்லன் | தேவமநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்களொன்று மல்லன் ; | அமலன் | அகில ஹேயப்ரத்யநீகனாய் |
| | | அறிவே வடிவு ஆம் | ஜ்ஞான ஸ்வரூபியான |
| பூவின மிசை ஆர் | தாமரைமலரில் பொருந்தி வாழ்கின்ற | நாரணன் | நாராயணனுடைய |
| | | தாட்கே | திருவடிகளுக்கே |
| அணங்கின் | தெய்வப் பெண்ணாகிய பெரிய பிராட்டியார்க்கு | அடிமை நான் | அடிமைப்பட்டவன் அஹமர்த்தபூதனான ஆத்மா. |

* * * — नाहं देवो न मर्त्यो वा न तिर्यक् स्थावरोऽपि वा । ज्ञानानन्दमयस्त्वात्मा शेषो हि परमात्मनः ॥ * (நாஹம் தேவோ ந மர்த்யோ வா ந திர்யக் ஸ்தாவரோபி வா, ஜ்ஞாநாநந்தமயஸ் த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மநః.) என்றும், * नाहं विप्रो न च नरपतिर्नापि वैश्यो न शूद्रो नो वा वर्णी न च गृहपति र्नो वनस्थो यतिर्वा । किन्तु श्रीमद्भुवनभवनस्थित्यपायैकहेतोर्लक्ष्मी-भर्तुर्नरहरितनोः दासदासस्य दासः * (நாஹம் விப்ரோ ந ச நரபதிர் நாபி வைச்யோ ந சூத்ரோ நோ வா வர்ணீ ந ச க்ருஹபதிர் நோ வநஸ்தோ யதிர் வா, கிந்து ஸ்ரீமத்புவநபவந ஸ்தித்யபாயைகஹேதோர் லக்ஷ்மீபர்த்துர் நரஹரிதநோர் தாஸதாஸஸ்ய தாஸః.) என்றுமுள்ள ப்ரமாணவசனங்களையடியொற்றி அவதரித்தது இப்பாசுரம். இவ்வாத்மாவானவன் தேவமநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்களில் ஒருவனுமல்லன் ; ப்ராஹ்மண க்ஷத்ரியாதிகளிலும ஒருவனுமல்லன் ; ப்ரஹ்மசாரி க்ருஹஸ்தாதிகளிலும் ஒருவனுமல்லன். பின்னையோவென்னில், உலகங்களைப் படைத்தளித்தழிக்கும் பெருமானுடைய தாஸாநுதாஸசரமாவதிதாஸத்வமே வடிவெடுத்தவன்—என்றதாயிற்று ... 16

ஒன்றிடுக விண்ணவர்கோன் செல்வ மொழிந்திடுக
என்று மிறவா திருந்திடுக—இன்றே
இறக்க களிப்புங் கவர்வு மிவற்றால்
பிறக்குமோ தற்றெளிந்த பின். 17

| | | | |
|---|---|---|---|
| விண்ணவர் கோன் செல்வம் | தேவேந்திரனுடைய ஐச்வர்யமானது | இன்றே இறக்க | (அல்லது) இப்போதே மரணமாயினுமாகுக ; |
| ஒன்றிடுக | வந்து சேர்ந்தாலும் சேரட்டும் ; | தன் தெளிந்த பின் | ஸ்வஸ்வரூபத் தெளிவு உண்டான பின்பு |
| ஒழிந்திடுக | (அல்லது) உள்ள செல்வமும் ஒழிந்தாலும் ஒழியட்டும் ; | இவற்றால் | மேற்சொன்ன நன்மை தீமைகளினால் |
| என்றும் இறவாது இருந்திடுக | ஒருநாளும் மரணமில்லாத வாழ்வு வாய்த்தாலும் வாய்க்கட்டும் ; | களிப்பும் கவர்வும் பிறக்குமோ | கொந்தளிப்பும் கிலேசமு முண்டாகுமோ ? |

* * *—आगच्छतु सुरेन्द्रत्वं नित्यत्वं वाऽद्य वा मृतिः। तोषं वाऽत्र विषादं वा नैव गच्छन्ति पण्डिताः—ஆகச்சது ஸுரேந்த்ரத்வம் நித்யத்வம் வா அத்ய வா ம்ருதிః, தோஷம் வாத்ர விஷாதம் வா நைவ கச்சந்தி பண்டிதாः* என்கிற பிரமாணவசனத்தின் மொழிபெயர்ப் பாகத் தோன்றியதிப்பாசுரம். தேவேந்த்ரபதவி வரினும் வருக; உள்ள செல்வமு மொழிந்தாலுமொழிக. பிறப்புமிறப்புமில்லாத பேரின்பம்வரினும் வருக. இன்பம் பெற்றோமென்று இன்புறுவதும், துன்பம் வந்ததேயென்று தளர்வதும் ஸ்வஸ்வ ரூபஜ்ஞானிகளுக்கு இல்லை. ... ... ... ... 17

ஈன மிலாவன்ப ரேன்ருலு மெய்திலா
மானிடரை யெல்லா வணத்தாலும்—தானறிய
விட்டார்க் கெளியன் விடாதார்க் கறவரியன்
மட்டார் துழாயலங்கல் மால். 18

| | | | |
|---|---|---|---|
| மட்டு ஆர் துழாய் அலங்கல் மால் | தேன்னிறைந்த திருத்துழாய் மாலையை யணிந்த திருமால் | எல்லா வணத்தாலும் | எல்லாப்படிகளாலும் |
| ஈனம் இலா அன்பர் என்ருலும் | (தன் திருவடிகளில்) குறைதவில்லாத அன்புடையவர்களென்ருலும் | தான் அறிய விட்டார்க்கு எளியன் | அந்தர்யாமியான தானறிய விட்டவர்களாயிருந்தால் தான் அவர்கட்கு எளியனுவன்; |
| எய்திலா மானிடரை | பகவத்பக்தரல்லாத மனிதர்களை | விடாதார்க்கு அற அரியன் | அப்படி விடாதவர்களுக்கு மிகவும் அருமைப்படுவன். |

* * *—भक्तोऽपि वासुदेवस्य शार्ङ्गिणः परमात्मनः। लोकेषणादिनिर्मुक्तो मुक्तो भवति नान्यथा॥—பக்தோபி வாஸுதேவஸ்ய சார்ங்கிணः பரமாத்மநः, லோகேஷணாதிநிர்முக்தோ முக்தோ பவதி நாந்யதா.* என்கிற ப்ரமாணவசனத்தின் அநுவாதமாயிருக்கிறதிப் பாட்டு. ஸர்வேச்வரனுனவன், தனனளவில் எத்தனை பக்திமான்களாக இருந்தாலும் ப்ராக்ருதர்களோடு ஸம்ஸர்க்கத்தை விலக்கிக்கொள்ளாதவர்களுக்கு எளியனுகமாட்டான், மிகவும் அரியனேயாவன் என்கிறது. மதுவொழுகும் திருத்துழாய் மாலையை யணிந்துள்ள எம்பெருமான் தன் திருவடிகளில் பழுதிலாவன்புடையரேயாயினும் *ஆன்விடையேழன்றடர்த்தாற்கு ஆளானுரல்லாதார் மானிடவரல்லரென்று என் மனத்தே வைத்தேனே* என்றும் *செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன்* என்றும் சொல்லுகிறபடியே, மநுஷ்யஜாதியிற் பிறந்து வைத்தே பசுப்ராயராய் வர்த்திக்கும ப்ராக்ருதர்களோடு உறவை யொழித்துக் கொண்டால்தான் அவர்களுக்கு எளியனுவன் என்றதாயிற்று. மூன்ருமடியில் 'அறிவரியன்' என்கிற பாடம் பிழை; 'அறவரியன்' என்பதே பாடம். அற-மிகவும். ... ... 18

நல்ல புதல்வர் மனையாள் நவையில்கிளை
இல்ல நிலமா டிவையனைத்தும்—அல்லலேனத்
தோற்றியெரி தீயிற் சுடுமே லவர்க்கெளிதாம்
எற்றரும்வை குந்தத் திருப்பு. 19

| | | | |
|---|---|---|---|
| நல்ல புதல்வர் | நற்குணசாலிகளான புத்திரர்கள் | அல்லல் என தோற்றி | துன்பத்திற்கு அடியானவையென்று தோன்றி |
| மனையாள் | மனைவி | எரி தீயின் சுடும் எல் | எரிகிற அக்நியிற் காட்டிலும் தாபகரமாகில் |
| நவை இல் கிளை | குற்றமற்ற உறவினர் | அவர்க்கு | அன்னவர்களுக்கே |
| இல்லம் | மனை | எற்றரும் வைகுந்தத்து இருப்பு எளிது ஆம் | பெறுதற்கரிய பரமபதத்திலே சென்று சேருகை எளிதாகும். |
| நிலம் | பூமி | | |
| மாடு இவை அனைத்தும் | பசுக்கள் ஆகிய இவையெல்லாம் | | |

* * *—क्षेत्राणि मित्राणि धनानि नाथ पुत्राश्च दाराः पशवो गृहाणि । त्वत्पादपद्मप्रवणात्मवृत्तेः भवन्ति सर्वे प्रतिकूलरूपाः—க்ஷேத்ரர்ணி மித்ராணி தநாநி நாத! புத்ராச் ச தாராஃ பசவோ க்ருஹாணி, த்வத்பாதபத்மப்ரவணாத்மவ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூலரூபாஃ* என்கிற ச்லோகம் காஞ்சீஹஸ்திகிரி மாஹாத்மியத்தில் பேரருளாளப்பெருமாளை நோக்கி நான்முகன் விஜ்ஞாபித்தது. எம்பெருமானுடைய திருவடிகளில் உண்மையாக ஊன்றின சித்தவ்ருத்தியையுடைய உத்தமாதிகாரிக்குப் புத்ர தார க்ருஹ க்ஷேத்ரங்களெல்லாம் நெருப்பாகத் தோற்றுமென்றது இந்த ச்லோகத்தில். இவ்வர்த்தத்தையே இப்பாசுரமும் பேசுகிறது. ஸ்ரீவசநபூஷணத்தில் "விஹிதபோகம் நிஷித்தபோகம் போலே லோகவிருத்தமுமன்று, நரகஹேதுவுமன்று; ஆயிருக்கச்செய்தே ஸ்வரூப விருத்தமுமாய் வேதாந்த விருத்தமுமாய் சிஷ்டகர்ஹிதமுமாய் ப்ராப்யப்ரதிபந்தகமுமாயிருக்கையாலே த்யாஜ்யம். போக்யதாபுத்தி குலைந்து தர்மபுத்த்யா ப்ரவர்த்தித்தாலும ஸ்வரூபம் குலையும்" என்றருளிச் செய்தவுடனே "*க்ஷேத்ராணி மித்ராணி யென்கிற ச்லோகத்திலவஸ்தை பிறக்கவேணும் ஸ்வரூபம் குலையாமைக்கு" என்றருளிச்செய்தார் பிள்ளைலோகாசார்யர். அவ்விடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் "பேரருளாளரான பெருமாளைக் குறித்து ப்ரஹ்மா விஜ்ஞாபித்த (*க்ஷேத்ராணி மித்ராணி யென்கிற) ச்லோகத்தில் சொல்லுகிற க்ஷேத்ரமித்ரதநாதிகளான ஸமஸ்தவஸ்துக்களும் அக்நிகல்பமாய்த் தோற்றும்படியான அவஸ்தை பிறக்க வேணும் ஸ்வரூபப்ரச்யுதி பிறவாமைக்கென்கை. இந்த ச்லோகார்த்தத்தை *நல்ல புதலவர்* இத்யாதியாலே அருளாளப்பெருமாளெம்பெருமானருமருளிச் செய்தாரிறே" என்றருளிச் செய்தது இங்கே யநுஸந்தேயம். இப்படி புத்ரகளத்ராதிகள் அக்நிகல்பமாகத் தோற்ற வேண்டுமாகில் *நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே* என்றும், *வாயுநன் மக்களைப் பெற்று மகிழ்வரே* என்றும் ஆழ்வாருமாண்டாளும இவற்றோடு கூடி வாழ்வதைப் பலனாகச் சொல்லாரோ வென்னில்; அவ்வோ அதிகாரிகளுக்குத் தக்கபடியிறே பலச்ருதிதானிருப்பது. எல்லாவற்றுக்கும் எல்லாருமதிகாரிகளன்றே. ... ... ... ... ... 19

விருப்புறினும் தோண்டர்க்கு வேண்டுமீத மல்லால்
திருப்போலிந்த மார்பனருள் செய்யான்—நேருப்பை
விடாதே குழவி விழவருந்தி னலும்
தடாதே யோழியுமோ தாய். 20

| | | | |
|---|---|---|---|
| விருப்பு உறினும் | ஆசைப்பட்டாலுங் கூட | அருள்செய்யான் | கொடுக்கமாட்டான்; |
| | | குழவி | குழந்தையானது |
| தொண்டர்க்கு | தன்னிடத்தில் பக்தி செய்யுமவர்களுக்கு | நெருப்பை விடாதே | நெருப்பி னொளியைக் கண்டு அதை விடமாட்டாமல் |
| வேண்டும் இதம் அல்லால் | வேண்டியதான ஹிதமொழிய மற்றொன்றை | விழ வருந்தினலும் | அதிலே விழ முயன்றாலும் |
| திரு பொலிந்த மார்வன | பிராட்டிவிளங்கும் திருமார்வையுடைய எம்பெருமான் | தாய் தடாது ஒழியுமோ | தாயானவள் அதைத் தகையாமல் அனுமதி செய்வளோ? |

* * *—याचितोऽपि सदा भक्तैर्नाहितं कारयेद्धरिः । बालमग्नौ पतन्तं तु माता किं न निवारयेत् ॥—யாசிதோபி ஸதா பக்தைர் நாஹிதம் காரயேத் ஹரிஃ, பாலமக்நௌ பதந்தம் து மாதா கிம் ந நிவாரயேத்* என்கிற ப்ரமாண வசநத்திற்கு ப்ரதிச்சந்தமாயிருக்கிறதிப் பாட்டு. எம்பெருமான பக்கலிலே பக்தர்கள் தங்களுக்கு ஹிதமல்லாததைத் தரும்படி வேண்டினலும ஹிதபரனன அவன் ஹிதமானவற்றைத் தருவனேயொழிய அஹிதமானதை யொருபோதும் தாரான்; இதுதான் எதுபோல வெனனில்; விளைவதறியாத சிறுகுழவி அக்நி தஹிக்கவல்லதென்னுமிடமறியாதே அதிலே விழ முயன்றாலும் அது ப்ரஜைக்கு நாசகமென்று அறியும் மாதாவானவள் அதில் விழாதபடி தகையுமத்தனையொழிய விழுகைக்கு இசையுமோ? இசையமாட்டாளே; அதுபோல வென்க. 20

ஆரப் பெருந்துயரே செய்திடினு மன்பர்கள்பால்
வேரிச் சரோருகைகோன் மெய்ந்நலமாம்—தேரில்
பொறுத்தற் கரிதெனினும் மைந்தனுடற் புண்ணை
அறுத்தற் கிசைதாதை யற்று. 21

வேரி சரோருகை கோன் { நறுமணம் மிக்க தாமரையிற் பிறந்த பிராட்டியின் வல்லபனான ஸர்வேச்வரன்
அன்பர்கள் பால் பக்தர்கள் விஷயத்தில்
ஆரபெருதுயரே செய்திடினும் } மிகப்பெரிய துக்கங்களையே விளைத்தாலும்
தேரின் ஆராயுமளவில்
மெய் நலம் ஆம் { (அது) உண்மையான அன்பின் காரியமேயாகும் ;
பொறுத்தற்கு அரிது எனினும் { ஸஹிக்கமுடியாததே யாயினும்
மைந்தன் உடல் புண்ணை { தன்மகனுடம்பிலுண்டான விரணத்தை
அறுத்தற்கு இசை தாதை யற்று { அறுப்பதற்கு இசைகின்ற தந்தையின் செயல் போன்றதாமிது.

* * *—கீழ்ப்பாட்டில், பக்தர்கள் அஹிதத்தை வேண்டினாலும் தாரான் எம்பெருமான்—என்று சொல்லிற்று. பக்தர்களும் துன்பங்களை யநுபவிக்கக் காணாநின்றோமே ; அது எம்பெருமான் தருமதுதானே ; எங்ஙனே தருகின்றான் ? என்று சங்கையுண்டாக, அதற்குப் பரிஹாரமாகவருளிச் செய்வது இப்பாசுரம். * हरिर्दुःखानि भक्तेभ्यो हितबुद्ध्या करोति वै। शस्त्रक्षाराग्निकर्माणि स्वपुत्राय यथा पिता ॥——ஹரிர் துக்காநி பக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதி வை, சஸ்த்ரக்ஷாராக்நிகர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா.* என்கிற ப்ரமாணவசனத்தை யடியொற்றியது இப்பாசுரம். மிகப்பெரிய துக்கங்களை எம்பெருமான் பக்தர்களுக்கு உண்டு பண்ணுவதாகக் கண்டாலும், அது ஹிதபுத்தியாலே செய்கிறவத்தனை. ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் வைராக்யத்தைப் பிறப்பிக்கைக்காகச் செய்கிறதாகையாலே ஹிதபுத்தியால் செய்கிறதென்னத் தட்டில்லை. ஸ்ரீவசநபூஷணத்தில் (243.) "தனக்கொரு க்லேசமுண்டானால் கர்மபலமென்றுதல் க்ருபாபலமென்றுதல் பிறக்கும் ப்ரீதியும்" என்றவிடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் ;—"முமுக்ஷுவாய் ப்ரபந்நனானாலும் ப்ராரப்த சரீரமிருக்குமளவும் தாபத்ரயங்களில் ஏதேனுமொரு க்லேசமுண்டானால் 'இது அநுபவவிநாச்யமான ப்ராரப்த கர்மபலமன்றோ, ஏவம்பூதகர்மங்களுள்ளவை கழியுமளவன்றோ இச்சரீரத்தோடே எம்பெருமான் நம்மை வைக்கிறது ; ப்ராப்திப்ரதிபந்தகங்களிலே ஒன்றாகிலும் கழியப்பெற்றோமே' என்கிற அநுஸந்தானத்தாலேயாதல், துர்வாஸநையாலே இவ்வுடம்பைவிட இசையாமல் ப்ராக்ருதபதார்த்தங்களை யுபஜீவித்துக்கொண்டு ஸம்ஸாரத்துக்குள்ளே பொருந்தியிருக்கிற நம்மை துக்க தர்சநத்தைப்பண்ணுவித்து இதில் பற்றறுத்துக்கொண்டு போக நினைக்கிற ஸர்வேச்வரனுடைய க்ருபையின் பலமன்றோ இது என்கிற அநுஸந்தானத்தாலேயாதல் உண்டாகக்கடவ ப்ரீதியும். பூர்வாகம் உத்தராகம் ப்ராரப்தகண்டம் எல்லாம் கழிக்கிறவனுக்கு வர்த்தமாந சரீரத்தில் அநுபாவ்ய கர்மமித்தனையும் கழிக்கை அரிதன்றிறே கர்மபலமான துக்க பரம்பரைகளை அநுபவியாநின்றாலும் இத்தேஹத்தை விடவென்றால் இசையாதவிவனை நிர்துःக்கனாக்கி வைப்போமாகில் இச்சரீரத்தோடே நெடுங்காலமிருக்க இச்சித்தல் இன்னுமொரு சரீரந்தன்னை இச்சித்தல் செய்யுமாகையாலே இச்சரீரத்துக்குள்ள கர்மம் அநுபவித்தே இறுக்கக்கடவன் என்றிறே வைக்கிறது ; ஆனபின்பு மற்றுண்டான கர்மங்களெல்லாம் கழித்தது ஸம்ஸாரத்தில் நின்றும் இவனைக் கடுகத் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளுகையிலுண்டான க்ருபையாலே யானைப்போலே இத்தனையும் கழியாமல் வைத்ததும் க்ருபையாலேயிறே. அநாதிகாலம் பரிக்ரஹித்த சரீரந்தோறும் அநுபவித்த துக்கம் பகவந்நிக்ரஹபலம், இது அநுக்ரஹபலம்." என்பதாம்.

துஃக்கப்ரதாநம் ஹிதபுத்தி ப்ரயுக்தமாகுமோவென்கிற சங்கையை உதாஹரணமுகேந பரிஹரிக்கிறது [பொறுத்தற்கு அரிதெனினும் மைந்தனுடற்புண்ணை அறுத்தற்கிசைதாதையற்று] என்கிற பின்னடி. இவனுக்கிது பொறுக்கப்போகாதென்று தோற்றியிருந்தாலும் புத்ரனுடைய சரீரத்தில் க்ரந்தியை ஹிதபுத்தியாலே அறுக்கைக்கு அநுமதிபண்ணும் பிதாவைப்போலே யென்கை. *வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாதகாதல் நோயாளன்போல்* என்கிற பெருமாள் திருமொழிப் பாசுரமும் இங்கே அநுஸந்தேயம். ... ... ... ... 21

உடைமைநா னென்று முடையா னுயிரை
வட மதுரை வந்துதித்தா னென்றும்—திடமாக
அறிந்தவன்றன் தாளி லடைந்தவர்க்கு முண்டோ
பிறந்துபடு நீடுயரம் பின். 22

| | | | |
|---|---|---|---|
| நான் உடைமை என்றும் | ஜீவாத்மவர்க்கம் ஸர்வேச்வரனுடைய ஸொத்தென்றும் | திடம் ஆக அறிந்தவன் தன் தாளில் அடைந்தவர்க்கும் | திண்ணமாகத் தெரிந்துகொண்ட ஆசார்யனுடைய திருவடிகளை யாச்ரயித்தவர்களுக்கும் |
| உயிரை உடையான் வட மதுரை வந்து உதித்தான் என்றும் | அவ்வாத்மவர்க்கங்களுக்கு ஸ்வாமி வடமதுரையில் வந்து பிறந்த ஸர்வேச்வரனென்றும் | பின் பிறந்து படும் நீள் துயரம் உண்டோ | பிறகு ஸம்ஸரித்து அநுபவிக்கக்கூடிய அனந்தக்லேசங்கள் உண்டோ? (இல்லை.) |

* * *—ப்ராரப்த கருமங்களை அநுபவித்தே தீரவேண்டுமாகில் இந்த ஜன்மத்தளவன்றிக்கே ஜன்மாந்தரத்திலும்போய் அநுபவிக்கவேண்டி வருமோவென்று தளரவேண்டா; ஸம்பந்தஜ்ஞான பூர்வகமாக அவன் திருவடிகளிலே சரணம் புகுந்தவர்களுக்குப் பின்பொரு ஜன்மமெடுத்து அநுபவிக்க வேண்டியதில்லை யென்கிறது இப்பாட்டில். * आर्तानामाशुफलदा सकृदेव कृता ह्यसौ । दृप्तानामपि जन्तूनां देहान्तरनिवारणी ॥—ஆர்த்தாநாம் ஆசுபலதா ஸக்ருதேவ க்ருதா ஹ்யஸௌ, த்ருப்தாநாமபி ஜந்தூநாம் தேஹாந்தர நிவாரணீ.* என்று ப்ரபத்திஸ்வபாவஞ் சொல்லுகிற ப்ரமாணவசனத்திலிருந்து இவ்வர்த்தம் கொள்ளப்பட்டதாயிற்று. * स्वत्वमात्मनि संजातं स्वामित्वं ब्रह्मणि स्थितम् । उभयोरेष संबन्धो न परोऽभिमतो मम ॥—ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம், உபயோரேஷ ஸம்பந்தோ ந பரோபிமதோ மம* என்கிறபடியே மிகச்சிறந்ததான ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தத்தை யுணருகைதான் ப்ரபத்தி—என்னுமிடத்தை இரண்டரையடிகளால் தெரிவித்தபடி. ... ... ... ... 22

ஊழி வினைக்குறும்ப ரோட்டருவ ரென்றஞ்சி
ஏழை மனமே யினித்தளரேல்—ஆழிவண்ணன்
தன்னடிக்கீழ் வீழ்ந்து சரணென் றிரந்தொருகால்
சொன்னதற்பி னுண்டோ துயர். 23

| | | | |
|---|---|---|---|
| ஏழைமனமே | அறிவிலியானநெஞ்சே !, | | |
| ஊழி வினை குறும்பர் | தொல்லைவினைகளாகிய குறும்பர்கள் | சரண் என்று இரந்து | நீயே சரணமாகக்கடவை என்று ப்ரார்த்தித்து |
| ஓட்டருவர் என்று அஞ்சி | ஓடிவந்து நலிவர்களென்று பயப்பட்டு | ஒருகால் சொன்னதன் பின் | ஒருகால் த்வயோச்சாரணம் செய்த பிறகும் |
| இனி தளரேல் | இனி நீ சோகிக்கவேண்டா ; | | |
| ஆழி வண்ணன் தன் அடி கீழ் வீழ்ந்து | கடல் வண்ணனான ஸர்வேச்வரனுடைய திருவடிகளிலே விழுந்து | துயர் உண்டோ | கிலேசிக்கவேண்டுவதுண்டோ? |

***—சரணாகதியின் பிரபாவத்தைப் பேசுகிறது இப்பாட்டு. ஜன்மபரம்பரைகள் தோறும் நாம் செய்திருக்கிற தீவினைகளை நினைக்குங்கால் நமக்கு உய்ய விரகேதென்று தளரவேண்டியிருக்கும். அந்தத் தளர்ச்சி வேண்டா; த்வயத்தை யநுஸந்தித்து எம்பெருமான் திருவடிகளிலே விழுந்தார்க்கு இந்த விசாரத்திற்கு ப்ரஸக்தியில்லையன்றோ. * मा भीर्मन्दमनो विचिन्त्य बहुधा यामीश्चिरं यातनाः नामी नः प्रभवन्ति पापरिपवः स्वामी ननु श्रीधरः । आलस्यं व्यपनीय भक्तिसुलभं ध्यायस्व नारायणं लोकस्य व्यसनापनोदनकरो दासस्य किं न क्षमः ॥ —மா பீர் மந்தமநோ! விசிந்த்ய பஹுதா யாமீச் சிரம் யாதநாஃ நாமீ நஃ ப்ரபவந்தி பாபரிபவஃ ஸ்வாமீ நநு ஸ்ரீதரஃ, ஆலஸ்யம் வ்யபநீய பக்திஸுலபம் த்யாயஸ்வ நாராயணம் லோகஸ்ய வ்யஸநாபநோதநகரோ தாஸஸ்ய கிம் ந க்ஷமஃ.* என்கிற முகுந்தமாலாச்லோகத்தை இந்தப் பாசுரத்திற்கு ஸம்வாத ப்ரமாணமாக அநுஸந்திப்பது. 23

வண்டுபடி துளப மார்பனிடைச் செய்தபிழை
உண்டு பலவென் றுளந்தளரேல்—தொண்டர்செயும்
பல்லா யிரம்பிழைகள் பார்த்திருந்துங் காணுங்கண்
இல்லா தவன் காணிறை. 24

| | | | |
|---|---|---|---|
| உளம் | ஓமனமே!, | இறை | ஸர்வேச்வரன் |
| வண்டு படி துளபம் மார்பன் இடை | வண்டுகள் மொய்த்த திருத்துழாய் மாலையைத் திருமார்பிலணிந்துள்ள திருமாலிடத்து | தொண்டர் செயும் | பக்தர்கள் செய்த |
| செய்த பிழை | நாம் இயற்றிய அபராதங்கள் | பல் ஆயிரம் பிழைகள் பார்த்து இருந்தும் | பலவாயிரம் பிழைகளை (ஸர்வஜ்ஞனாகையாலே) பார்த்துக் கொண்டிருந்தாலும் |
| பல உண்டு என்று தளரேல் | பலபலவுளவே; (அவற்றின் பலன் என்னாகுமோ!) என்று கவலை கொள்ளாதே; (ஏனெனில்;) | காணும் கண் இல்லாதவன் காண் | அவற்றைக் காண்கின்ற கண் இல்லாதவனன்றோ. |

***—பூர்வாகமென்றும் உத்தராகமென்றும் பாபங்கள் இருவகைப்படும். ஸம்பந்தஜ்ஞானம் பிறப்பதற்கு முன்னே செய்த பாவங்கள் பூர்வாகமெனப்படும்; பிறபட்டவை உத்தராகமெனப்படும். பூர்வாகங்களைப்பற்றிக் கவலைவேண்டாவென்றது கீழ்ப்பாட்டில்; உத்தராகங்களைப்பற்றிக் கவலை வேண்டாவென்கிறது இப்பாட்டில். ஸஹஸ்ரநாமத்தில் அவிஜ்ஞாதா என்றொரு திருநாமமுள்ளது எம்பெருமானுக்கு. அறியாதவனென்று அதற்குப் பொருள். ஸர்வஜ்ஞனை அறியாதவனென்று சொல்லத் தகுதியில்லை. ஸர்வஜ்ஞனாலும் அடியார்களின் குற்றங்களைக் காணாதவனாகையாலே அவிஜ்ஞாதா என்கிறது. * अविज्ञाता हि भक्तानामागस्सु कमलेक्षणः । सदा जगत्समस्तं च पश्यन्नपि न पश्यति ॥—அவிஜ்ஞாதா ஹி பக்தாநாம் ஆகஸ்ஸு கமலேக்ஷணஃ, ஸதா ஜகத் ஸமஸ்தஞ்ச பச்யந் நபி ந பச்யதி.* என்று சொல்லிற்று. இதனை ஆழ்வான் வரதராஜஸ்தவத்திலே * उपालम्भोऽयं मे: श्रयति बत सार्वज्ञ्यमपि ते यतो दोषं भक्तेष्विह वरद ! नैवाकलयसि * என்றருளிச் செய்தார். இப்பாசுரமும் இவ்வர்த்தமே கொண்டது. எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களைக் காண்பதில்லை யென்றால் பக்தாபராதங்களை போக்யமாகக் கொள்ளுகிறானென்று சொல்லுகை பொருந்தாதேயென்று சங்கிக்கவேண்டா; தோஷங்களைக் காணாமையென்பது ஒருகுணம்; கண்டாலும் போக்யமாகக் கொள்ளுகையென்பது மற்றொரு குணம். அக்குணம் அடுத்த பாசுரத்தில் பேசப்படுகிறது. ச்ருதப்ரகாசிகையில் "संबन्धविशेषान्वितेषु प्रीतिः—स्नेहः ; यस्य विपाका अस्थानभयशङ्कित्वम् दोषानवभासः दोषेऽपि गुणत्वबुद्धिरित्यादयः" என்றருளிச் செய்திருப்பதை நோககவேணும். ப்ரேமத்தின்

பரிபாகதசை பலவகைப்பட்டிருக்கும். தோஷாதர்சித்வமென்பது ஒருதசை; தோஷங்களையும் குணமாகக் கொள்ளுகையென்பது அதனில் மேற்பட்ட மற்றொருதசை. க்ஷமிப்பதென்பதும் ஒருதசை. இவை பரஸ்பரவ்யாஹதங்களல்ல. தோஷாதர்சித்வத்திற்கு மேற்பட்டதசை கிடையாதென்று சிலர் மயங்கி நிற்பதுண்டு. அவர்களைத் தெளிவிக்கவே ச்ருதப்ரகாசிகாஸூக்தி அவதரித்ததென்க. ... ... 24

அற்ற முரைக்கி லடைந்தவர்பா லம்புயைகோன்
குற்ற முணர்ந்திகழுங் கோள்கையனோ ?—எற்றேதன்
கன்றி னுடம்பின் வழுவன்றோ காதலிப்பது
அன்றதனை யீன்றுகந்த வா. 25

| | | | |
|---|---|---|---|
| அற்றம் உரைக்கில் | சாஸ்திரங்களில் அறுதியிடப்பட்ட பரமார்த்தத்தைச் சொல்லப்புகுமளவில்; (இவ்வளவே காணீர்.) | இகழும் கொள்கையனோ எற்றே | (குற்றங்களுக்காக) இகழ்ந்துவிடுமியல்வினனோ? (அல்லன்;) அஹஹ; |
| அம்புயை கோன் | லக்ஷ்மீபதியான எம்பெருமான் | அன்று (கன்று) அதனை ஈன்று உகந்த ஆ | அப்போதுதான் கன்றை ப்ரஸவித்து உகப்போடிருக்கின்ற பசுவானது |
| அடைந்தவர் பால் | பக்தர்கள் விஷயத்தில் | தன் கன்றின் உடம்பின் வழு அன்றோ காதலிப்பது | (அந்தத்) தனது கன்றினுடலிலுள்ள அழுக்கையன்றோ விரும்பியிருப்பது. |
| குற்றம் உணர்ந்து | குற்றங்களைக் கண்டாலும் | | |

* * *—எம்பெருமான் அடியார்களின் குற்றங்களைக் காணகில்லானென்றது கீழ்ப்பாட்டில்; காணநேர்ந்தால் அவற்றை நற்றமாகக் கொள்ளுவனென்கிறது இப்பாட்டில். இவை பரஸ்பர விருத்தமல்ல. அன்பிலே பர்வபேதங்களுண்டாகையாலே. இதைப்பற்றிச் சொல்ல வேண்டுவதெல்லாம் வாத்ஸல்யார்த்த ப்ரகாசிகையிலே விரியச் சொன்னோம், அங்கே கண்டு கொள்வது. * प्रपन्नान् माधवस्सर्वान् दोषेण परिगृह्यते । अद्य जातं यथा वत्सं दोषेण सह वत्सला ॥—ப்ரபந்நாந் மாதவஸ் ஸர்வாந் தோஷேண பரிக்ருஹ்யதே, அத்ய ஜாதம் யதா வத்ஸம் தோஷேண ஸஹ வத்ஸலா.* என்ற ப்ரமாணவசனத்தை யடியொற்றி யருளிச் செய்த திப்பாட்டு. இந்த வசனத்தில் 'பரிக்ருஹ்யதே' என்றது பரிக்ருஹ்ணாதி யென்றதாகக் கொள்ளக்கடவது ஆர்ஷப்ரயோகமிருந்தபடி.

அற்றமுரைக்கிலென்றது—அறுதியிட்டுச் சொல்லுமளவிலென்றபடி. சாஸ்த்ரார்த்தத்தை நிஷ்கர்ஷிக்குமளவில் என்கை. [அம்புயைகோன் குற்றமுணர்ந்து இகழுங் கொள்கையனோ ?] திருமால் அடியார்களின் குற்றங்களை யுணரமாட்டானென்னுமளவேயன்று; உணர்ந்தால்தான் இகழுங்கொள்கையனோ ? பின்னையோவென்னில், நற்றமாகக் கொள்ளுங்கொள்கையன்காண் என்றபடி. இது ஸம்பாவிதமோவென்ன, ஸம்பாவிதமே யென்னுமிடத்தைப் பின்னடிகளாலே மூதலிக்கிறது. தத்வத்ரயத்தில் ஈச்வரப்ரகரணத்தில் (151.) "இப்படி யீச்வரன் கல்யாணகுணங்களோடே கூடியிருக்கையாலே" இத்யாதி சூர்ணையில் "பார்யாபுத்ரர்கள் குற்றங்களைக் காணக்கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போலே அவர்கள் குற்றங்களைத் திருவுள்ளத்தால் நினையாதே, குற்றங்களைப் பெரியபிராட்டியார் காட்டினாலும் அவளோடே மறுதலைத்துத் திண்ணியனாய் நின்று ரக்ஷித்து, காமினியுடைய அழுக்குகக்கும் காமுகனைப்போலே அவர்கள் தோஷங்களை போக்யமாகக்கொண்டு........அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்கி முன்னணைக்கன்றையும் புல்லிட வந்தவர்களையும் கொம்பிலும் குளம்பிலுமேற்குமாபோலே பெரியபிராட்டியாரையும் ஸூரிகளையும் விட்டு ஸ்நேஹித்துக்கொண்டு போரும்." என்று பிள்ளைலோகாசாரியர் அருளிச் செய்துள்ள திவ்யஸூக்திகளை நிச்சலும் மனனம் செய்யப்பெறில் ஆவிலஹ்ருதயர்களுக்கு மனம் தெளியப்பெறும். 25

தப்பில் குருவருளால் தாமரையாள் நாயகன்றன்
ஒப்பி லடிகள்நமக் குள்ளத்து—வைப்பென்று
தேறி யிருப்பார்கள் தேசுபொலி வைகுந்தத்
தேறியிருப் பார்பணிகட் கேய்ந்து. 26

| | | | |
|---|---|---|---|
| தப்பு இல் குரு அருளால் | ஞானமனுட்டான மிவற்றில் குறையற்ற ஆசாரியனுடைய திருவருளால் | தேறி இருப்பார்கள் | தெளிந்திருக்குமவர்கள் |
| தாமரையாள் நாயகன் தன் | திருமாலினுடைய | தேசு பொலி வைகுந்தத்து ஏறி | தேஜஸ்ஸூமிக்கிருக்கிற பரம பதத்திலே சென்று |
| ஒப்பு இல் அடிகள் | ஒப்பற்ற திருவடிகள் | | |
| நமக்கு உள்ளத்து வைப்பு என்று | நமக்கு நெஞ்சிலுறையும் நிதி யென்று | பணிகட்கு எய்ந்திருப்பார் | கைங்கர்யங்களுக்கு அதிகாரி களாயிருப்பார். |

* * *—ஆசாரியன் திருவருளாலே நமக்கு எம்பெருமான் திருவடிகள் மஹா நிதியாகக் கிடைத்தனவென்று தேறியிருக்குமவர்கள் ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்யும் பாக்யசாலிகளாகத் தட்டில்லையென்கிற திப்பாட்டில். *आचार्यस्य प्रसादेन मम सर्वमभीप्सितम् । प्राप्नुयामिति विश्वासो यस्यास्ति स सुखी भवेत्॥ —ஆசார்யஸ்ய ப்ரஸாதேந மம ஸர்வமபீப்ஸிதம், ப்ராப்நுயாமிதி விசவாஸோ யஸ்யாஸ்தி ஸ ஸுகீ பவேத்.* என்கிற ப்ரமாணவசனத்தையடியொற்றியது இப்பாட்டு. ... 26

நெறியறியா தாரு மறிந்தவர்பால் சென்று
செறிதல் செயாத் தீமனத்தர் தாமும்—இறையுரையைத்
தேறா தவரும் திருமடந்தை கோனுலகத்
தேறா ரிடரழுந்து வார். 27

| | | | |
|---|---|---|---|
| நெறி அறியாதாரும் | (பிறவிக் கடல் கடத்தற்கு) உபாய மறியாதவர்களும் | இறை உரையை தேறாதவரும் | ஸர்வேச்வரன் பணித்த சரமச் லோகத்தில் தெளிவில்லாத வர்களும் |
| அறிந்தவர் பால் சென்று செறிதல்செயா தீமனத்தர் தாமும் | அவ்வுபாய மறிந்தவர்களிடத் திச் சென்று சேர்தலில்லாத தீயமனத்தவர்களும் | திருமடந்தை கோன் உலகத்து ஏறார் | திருமாலின் உலகமாகிய திரு நாட்டில் சென்று சேரப் பெறாதவர்களாய் |
| | | இடர் அழுந்துவார் | ஸம்ஸார துக்கங்களிலேயே ஆழ்ந்து கிடப்பர்கள். |

* * *—ஒருகாலும் உஜ்ஜீவிக்கப் பெறாதவர்கள் மூவர்; அவர்களாகிறார்—த்வயத்தின் உபதேசம் பெறாதவர்கள், அதையுபதேசிக்கவல்ல ஆசாரியனை அடிபணியாதவர்கள், சரமச்லோகத்திலே விச்வாஸ மற்றவர்கள்—ஆக மூவர் என்கிற திப்பாட்டில். நெறியென்று ஸம்ஸாரத்தைத் தப்புவிக்குமுபாயத்தைச் சொல்லுகிறது. இச்சொல்லால் த்வயமென்னும் மந்த்ரரத்னத்தை இங்கு விவக்ஷிக்கலாம். 'அறிந்தவர்பால்சென்று செறிதல் செயாத் தீமனத்தர்' என்று ஆசார்ய விமுகர்களைச் சொல்லுகிறது. ஆக இவர்கள் திருமடந்தை கோனுலகத்து ஏறார், இடரழுந்துவார். * अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति । नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥—அஜ்ஞச்ச அச்ரத்ததாநச்ச ஸம்சயாத்மா விநச்யதி, நாயம் லோகோஸதி ந பரோ ந ஸுகம் ஸம்சயாத்மநः* என்கிற பகவத்கிதாவசனம இப்பாட்டுக்கு ஸம்வாதமாகும். .... 27

சரணு கதிமற்ருேர் சாதனத்தைப் பற்றில்
அரணுகா தஞ்சனைதன் சேயை—முரணழியக்
கட்டியது வேருேர் கயிறு கோண் டார்ப்பதன்முன்
விட்ட படைபோல் விடும். 28

| | | | |
|---|---|---|---|
| சரணுகதி | (மஹாவிச்வாசரூபமான) ப்ரபத்தியானது, | முரண் அழிய சட்டியது படை | அவருடைய வலிமை குன்றும்படி கட்டினதான ப்ரஹ்மாஸ்த்ரமானது |
| மற்று ஓர் சாதனத்தை பற்றில் | உபாயாந்தரஙகளிலொன்றைப் பற்றுமளவில் | வேறு ஓர் கயிறு கொண்டு | வேருேர் சணற்கயிற்றைக் கொண்டுவந்து |
| அரண் ஆகாது | தான் ரக்ஷகமாகாது ; (நழுவிப் போம் ;) | ஆர்ப்பதன் முன் | கட்டமுயலும்போது |
| அஞ்சனை தன் சேயை | ஆஞ்சநேயரை | விட்ட போல் விடும் | நழுவினது போல் நழுவும். |

* * *—சரணுகதிக்கு மற்ருேருபாயத்தின் ஸங்கத்தை ஸஹியாமையாகிற ஒரு பெருமையுண்டு ; அதுதன்னைச் சொல்லுகிற திப்பாட்டில். ‘‘ சணல்கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே நழுவும் ’’ என்று சொல்லிப் போருவதுண்டிறே. அது சொல்லுகிறது. * प्रपत्तेः क्वचिदप्येवं परापेक्षा न विद्यते । साहि सर्वत्र सर्वेषां सर्वकामफलप्रदा । सकृदुच्चारिता येन तस्य संसारनाशिनी । राक्षसानामविस्रम्भादाञ्जनेयस्य बन्धने । यथा विगलिता सद्यस्त्वमोघाऽप्यस्त्रबन्धना । तथा पुंसामविस्रम्भात् प्रपत्तिः प्रच्युता भवेत् । तस्माद्विस्रम्भयुक्तानां मुक्तिं दास्यति साऽचिरात् ॥—ப்ரபத்தேः க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே. ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம ஸர்வகாம பலப்ரதா. ஸக்ருதுச்சாரிதா யேந தஸ்ய ஸம்ஸாரநாசிநீ. ராக்ஷஸாநாம் அவிஸ்ரம்பாத் ஆஞ்ஜநேயஸ்ய பந்தநே. யதா விகலிதா ஸத்யஸ் த்வமோகாபி அஸ்த்ரபந்தநா. ததா புமஸாம் அவிஸ்ரம்பாத் ப்ரபத்திः ப்ரச்யுதா பவேத். தஸ்மாத் விஸ்ரம்ப யுக்தாநாம் முக்திம் தாஸ்யதி ஸா அசிராத்.* என்கிற பகவச்சாஸ்த்ரவசன ப்ரதிச்சந்தமாக அவதரித்ததாயிற்று இப்பாட்டு. ... ... ... 28

மந்திரமு மீந்த குருவுமம் மந்திரத்தால்
சிந்தனைசெய் கின்ற திருமாலும்—நந்தலிலா
தென்று மருள் புரிவர் யாவ ரவரிடரை
வென்று கடிதடைவர் வீடு. 29

| | | | |
|---|---|---|---|
| மந்திரமும் | திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரமும் | நந்தல் இலாது என்றும் அருள் புரிவார் யாவர் அவர் | இடைவீடின்றி எப்போதும் அருள்புரியும்படி யிருப்பார் யாவரோ, அன்னவர்கள் |
| ஈந்த குருவும் | அம்மந்திரத்தையுபதேசித்த ஆசாரியனும் | | |
| அ மந்திரத்தால் சிந்தனை செய் கின்ற திருமாலும் | அத்திருமந்திரத்தினுல் சிந்திக்கப்படுகின்ற திருமாலும் | இடரை வென்று | ஸாம்ஸாரிக துக்கங்களைத் தொலைத்து |
| | | கடிது வீடு அடைவர் | விரைவில் மோக்ஷமடைவார்கள். |

* * *—मन्त्रे तद्देवतायां च तथा मन्त्रप्रदे गुरौ । त्रिषु भक्तिस्सदा कार्या सा हि प्रथमसाधनम् ॥—மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸா ஹி ப்ரதமஸாதநம்.* என்கிற ப்ரமாணவசனத்தில்—மந்த்ரததினிடத்திலும் மந்த்ரப்ரதிபாத்யமான தேவதையினிடத்திலும் மந்த்ரத்தை உபகரித்தருளின ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமமுண்டாகப் பெற்றவர்களுக்கே பரமபுருஷார்த்த ஸித்தியுண்டென்று சொல்லிற்று. அவ்வர்த்தமேயாயிற்று இப்பாசுரத்திலும் பொலிகின்றது.

முமுக்ஷுப்படியில் "மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ர ப்ரதனை ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமம் கனக்கவுண்டானல் கார்யகரமாவது" என்றருளிச்செய்த சூர்ணையும் இங்கே அநுஸந்தேயம். இப்பாட்டின் மூன்றுமடியில் "அருள்புரிவர்" என்றது அருள்புரியப் பெற்றவர் என்றபடி; 'மழை பெய்த இடம்' என்ருற்போலுமிது. ... ... ... ... ... 29

மாடு மனேயுங் கிளேயு மறைமுனிவர்
தேடு முயர்வீடும் செந்நேறியும்—பீடுடைய
எட்டெழுத்தும் தந்தவனே யேன்றிரா தாருறவை
விட்டிடுகை கண்டீர் விதி. 30

| | | | |
|---|---|---|---|
| மாடும் மனேயும் கிளேயும் | பசுக்களும் க்ருஹமும் பந்துக்களும் | பீடு உடைய எட்டெழுத்தும் தந்தவனே | பெருமைமிக்க திருமந்திரத்தையுபதேசித்த ஆசார்யனேயாவன் |
| மறை முனிவர் தேடும் உயர் வீடும் | வைதிகர்களான முனிவர்கள் விரும்பித்தேடுகின்ற உயர்ந்த மோக்ஷமும் | என்று இராதார் | என்று உறுதிகொள்ளாதாருடைய |
| செம் நெறியும் | அந்த மோக்ஷத்தையடைவிக்கும் செவ்விய மார்க்கமும் ஆகிய இவையெல்லாம் | உறவை விட்டிடுகைவிதிகண்டீர் | உறவை விட்டொழிப்பதுதான் நூற்கொள்கையாகும். |

* * *—ऐहिकामुष्मिकं सर्वं गुरुरष्टाक्षरप्रदः। इत्येवं ये न मन्यन्ते त्यक्तव्यास्ते मनीषिभिः॥ —ஐஹிகாமுஷ்மிகம் ஸர்வம் குருரஷ்டாக்ஷரப்ரதஃ, இத்யேவம் யே ந மந்யந்தே த்யக்தவ்யாஸ் தே மநீஷிபிஃ.* என்கிற ப்ரமாணவசனத்திற்கு மொழிபெயர்ப்பாகுமிப் பாசுரம். தமக்கு அபேக்ஷிதங்களான ஐஹிகாமுஷ்மிக ஸகலவஸ்துக்களும் திருமந்த்ரத்தை உபதேசித்தருளின ஆசார்யனேயென்று அத்யவஸாயங் கொள்ளாதவர்களோடு உறவை விட்டிடவேண்டியதேயென்கிறது. மாடும் என்றது—செல்வமும் என்றபடி; "மாடு பொன் பக்கம் செல்வம்" என்பது நிகண்டு. க்ஷீரம் முதலியவற்றைத் தருகின்ற பசுக்களுமென்னவுமாம். செந்நெறியும் என்றது—மோக்ஷஸாதநங்களாமவையும் என்றபடி. அர்ச்சிராதிமார்க்கமென்னவுமாம். எட்டெழுத்துக்குப் பீடுடைமையாவது—"இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம்" (முமுக்ஷுப்படி) இத்யாதி சூர்ணைகளினல் தெரிவிக்கப்பட்ட பெருமையுடைமை. "உறவை விட்டிடுகை கண்டீர்விதி" என்றது—அன்னவர்கள் ஹேயர்கள் என்பதைக் காட்டி நிற்கும். ... ... ... ... ... 30

வேத மோருநான்கி னுட்போதிந்த மெய்ப்போருளும்
கோதில் மனுமுதல்நூல் கூறுவதும்—தீதில்
சரணு கதிதந்த தன்னிறைவன் தானே
அரணுகு மேன்னு மது. 31

| | | | |
|---|---|---|---|
| ஒரு நான்கு வேதம் உள் பொதிந்த மெய் பொருள் | நான்கு வேதங்களினுள்ளும் பொதிந்த பரமார்த்தமாயும் | தீது இல் சரணு கதி தந்த தன் இறைவன் தானே அரண் ஆகும் என்னும் அது | தீதற்ற சரணுகதி ப்ரதிபாதகமான த்வயமந்த்ரத்தைத் தனக்கு உபகரித்த ஆசார்யன் திருவடிகளே தஞ்சமென்னும் விஷயமாம். |
| கோது இல் மனு முதல் நூல் கூறுவதும் | கோதற்ற மநுஸ்மிருதி முதலான நூல்கள் தெரிவிக்கும் பொருளாயும் (இருப்பது எதுவென்ருல்;) | | |

* * *—வேதங்களெல்லாவற்றினுள்ளும், அவற்றுக்கு உபப்ரும்ஹணங்களான ஸகல சாஸ்த்ரங்களினுள்ளும் பொலியும் பொருள் ஒன்றே; அதாவது ஆசாரியனே

பரதைவமென்பது, என்கிற திப்பாட்டு. ∗ गुरुरेव परं ब्रह्म गुरुरेव परा गतिः । गुरुरेव परा विद्या गुरुरेव परं धनम् ॥ गुरुरेव परः कामो गुरुरेव परायणम् । यस्मात्तदुपदेष्टाऽसौ तस्माद्गुरुतरो गुरुः । अर्चनीयश्च वन्द्यश्च कीर्तनीयश्च सर्वदा । ध्यायेज्जपेन्नमेद्भक्त्या भजेदभ्यर्चयेन्मुदा । उपायोपेयभावेन तमेव शरणं व्रजेत् । इति सर्वेषु वेदेषु सर्वशास्त्रेषु सम्मतम् । एवं द्वयोपदेष्टारं भावयेद्बुद्धिमान् धिया ॥—குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரா கதிঃ, குருரேவ பரா வித்யா குருரேவ பரம் தநம். குருரேவ பரঃ காமோ குருரேவ பராயணம். யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குருঃ. அர்ச்சநீயச் ச வந்த்யச் ச கீர்த்தநீயச் ச ஸர்வதா, த்யாயேஜ் ஜபேத் நமேத் பக்த்யா பஜேதப்யர்ச்சயேந்முதா. உபாயோபேயபாவேந தமேவ சரணம் வ்ரஜேத். இதி ஸர்வேஷு வேதேஷு ஸர்வசாஸ்த்ரேஷு ஸம்மதம். ஏவம் த்வயோபதேஷ்டாரம் பாவயேத் புத்திமாந் தியா.∗ என்று பகவச்சாஸ்த்ரத்திலே விரிவாகச் சொல்லிற்று

சரணாகதிதந்த தன்னிறைவன் என்றது த்வயத்தை உபதேசம் செய்தருளின ஆசார்யன் என்றபடி. த்வயமென்கிற மந்த்ரரத்நம் சரணாகதியைச் சொல்லுமதாகையாலே அதற்கு சரணாகதியென்றே பெயராயிற்று. சரணாகதிக்குத் தீதின்மையாவது—ஸ்வரூபாநுரூபமாயிருக்கை. ... ... ... ... ... 31

மானிடவ ரென்றுங் குருவை மலர்மகள்கோன்
தானுகந்த கோல முலோக மென்றும்—ஈனமதா
வெண்ணுகின்ற நீச ரிருவருமே யெக்காலும்
நண்ணிடுவர் கீழா நரகு. 32

| | | | |
|---|---|---|---|
| குருவை மானிடவன் என்றும் | ஆசார்யனை மநுஷ்யனென்றும் | ஈனம் அது ஆ எண்ணுகின்ற | ஹீனமாக நினைக்கின்ற |
| மலர் மகள் கோன் தான் உகந்த கோலம் உலோகம் என்றும் | திருமால்தான் உகந்து பரிக்ரஹித்த திவ்யமங்கள விக்ரஹத்தை லோஹமென்றும் | நீசர் இருவருமே | இவ்விருவகைப்பட்ட நீசர்களே |
| | | எக்காலும் கீழ் ஆம் நரகு நண்ணிடுவர் | எந்நாளும் அதோ கதியிற் சேர்ந்திடுவர்கள். |

∗ ∗ ∗— साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम् । मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना ॥—ஸாக்ஷாந் நாராயணோ தேவঃ க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா ∗ என்றும், ∗ பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து∗ என்றும் சொல்லுகிறபடியே நம்மைப் பிறவிக்கடலில் நின்று எடுக்கைக்காக எம்பெருமான்தானே மநுஷ்யரூபங்கொண்டு வந்திருக்கிறானென்று ப்ரதிபத்தி பண்ணாதே மேலெழுந்த ஆகாரத்தையே பார்த்து ஆசார்யனை மநுஷ்யனென்றே நினைப்பவனும், ∗உமருகந்துகந்த வுருவம் நின்னுருவமாகி∗ என்றும் ∗தமருகந்ததெவ்வுருவ மவ்வுருவந்தானே∗ என்றும் சொல்லுகிறபடியே அடியார்களுகந்த கோலத்தை எம்பெருமான் தானுமுகந்து பரிக்ரஹிக்கிற அர்ச்சாரூபத்தை அப்ராக்ருத விக்ரஹமாக ப்ரதிபத்தி பண்ணாதே லோஹங்களிலே இதுவுமொரு லோஹமன்றோவென்று நினைப்பவனுமான இவ்விருவரும நரகத்தில் நீடூழிகாலம் விழுந்து துவளுமவர்களென்கிற திப்பாட்டு. ∗ विष्णोरर्चावतारेषु लोहभावं करोति यः । यो गुरौ मानुषं भावमुभौ नरकपातिनौ ॥—விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதி யঃ, யோ குரௌ மாநுஷம் பாவம் உபௌ நரகபாதிநௌ∗ என்கிற ப்ரமாணவசனத்திலுள்ள பொருளாயிற்று இது. ∗अर्चावतारोपादानवैष्णवोत्पत्तिचिन्तनम् । मातृयोनिपरीक्षायास्तुल्यमाहुर्मनीषिणः ॥—அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ண வோத்பத்தி சிந்தநம், மாத்ரு யோநிபரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிணঃ∗ என்றதுங் காண்க. ... ... ... 32

எட்ட விருந்த குருவை யிறை யன்றென்று
விட்டோர் பரனை விருப் புறுதல்—பொட்டெனத்தன்
கண் செம் பளித்திருந்து கைத்துருத்தி நீர் தூவி
அம்புதத்தைப் பார்த்திருப்பா னற்று 33

- எட்ட இருந்த குருவை — ஸமீபத்திலுள்ள ஆசாரியனை
- இறை அன்று என்று விட்டு — ஸ்வாமியல்லனென்று தவிர்த்து
- ஓர் பரனை விருப்புறுதல் — வேறு பரமபுருஷனை ப்ராபிக்க விரும்புவதானது
- பொட்டென — சடக்கென
- தன் கண் செம்பளித்திருந்து — தன் கண்களை மூடிக் கொண்டிருந்து
- கை துருத்தி நீர் தூவி — கைப்பட்ட துருத்தியிலுள்ள தண்ணீரைக் கீழே கொட்டிவிட்டு
- அம்புதத்தை பார்த்திருப்பானற்று — ஆகாயத்தில் மேகத்தை எதிர்பார்த்திருப்பவன் செயல் போன்றதாகும்.

* * *—ஸ்ரீவசநபூஷணத்தில் (447.) "ஆசார்யாபிமாநமே உத்தாரகம்" என்றதற்குமேல்—"கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிசிக்கக்கடவனல்லன். விடாய் பிறந்தபோது கரஸ்தமான உதகத்தையுபேக்ஷித்து ஜீமூத ஜலத்தையும் ஸாகரஸலிலத்தையும் வாபீகூபபயஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக்கடவனல்லன்" என்றருளிச் செய்த சூர்ணைகள் இங்கே அநுஸந்தேயம். அவ்விடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளிவை:—"பிபாஸை விஞ்சினபோது சடக்கெனப் பானம் பண்ணலாம்படி பாத்ரகதமாய்க்கொண்டு தன்கையிலிருக்கிற ஜலத்தை ஸுலபதையே ஹேதுவாக அநாதரித்துத் தரையிலே உகுத்து, ஆகாசஸ்தமாய்க்கொண்டு எட்டாதபடியாயும், பூமிஸ்தமாயிருக்க தூரஸ்தமாயும, ஆஸந்நமாயிருக்கச்செய்தே பெருகுங்காலமொழிய வற்றின காலமின்றிக்கேயும், எப்போதுமுண்டானாலும் அவ்வளவுஞ் சென்று உபஜீவிக்க வேண்டியும், இருந்தவிடந்தன்னிலே யுண்டாயும் கநித்ராதிகள் (खनित्रादि) கொண்டு கல்லிப் பெற வேண்டியுமிருக்கும் ஜீமூதாதிகளின் ஜலத்தை யாசைப்படுமவனைப்போலே ரக்ஷாபேக்ஷை பிறந்த தசையில் அப்போதே தனக்கு உதவும்படி கைபுகுந்திருக்கிற ஆசார்யவிஷயத்தை ஸௌலப்யமேபற்றாசாக வுபேக்ஷித்து, பரமாகாசவர்த்தியாய் துஷ்ப்ராபமாயிருக்கிற பரத்வத்தையும், பூமியிலேயாயும் க்ஷீராப்தியளவுஞ் செல்லவல்லவர்களுக்கன்றி யுதவாத வ்யூஹத்தையும், ஆஸந்நமாக வந்தும் தாத்காலிகர்க்கொழிய பாச்சாத்யர்க்கு உதவாத விபவத்தையும் நித்யஸந்நிதியுண்டாயும் ஸம்பாஷணாதிகளால் இவனோடு கைகலந்திராத அர்ச்சாவதாரத்தையும், இருந்த விடந்தன்னிலே உண்டாயிருந்ததாகிலும் யமநியமாதிக்ரமேண யத்நித்து தர்சிக்கவேண்டும் அந்தர்யாமித்வத்தையும் ஆசைப்படக்கடவனல்லனென்கை. * चक्षुर्गम्यं गुरुं त्यक्त्वा शास्त्रगम्यं तु यः स्मरेत । हस्तस्थमुदकं त्यक्त्वा घनस्थं सोऽभिवाञ्छति ॥—சக்ஷுர்கம்யம் குரும் த்யக்த்வா சாஸ்த்ரகம்யம் து யஃ ஸ்மரேத், ஹஸ்தஸ்தமுதகம் த்யக்த்வா கநஸ்தம் ஸோபிவாஞ்சதி.* என்றும், *எட்டவிருந்த குருவை யிறையன்றென்று விட்டு* என்று தொடங்கி *அம்புதத்தைப் பார்த்திருப்பானற்று* என்றும் சொல்லக்கடவதிறே." என்று.

இவற்றால் இப்பாட்டும் வியாக்கியானிக்கப்பட்டதாயிற்று. ... ... 33

பற்று குருவைப் பரனன் றென விகழ்ந்து
மற்றோர் பரனை வழிபடுதல்—எற்றேதன்
கைப்பொருள்விட் டாரேனும் காசினியில் தாம்புதைத்த
அப்பொருள்தே டித்திரிவா னற்று. 34

| | |
|---|---|
| பற்று குருவை | தன்னைப்பற்றின (அல்லது, தன்னாலே பற்றப்பட்ட) ஆசாரியனை |
| பரன் அன்று என இகழ்ந்து | ரக்ஷகனல்லனென்று திரஸ்கரித்து |
| மற்று ஓர் பரனை வழிபடுதல் | வேறொரு பரமபுருஷனை அநுவர்த்திப்பதானது, |
| தன் கை பொருள் விட்டு | தன் கைப்பட்ட பொருளை விட்டு |
| ஆரேனும் தாம் காசினியில் புதைத்த அப் பொருள் | வேறு யாராவது பூமிக்குள் புதைத்து வைத்த நிதியை |
| தேடி திரிவான் அற்று | தேடித்திரியுமவனுடைய செயல் போன்றது; |
| எற்றே | என்னே அவிவேகம்! |

* * *—கீழ்ப்பாட்டிலருளிச்செய்த அர்த்தத்தையே ப்ரகாராந்தரத்தாலுமருளிச் செய்கிற திப்பாட்டு. * सुलभं स्वगुरुं त्यक्त्वा दुर्लभं य उपासते । लब्धं त्यक्त्वा धनं मूढो गुप्तमन्वेषते क्षितौ॥—ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே, லப்தம் த்யக்த்வா தநம் மூடோ குப்தமந்வேஷதே க்ஷிதௌ* என்கிற ப்ரமாணவசனத்தை யடியொற்றி யவதரித்ததாயிற்று இப்பாட்டு. அதிஸுலபனாய்த் தனக்குக் கைபுகுந்திருக்குமாசார்யனை அவரத்வபுத்தியாலே உபேக்ஷித்து, அதிதுர்லபனாய்ப் பெருமுயற்சிகள் செய்து காண வேண்டும்படி யிருக்குமீச்வரனை அநுவர்த்திப்பதானது—வேண்டினபோது விநியோகங் கொள்ளலாம்படி கைப்பட்டிருக்கும் கிழிச்சீரையை விட்டு, பூமிக்குள்ளே புதைத்து வைத்திருக்கும் பொருளைத் தேடித்திரிவதொக்கும். ... ... ... 34

என்று மனைத்துயிர்க்கு மீரஞ்செய் நாரணனும்
அன்றும் தன்னாரியன்பா லன்பொழியில்—நின்ற
புனல்பிரிந்த பங்கயத்தைப் பொங்குசுடர் வெய்யோன்
அனலுமிழ்ந்து தானுலர்த்தி யற்று. 35

| | |
|---|---|
| அனைத்து உயிர்க்கும் | ஸகலாத்மாக்களுக்கும் |
| என்றும் ஈரம் செய் நாரணனும் | எந்நாளும் அருள் புரிகின்ற நாராயணனுங்கூட, |
| தன் ஆரியன் பால் அன்பு ஒழியில் அன்றும் | (சிஷ்யன்) ஸ்வாசார்யனளவிலே அன்பு தவிர்ந்தவாறே நிக்ரஹம் செய்திடுவன்; |
| | (இஃது எங்ஙனே யென்னில்;) |
| நின்ற புனல் பிரிந்த பங்கயத்தை | தனக்குத் தாரகமாய் நிற்கின்ற தண்ணீரை விட்டுப் பிரிந்த தாமரையை |
| பொங்கு சுடர் வெய்யோன் தான் | தேஜஸ்வியான ஸூர்யன் தானே |
| அனல் உமிழ்ந்து உலர்த்தியற்று | வெய்யிலைப்பரப்பி உலர்த்தி விடுமா போலேயாம். |

* * *—नारायणोऽपि विकृतिं याति गुरोः प्रच्युतस्य दुर्बुद्धेः । कमलं जलादपेतं शोषयति रविर्न तोषयति ॥—நாராயணோபி விக்ருதிம் யாதி குரோః ப்ரச்யுதஸ்ய துர்ப்புத்தேః, கமலம் ஜலாதபேதம் சோஷயதி ரவிர் ந தோஷயதி.* என்கிற பிரமாணவசனத்தை யடியொற்றிப்பிறந்த திப்பாட்டு. ஆசார்யஸம்பந்தம கிடந்தாலும் ஈச்வரனேயன்றோ ஸ்வரூபவிகாஸகன்; ஆசார்யஸம்பந்தம் குலைந்தாலும் ஆத்மகுணங்களையுடையவனுக்கு ஈச்வரன் ஸ்வரூபவிகாஸத்தைப் பண்ணானோவென்னில்; பண்ணானென்பது மாத்திரமன்று; ஆசார்யஸம்பந்தம் குலைந்தால் ஸ்வரூபத்தை வாடவும் பண்ணுவன். ஜலத்திலே பிறந்து ஜலத்தையே தாரகமாகவுடைய தாமரையை ஸூர்யன் விகாஸப்படுத்துகிறவன்தான். எப்போது? அது ஜலத்தை விட்டுப் பிரியாதிருக்குமளவும். அது தானே ஜலத்தை விட்டுப் பிரிந்ததாகில் ஸூர்யன் அதை விகாஸப்படுத்துவதில்லை யென்பது மாத்திரமன்றே; சோஷிக்கச் செய்வதையும் காணாநின்றோமே. அது போலவாயிற்று இதுவும். ஸ்ரீவசநபூஷணத்தில்—(439) "தாமரையை அலர்த்தக் கடவ ஆதித்யன்தானே நீரைப்பிரிந்தால் அத்தையுலர்த்துமாபோலே, ஸ்வரூபவிகா

ஸத்தைப் பண்ணுமீச்வரன்தானே ஆசார்யஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப் பண்ணும்" என்ற சூர்ணை இங்கே அநுஸந்தேயம். ... ... 35

வில்லார் மணிகொழிக்கும் வேங்கடப்பொற் குன்றுமுதல்
செல்லார் பொழில்சூழ் திருப்பதிகள்—எல்லாம்
மருளா மிருளோட மத்தகத்துத் தன்தாள்
அருளாலே வைத்த வவர். 36

| | | | |
|---|---|---|---|
| வில் ஆர் மணி கொழிக்கும் | ஒளி மிகுந்த ரத்னங்கள் திரளு மிடமான | மருள் ஆம் இருள் ஓட | அஜ்ஞாநாந்தகாரம் கெடும்படி யாக |
| வேங்கடம் பொன் குன்று முதல் | திருவேங்கட மலை முதலாக வுள்ள, | மத்தகத்து | தலையின்மீது |
| செல் ஆர் பொழில் சூழ் திருப்பதிகள் எல்லாம் | காள மேகம் படிந்த சோலைகள் சூழ்ந்த திவ்ய தேசங்களெல்லாம், | தன் தாள் அருளாலே வைத்த அவர் | தன் திருவடிகளை வைத்தருளின ஆசார்யரேயாவர். |

* * *—येनैव गुरुणा यस्य न्यासविद्या प्रदीयते। तस्य वैकुण्ठदुग्धाब्धिद्वारकास्सर्व एव सः॥—யேநைவ குருணா யஸ்ய ந்யாஸவித்யா ப்ரதீயதே, தஸ்ய வைகுண்ட துக்தாப்தித்வாரகாஸ் ஸர்வ ஏவ ஸঃ* என்கிற ப்ரமாணவசநத்தை மொழிபெயர்த்ததாமிப்பாட்டு. ஸச்சிஷ்யனுக்கு ஸதாசார்யப்ரேம முடையனாயிருக்குமவனுக்கு ஸகல திவ்யதேசங்களும் தன்னாசார்யனேயாவன் என்கிறது. மேலெடுத்த ச்லோகத்தில் வைகுண்டத்தையும் க்ஷீராப்தியையும் த்வாரகையையும் சொல்லிற்று; பாட்டில் திருமலை முதலான திவ்ய தேசங்களைச் சொல்லிற்று. இவ்வளவே வாசி. செல்—மேகம். மேகங்கள் வந்து படியும்படி ஓங்கியிருக்கும் சோலைகள் சூழ்ந்த திருப்பதிகளெல்லா மென்றபடி. ... ..6

பொருளு முயிரு முடம்பும் புகலும்
தெருளுங் குணமுஞ் செயலும்—அருள் புரிந்த
தன்னா ரியன்பொருட்டாச் சங்கற்பஞ் செய்பவர்நெஞ்
சென்னாளு மாலுக் கிடம். 37

| | | | |
|---|---|---|---|
| பொருளும் உயிரும் உடம்பும் புகலும் | செல்வமும் பிராணனும் உடலும் வீடும் | அருள் புரிந்த தன் ஆரியன் பொருட்டு ஆ | தன்பால் கிருபை பண்ணின ஆசாரியனுக்காக வென்று |
| தெருளும் குணமும் செயலும் | ஞானமும் சமதமாதி குணங்களும் செய்கைகளும் ஆகிய இவையெல்லாமும் | சங்கற்பம் செய்பவர் நெஞ்சு | ஸங்கல்பிக்குமவர்களான ஸச்சிஷ்யர்களின் நெஞ்சானது |
| | | மாலுக்கு எந்நாளும் இடம் | திருமாலுக்கு நித்யவாஸஸ்தானமாகும். |

* * *—शरीरं वसु विज्ञानं वासः कर्म गुणानसून्। गुर्वर्थं धारयेद्यस्तु स शिष्यो नेतरः स्मृतः॥ गुर्वर्थं स्वात्मनः पुंसः कृतज्ञस्य महात्मनः। सुप्रसन्नस्सदा विष्णुः हृदि तस्य विराजते॥—சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸঃ கர்ம குணாநஸூந், குர்வர்த்தம் தாரயேத் யஸ் து ஸ சிஷ்யோ நேதரஸ் ஸ்ம்ருதঃ. குர்வர்த்தம் ஸ்வாத்மநঃ பும்ஸঃ க்ருதஜ்ஞஸ்ய மஹாத்மநঃ, ஸுப்ரஸந்நஸ் ஸதா விஷ்ணுர் ஹ்ருதி தஸ்ய விராஜதே.* என்னும் ப்ரமாணவசனங்களைப் பின்பற்றி யருளிச்செய்த தாமிப்பாட்டு. அர்த்தம் பிராணன் சரீரம் முதலான எல்லாவற்றையும் ஆசார்யசேஷமாக அநுஸந்தித்திருக்குமவர்கள் நெஞ்சானது ஸர்வேச்வரனுக்கு ஸர்வகாலமும் வாஸஸ்தானமாயிருக்கு மென்றதாயிற்று. ஆசார்யபக்தர்களே எம்பெருமானுடைய திருவருளுக்கு இலக்காவரென்பது கருத்து. ... 37

தேனார் கமலத் திருமா மகள்கொழுநன்
தானே குருவாகித் தன்னருளால்—மானிடர்க்காய்
இந்நிலத்தே தோன்றுதலால் யார்க்குமவன் தாளிணையை
உன்னுவதே சால வுறும். 3

| | | | |
|---|---|---|---|
| தேன் ஆர் கமலம் திரு மா மகள் கொழுநன் தானே | தேன்மிக்க தாமரைப்பூவில் தோன்றிய பிராட்டிக்கு வல்லபனான எம்பெருமான் தானே | இ நிலத்தே தோன்றுதலால் | இந்நிலவுலகத்தில் அவதரி பதனாலே |
| தன் அருளால் குரு ஆகி | தனது க்ருபையினாலே (மநுஷ்யரூபியான) ஆசார்யனாய் | யார்க்கும் | எல்லா வுயிர்க்கும் |
| மானிடர்க்கு ஆய் | அஸ்மதாதிகளுக்காக | அவன் தாள் இணையை | அவ்வாசாரியனுடைய உப பாதங்களை |
| | | உன்னுவதே சால உறும் | அநுஸந்திப்பதே மிகவும் உற் தாகும். |

* * *—ஐயாக்க்யஸம்ஹிதையிலே சாண்டில்யன் சொன்னவசனம் *साक्षान्नारायण देवः कृत्वा मर्त्यमयीं तनुम्। मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना ॥ तस्माद्भक्तिर्गुरौ कार्या संसारभयभीरुणा —ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா. தஸ்மாத் பக்திர் குரௌ கார்யா ஸம்ஸார பயபீருணா.* என்பது. அதுவே இப்பாசுரத்திற்கு ஸம்வாதப்ரமாணமாம். கீழே பல பாசுரங்களினால் விரிவாக அருளிச்செய்யப்பட்ட ஆசார்யப்ரபாவம் தகுமென்கை காக ஆசார்யன் ஸாக்ஷாத் நாராயணனுடைய அவதாரவிசேஷமேயென்று சாஸ்த்ர முறையிட்டிருப்பதை எடுத்துரைத்தாராயிற்று. *பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து* என்று பெரியாழ்வாருமருளிச் செய்தார். ... ... 3

அலகை முலைசுவைத்தாற் கன்பரடிக் கன்பர்
திலத மெனத்திரிவார் தம்மை—உலகர்பழி
தூற்றில் துதியாகும் தூற்று தவரிவரைப்
போற்றிலது புன்மையே யாம். 3

| | | | |
|---|---|---|---|
| அலகை முலை சுவைத்தாற்கு | பேய்ச்சி முலையுண்ட பெருமானுக்கு | துதி ஆகும் | (அதுவே அவர்கட்குத்) தோத்திரமாய்த் தலைக்கட்டும்; |
| அன்பர் அடிக்கு அன்பர் | அன்பு பூண்டிருப்பாருடைய திருவடிகளிலே அன்பு பூண்டிருக்குமவர்களாய்க்கொண்டு | அவர் தூற்றாது | அந்த லௌகிகர்கள் அப்ப தூஷிக்காமல் |
| திலதம் என திரிவார் தம்மை | உலகுக்குத் திலகபூதர்களென்னும்படியாக இந்நிலத்திலுலாவும் மஹாத்மாக்களை | இவரை போற்றில் | இந்த மஹாத்மாக்களைப் பூஷி தால் |
| உலகர் பழி தூற்றில் | லௌகிகர்களான பாமரர்கள் தூஷித்தால் | அது புன்மையே ஆம் | அந்த பூஷணம் தூஷணமே யாம். |

* * *—न्यासविद्यैकनिष्ठानां वैष्णवानां महात्मनाम् । प्राकृताभिष्टुतिर्निन्दा निन्दा स्तुतिरिति स्मृता ॥—ந்யாஸவித்யைக நிஷ்டாநாம் வைஷ்ணவாநாம் மஹாத்மநாம், ப்ராக்ருதாபிஷ்டுதிர் நிந்தா நிந்தா ஸ்துதிரிதி ஸ்ம்ருதா.* என்கிற ப்ரமாணவசனமே இப்பாட்டாய் வடிவெடுத்ததாயிற்று. பகவத்பக்த பக்தர்களான பாகவதோத்தமர்களின் ஏற்றமறிந்து அவர்களைக் கொண்டாடக் கடமைப்பட்டவர்கள் *அறிவையென்னுமமுதவாறு தலைப் பற்றி வாய்க்கொண்டதே* என்னும்படியிருக்கும் மஹாஜ்ஞாநநிதிகளான மஹநீயர்களேயன்றி மற்றையார்களல்லர். அவிவேகிகளான லௌகிகர்கள் பாகவதோத்தமர்களைப் பழிப்பதோடு புகழ்வதோடு ஒரு வாசியில்லை. *மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ்* என்கிற கணக்கிலே அவர்களது பழிப்பு புகழ்ச்சியாகவே தலைக்கட்டும். பழிக்காமல் புகழ்வதற்கும் அவர்கள் அதிகாரிகளல்லர்; அவர்கள் செய்யும் புகழ்ச்சி உத்தமர்களுக்குப் பழிப்பாகவே தலைக்கட்டும என்றதாயிற்று. அலகை—பேய்மகள்; பூதனையைச் சொல்லுகிறது. *பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை வற்ற வாங்கியுண்ட வரலாறு காண்க. ... ... ... ... 3

அல்லி மலர்ப்பாவைக் கன்ப ரடிக்கன்பர்
சொல்லு மவிடு சுருதியாம்—நல்ல
படியாம் மனுநூற் கவர்சரிதை பார்வை
செடியார் வினைத் தொகைக்குத் தீ. 40

| | | | |
|---|---|---|---|
| அல்லி மலர் பாவைக்கு அன்பர் | லக்ஷ்மீபதியான ஸர்வேச்வரனுடைய | மனு நூற்கு | (தருமசாஸ்த்ரங்களிற் சிறந்த) மநுஸ்மிருதிக்கு |
| அடிக்கு அன்பர் | திருவடிகளிலே அன்பு பூண்ட பக்தர்கள் | நல்ல படி ஆம் | சிறந்த உபமானமாகும்; |
| சொல்லும்அவிடு | விநோதமாகச் சொல்லும் சிறு வார்த்தையும் | பார்வை | (அவர்களது) கடைக்கண்ணோக்கு சமானது |
| சுருதி ஆம் | வேதத்தோடொக்கும்; | செடி ஆர் வினை தொகைக்கு தீ | தூறு மண்டின தீவினைத்திரளுக்குக் காட்டுத் தீயாம். |
| அவர் சரிதை | அன்னவர்களது அனுட்டானமானது | | |

* * *—பரமபாகவதோத்தமர்களின் வாய்ச்சொல்லுக்கு மேற்பட்ட வேதமில்லையென்றும், அவர்களுடைய நடத்தைகளுக்கு மேற்பட்ட தர்மசாஸ்த்ரமில்லையென்றும்; அவர்களது கடாக்ஷவீக்ஷணத்திற்கு மேற்பட்ட பாவனம் வேறொன்றில்லையென்றும் அருளிச்செய்து இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டியருளுகிறார்.

* वेदशास्त्ररथारूढाः ज्ञानखड्गधरा द्विजाः। क्रीडार्थमपि यद् ब्रूयुस्स धर्मः परमो मतः॥—வேதசாஸ்த்ரரதாரூடாः ஜ்ஞாநகட்கதரா த்விஜாः, க்ரீடார்த்தமபி யத் ப்ரூயுஸ் ஸ தர்மः பரமோ மதः *என்கிற வசனத்தை யுட்கொண்டு *சொல்லும் அவிடு சுருதியாம்* என்றார். அவிடு—விநோத வார்த்தை. * वासुदेवं प्रपन्नानां यान्येव चरितानि वै। तान्येव धर्मशास्त्राणीत्येवं वेदविदो विदुः॥—வாஸுதேவம் ப்ரபந்நாநாம் யாந்யேவ சரிதாநி வை, தாந்யேவ தர்மசாஸ்த்ராணீத்யேவம் வேதவிதோ விதுः* என்கிற வசனத்தைத் திருவுள்ளம்பற்றி *நல்லபடியாம் மனுநூற்கு அவர் சரிதை* என்றார். * न शुध्यति तथा जन्तुस्तीर्थवारिशतैरपि। लीलयैव यथा भूप! वैष्णवानां हि वीक्षणैः॥—ந சுத்த்யதி ததா ஜந்துஸ் தீர்த்தவாரிசதைரபி, லீலயைவ யதா பூப! வைஷ்ணவாநாம் ஹி வீக்ஷணைः* என்னும் ப்ரமாணத்தை யடியொற்றி “அவர் பார்வை செடியார் வினைத் தொகைக்குத் தீ” என்றார்.

ஆகவிப்படி பகவச்சாஸ்த்ரங்களிலும் இதிஹாஸபுராணாதிகளிலும் ஸாரமாக விளங்கும் ப்ரமாண வசனங்களையே பாசுரமாக்கிப் பணித்த ஞானஸாரமென்னு மிப்பிரபந்தத்தை இவ்வளவோடு தலைக்கட்டியருளினாராயிற்று. ... ... 40

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
அருளாளப் பெருமாளெம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கராசாரியர் எழுதிய**

**ஞானஸாரவுரை**

முற்றுப்பெற்றது.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்த

## இரண்டாம் பிரபந்தமான

# பிரமேயஸாரம்

(ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடியது.)

---

அவதாரிகை :—மஹாஜ்ஞாநநிதியாய் ஸகல சாஸ்த்ர ஸாகர பாரங்கதரான அருளாளப்பெருமாளெம்பெருமானார், தம்மைத் திருத்திப் பணிகொண்ட எம்பெருமானார் திருவடி வாரத்திலே நெடுங்காலம் பரிசர்யை பண்ணிக்கேட்ட மஹார்த்த விசேஷங்களை ஸகலஸம்ஸாரி சேதநோஜ் ஜீவனார்த்தமாக ப்ரபந்தீகரிக்கத் திருவுள்ளம்பற்றி அநேக ப்ரமாணவசந ஸாரார்த்த ஸங்க்ரஹ ரூபமான ஞானஸாரமென்னும் ப்ரபந்தத்தையருளிச் செய்தார் கீழ்; இன்னமும் கரைபுரண்ட கருணையினாலே, ஸகலசாஸ்த்ர ஸாரமான திருமந்திரத்தில் பிரதிபாதிக்கப்படுகிற ப்ரமேயங்களையெல்லாம் [—அர்த்த விசேஷங்களையெல்லாம்] தொகுத்து மற்றொரு ப்ரபந்தமிட்டருள வேணுமென்று திருவுள்ளம்பற்றி ப்ரமேயஸாரமாகிற இப்பிரபந்தத்தை யருளிச்செய்கிறார். இதில் முதற்பாட்டில், திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்திற்கு ஸங்க்ரஹமான ப்ரணவத்தின் ஸாரமான பொருளைப் பேசுகிறார்.

அவ்வா னவருக்கு மவ்வா னவரேல்லாம்*
உவ்வா னவரடிமை யென்றுரைத்தார்—இவ்வாறு
கேட்டிருப்பார்க் காளென்று கண்டிருப்பார் மீட்சியிலா
நாட்டிருப்பா ரென்றிருப்பன் நான். 1

| | | | |
|---|---|---|---|
| அ ஆனவருக்கு | அகாரத்தின் பொருளான எம்பெருமானுக்கு | இவ்வாறு கேட்டு இருப்பார்க்கு | இவ்வண்ணமாக உபதேசமுகத்தாலே கேட்டு இவ்வர்த்தத்திலே ஊன்றியிருக்குமவர்களுக்கு |
| ம ஆனவர் எல்லாம் | மகாரத்தின் பொருளான ஜீவாத்மவர்க்கமெல்லாம் | ஆள் என்று கண்டிருப்பார் | அடிமைப்பட்டவர்களாகத் தம்மை அத்யவஸித்திருக்குமவர்கள் |
| அடிமை என்று | சேஷபூதர்களென்று | மீட்சி இலா நாடு இருப்பார் என்று | மீளுதலில்லாத திருநாட்டிலே வீற்றிருப்பர்களென்று |
| உ ஆனவர் உரைத்தார் | உகாரார்த்தமான பெரியபிராட்டியாரோடொத்த புருஷகாரபூதர்களான ஆசாரியர்கள் பணிப்பர்கள் ; | நான் இருப்பன் | நான் உறுதியுடையேன். |

* * *—ப்ரணவத்தில் அகாரமானது ஸகல ஜகத்காரணபூதனாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறதாகையாலே [அவ்வானவருக்கு] என்றது அகாரத்தின் பொருளான எம்பெருமானுக்கு என்றபடி. இனி ப்ரணவத்தில் மகாரமானது இருபத்தஞ்சாமக்ஷரமாய் ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுகிறதாயிற்று. ஆகவே [மவ்வான வரெல்லாம்] என்றது மகாரார்த்தமான ஆத்மஸமஷ்டியெல்லாம் என்றபடி. பத்தமுக்த நித்யபேதேந மூவகைப்பட்ட ஆத்மாக்களையும் சொல்

லுகிறது. இவ்வாத்மாக்களெல்லாம் ஸர்வேச்வரனுக்கு அடிமையென்பது அகாரத்தின்மேல் ஏறிக்கழிந்த சதுர்த்தியினால் [லுப்த சதுர்த்தியினால்] தெரிவிக்கப்படுகிறது. ஆக ஆத்மவர்க்கமெல்லாம் எம்பெருமானுக்கு சேஷபூதமென்னுமர்த்தத்தை [உவ்வானவர் உரைத்தார்] ஆசாரியர்கள் அருளிச்செய்தார்களென்றபடி. முமுக்ஷுப்படியில் உகாரத்திற்கு லக்ஷ்மீபரமான ஒரு பொருளும சொல்லப்படுகிறது. அதுவும் ஒருவாறு பூர்வாசார்ய ஸம்மதமானதே. ஆசார்யர்கள் புருஷகாரக்ருத்யத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மியையொத்திருக்குமவர்களாகையாலே உவ்வானவரென்பதனால் ஆசாரியர்கள் விவக்ஷிதர்களாகிறார்கள்.

[இவ்வாறு கேட்டிருப்பார்க்கு ஆளென்று கண்டிருப்பார்] இதனால் பாகவத சேஷத்வம் தெரிவிக்கப்படுகிறது. ஆக பகவச் சேஷத்வத்தோடுகூட பாகவத சேஷத்வத்தையும் தெரிந்து கொள்வார் யாவரோ அவர்கள்தாம் பேறுபெறுவர் எனறதாயிற்று. ... 1

குலமொன் றுயிர்பல தங் குற்றத்தா லிட்ட
கலமொன்று காரியமும் வேறாம்—பலமொன்று
காணாமை காணும் கருத்தார் திருத்தாள்கள்
பேணாமை காணும் பிழை. 2

| | | | |
|---|---|---|---|
| உயிர் பல | ஆத்மாக்கள் பலவகைப்பட்டிருந்தாலும் | காரியமும் வேறு ஆம் | அநுபவிக்கும் பலன்கள் வெவ்வேறு பட்டனவாம்; |
| குலம் ஒன்று | அவ்வாத்மாக்களுக்குள்ளது தொண்டக்குலமொன்றேயாம்; | பலம் ஒன்று காணாமை | ஒருவகையான பலனையும் எதிர்பாராமல் |
| தம் குற்றத்தால் இட்ட கலம் ஒன்று | இவர்கள் தங்களுக்குக் கருமவசமாக எம்பெருமான் தந்த தேஹமும் ப்ராக்ருதமான தொன்றேயாம்; | காணும் கருத்தார் | கடாக்ஷிக்கத்திருவுள்ளமுடைய ஆசாரியர்களது |
| | | திரு தாள்கள் | திருவடிகளை |
| | | பேணாமை காணும் பிழை | விரும்பிப்பணியாத தொன்றே (துர்க்கதிகளுக்கு மூலகாரணமான) பிழை. |

* * *—ஜீவவர்க்கத்தில் பத்தாத்மாக்கள் என்று ஸம்ஸாரிகள் சொல்லப்படுகிறார்கள். இவர்கள் எம்பெருமான் திருவடியையடையப்பெறாமல் ஸம்ஸரித்தே நிற்பதற்கு அடி ஸதாசார்ய ஸமாச்ரயணமில்லாமை யென்கிறது இப்பாட்டில். [உயிர்பல, குலம் ஒன்று] ஆத்மாக்கள் பலபலவாயினும் அகிலாத்மாக்களுக்குமுள்ளது தொண்டக்குலமெனபதொன்றே. தேஹத்தோடு சேர்க்கை காரணமாக வெவ்வேறு குலங்கள் உள்ளனவாக வழங்க நேர்ந்தாலும் நிஷ்க்ருஷ்டாத்ம ஸ்வரூபத்தில் குலபேதமில்லை; தொண்டக்குலமொன்றேயாம். [தம் குற்றத்தாலிட்ட கலமொன்று] அவரவர்கள் தாம் தாம் பண்ணின பாபங்களுக்குச்சேர ஒரு சரீரத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்களென்றபடி. ஒரே ஆத்மா ஜந்மபேதேந பலபல தேஹங்களைப் பூண்டாலும் ஒரு ஜன்மத்தில் ஒரு தேஹமேயுள்ளதென்க. [காரியமும் வேறாம்] புண்ய பாபரூபங்களான கருமங்களின் பலன்களையநுபவிக்கையாகிற காரியமும் வெவ்வேறாயிருக்குமென்றபடி. இங்ஙனேயாவதற்குக் காரணமென்னென்னில்; திருத்தாள்கள் பேணாமை காணும் பிழை; யாருடைய திருத்தாள்களென்னில்; பலமொன்று காணாமை காணுங் கருத்தார் திருத்தாள்கள். க்யாதிலாபபூஜைகளில் ஒன்றையும கருதாமல் கடாக்ஷிப்பதொன்றையே கருத்தில் கொண்டவர்கள் ஆசாரியர்கள்; அவர்களுடைய திருத்தாள்களைப் பேணாமையாகிற பிழைதான் இதற்குக் காரணமென்றதாயிற்று. ... ... ... ... 2

பலங்கொண்டு மீளாத பாவ முளதாகில்
குலங்கொண்டு காரியமென் கூறீர்—தலங்கொண்ட
தாளிணையா னன்றே தனையொழிந்த யாவரையும்
ஆளுடையா னன்றே யவன். 3

| | |
|---|---|
| பலம் கொண்டு மீளாத பாவம் உளது ஆகில் | (நியமேந) பலத்தோடே சந்திப்பித்தே விடும் பாவம் உண்டாயிருக்குமாகில் |
| குலம் கொண்டு காரியம் என் கூறீர் | குலத்தினால் என்ன பலனாகும்? சொல்லுங்கள்; |
| தலம் கொண்ட | எல்லா ஸ்தலங்களையும் ஆக்ரமித்துக் கொண்ட |
| தாள் இணையான் அவன் | உபய பாதங்களையுடையனான எம்பெருமான் |
| அன்றே | உலகளந்தவக்காலத்திலேயே |
| தனை ஒழிந்த யாவரையும் | ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த சேதநர்களையும் |
| ஆள் உடையான் அன்றே | அடிமை கொண்டவனன்றோ? |

* * *—தொண்டக்குலம் நம்பக்கலில் ஒழிக்க வொழியாதத்தாக இருக்கச் செய்தேயும் ப்ரயோஜநாந்தர பரத்வமொன்று கிடப்பதனாலேயே அது பயனற்றதாகிறது; *தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்ட வெந்தாய்* என்கிறபடியே நிர்ஹேதுகமாக எல்லாரையும் தன்னடிக்கீழ்க் கொண்ட பெருமான் ஸம்ஸாரிகளைத் தன் திருவடிகளுக்கு ஆளாக்கிக் கொள்ளாமைக்கு அடி இவர்களுக்குண்டான ப்ரயோஜநாந்தர ப்ராவண்யமே யென்றதாயிற்று. ... ... ... ... 3

கருமத்தால் ஞானத்தால் காணும் வகையுண்டே
தருமத்தா லன்றியிறை தாள்கள்—ஒருமத்தால்
முந்நீர் கடைந்தா னடைத்தான் முதல்படைத்தான்
அந்நீ ரமர்ந்தா னடி. 4

| | |
|---|---|
| ஒரு மத்தால் | மந்தரமலையாகிற ஒரு மத்தாலே |
| முந்நீர் கடைந்தான் | கடலைக் கடைந்தவனாய் |
| அடைத்தான் | (அதிலே) ஸேதுபந்தம் செய்தவனாய் |
| முதல் படைத்தான் | முதலிலே (அந்த ஜலதத்துவத்தை) ஸ்ருஷ்டித்தவனாய் |
| அந்நீர் அமர்ந்தான் அடி | அந்த நீரிலே கண்வளர்ந்தருளினவனான எம்பெருமானுடைய திருவடிகளை, |
| இறை தாள்கள் தரும் அத்தால் அன்றி | அந்த எம்பெருமான் தானே தன் திருவடிகளைத் தருகையாகிற பரகத ஸ்வீகாரத்தாலன்றி |
| கருமத்தால் ஞானத்தால் காணும் வகை உண்டே | (ஸ்வயத்நரூபமான) கர்மயோக ஜ்ஞானயோகாதிகளாலே காணலாகுமோ? |

* * *—எம்பெருமானடியைக் காண வேணுமானால் கர்மயோக ஜ்ஞாநயோகாதிகளால் காணமுடியாதென்றும் அத்திருவடிகள்தாமே தம்மைக் காட்டிக் கொடுத்தால் காண இயலுமென்றும் சொல்லுகிறதாயிற்று இப்பாட்டு. முமுக்ஷுப்படியில் த்வய ப்ரகரணத்தில் "இத்தால் ப்ராப்யந்தானே ப்ராபகமென்கிறது" என்ற சூர்ணையை இங்கே அநுஸந்திப்பது. உலகில் உபாயம் வேறாய் உபேயம் அதனில் வேறாயிருக்கும். "நதீஸ்தரணாநந்தரம் ப்லவபரித்யாகம் போலே" என்ற கணக்கிலே உபேயம் கைப்பட்டவாறே உபாயம் விடத்தக்கதாயுமிருக்கும். இங்கு அப்படியல்ல. எம்பெருமான்

திருவடிகளே உபேயம்; அதற்கு உபாயமும் அத்திருவடிகளே. பல கற்றார்க்கும் இதில் தெளிவு பிறப்பது அரிது. பகவத்ப்ராப்திக்கு ப்ரபத்தி உபாயம் என்றாலும் ப்ரபத்தவ்யனான எம்பெருமானே ப்ரபத்தி சப்தார்த்தமாக முடிந்து நிற்கும். * न्यास इति ब्रह्म । न्यास इत्याहुर्मनीषिणो ब्रह्माणम् * என்று உபநிஷத்து மோதிவைத்தது. இறையடியை இறைதாள்கள் தரும் அத்தால் காணும்வகையுண்டேயன்றி, கருமத்தாலும் ஞானத்தாலும் காணும் வகையில்லை என்றதாயிற்று. ... ... ... 4

வழியாவ தொன்றென்றால் மற்றவையும் முற்றும்
ஒழியாவ தொன்றென்றா லோமென்று—இழியாதே
இத்தலையா லேது மில்லையென் றிருந்ததுதான்
அத்தலையால் வந்த வருள். 5

| | | | |
|---|---|---|---|
| வழி ஆவது ஒன்று என்றால் | ப்ராப்திஸாதனமாகக் கூடியது ஸித்தோபாயமானவொன்று தான் என்று சொன்னால் | ஓம் என்று | அதற்கும் இசைந்தும் |
| ஓம் என்று | அதற்கு இசைந்தும், | இழியாதே | ஸ்வப்ரவ்ருத்தியில் கைவைக்காமல் |
| மற்றவையும் முற்றும் ஒழியா | மற்றையுபாயாந்தரங்களையெல்லாம் அறவே யொழித்து | இத் தலையால் ஏதும் இலை என்று இருந்தது தான் | சேதநப்ரவ்ருத் தியாலாவது ஒன்றுமில்லையென்று உறுதி கொண்டிருப்பது தான் |
| அது ஒன்று என்றால் | அந்த ஸித்தோபாயத்திலேயே பொருந்து என்று சொன்னால் | அத் தலையால் வந்த அருள் | ஸர்வேச்வரனடியாக வாய்த்த க்ருபையாகும். |

* * *—உலகில் ஒரூரையடைவதற்குப் பல வழிகளுண்டாயிருக்கும்; இங்கு அப்படியன்று. பகவத்ப்ராப்திக்கு ப்ரபத்தியாகிற வொன்றுதான் வழி—என்றால் அதற்கிசைந்து உபாயாந்தரங்களை ஸவாஸநமாக விட்டொழிக்க வேணும். அந்த ப்ரபத்திதானும் தன்பால் உபாயபுத்தியை ஸஹியாதே அத்விதீயமாயிருக்குமென்றால் அதில குதர்க்கங்கள் செய்து போராதே ஓமென்று இசையவேணும். அப்படியிசைந்தவாறே ஸ்வப்ரவ்ருத்தியில் இழியாத நிலைமையுண்டாகும். ஆக இத்தலையால் விளைவித்துக் கொள்வதொரு நன்மையில்லையென்றும் எந்த நன்மையும் அத்தலையாலுண்டாகுமத்தனையென்றும் துணிந்திருப்பதுதான் பகவத் க்ருபாபலம் என்றதாயிற்று. 5

உள்ள படியுணரில் ஒன்றுநமக் குண்டென்று
விள்ள விரகிலதாய் விட்டதே—கொள்ளக்
குறையேது மில்லாற்குக் கூறுவதேன் சொல்லீர்
இறையேது மில்லாத யாம். 6

| | | | |
|---|---|---|---|
| ஒன்று நமக்கு உண்டு என்று | பேற்றுக்குடலான பரகதஸ்வீகாரமொன்று நமக்குளதென்று | கொள்ள குறை ஏதும்இல்லாற்கு | நம்மிடத்திலொன்று கொள்ள வேண்டும்படி ஒரு குறையுமில்லாதவனான ஸர்வேச்வரனுக்கு |
| உள்ளபடி உணரில் | யதார்த்தமாக உணர்ந்து பார்க்குமளவில் | ஏதும் இறையும் இல்லாத யாம் | எவ்வுபாயமும் சிறிதுமில்லாத [அகிஞ்சநரான] நாம் |
| விள்ள விரகு இலது ஆய் விட்டதே | அவனை விட்டு நீங்கும்வழி இல்லையன்றோ; | கூறுவது என் | ப்ரார்த்தநாரூபமாகச் சொல்ல வேண்டியது என்னவிருக்கிறது ? |
| | | சொல்லீர் | விவேகிகளே! சொல்லுங்கள். |

* * *—ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை யதார்த்தமாக விவேகித்துப் பார்க்கில், பேற்றுக்கு உறுப்பாக நம்பக்கல் ஒன்றுண்டென்று வாய்திறக்க வழியில்லையாயிற்று; என்று முன்னிரண்டடிகளாற் சொல்லி, பின் சங்காபரிஹாரம் பண்ணுகிறது பின்னடிகளால். நம்பக்கல் ஒன்றுமில்லை யென்னலாமோ? 'அரங்காவடியேற்கிரங்காயே' என்கிற ஓர் உக்திமாத்திரமாவது நம்பக்கல் இல்லையோ? என்று சங்கை. அதற்குப் பரிஹாரம் கொள்ளக் குறையொன்று மில்லார்க்கு இத்யாதி. தான் ரக்ஷிக்குமிடத்தில் நம் பக்கலில் ஒன்று கூட்டிக்கொள்ள வேண்டாத நிரபேக்ஷனை அப்பெருமானுக்கு நாம் கூறவேண்டுவது மொன்றுண்டோ? நம் ஆற்றாமையின் கனத்தாலே சொல்லுகிறோமத்தனை போக்கி அத்தலைக்கு அவச்யாபேக்ஷிதமென்னும் நினைவாலே சொல்லுகிறிலோம் என்றதாயிற்று. ... ... ... ... ... 6

இல்லை யிருவர்க்கு மென்றிறையை வென்றிருப்பார்
இல்லை யஃதொருவர்க் கெட்டுமதோ—இல்லை
குறையுடைமை தானென்று கூறினு ரில்லா
மறையுடைய மார்க்கத்தே காண். 7

| | | | |
|---|---|---|---|
| இருவர்க்கும் இல்லை என்று | ஜீவாத்மபரமாத்மாக்களான இருவர்க்கும் [மேலேபின்னடிகளில் சொல்லுகிறபடி] இல்லாமை உண்டென்றுகொண்டு | குறை தான் இல்லை | (அப்பெருமானுக்கு) நம்பக்கலில் ஒன்றுகொள்ள வேண்டும்படியான குறையில்லை; |
| இறையை வென்று இருப்பார் இல்லை | ஸ்வாமியான அவனை ஜயித்திருப்பாரொருவருமிலர்; | உடைமை தான் இல்லை | (சேதநனுக்கு) ஸமர்ப்பிக்கத்தக்கதான பொருள் எதுவுமில்லை; |
| அஃது ஒருவர்க்கு எட்டுமதோ | அப்படிபட்ட வெற்றி (ஸாமான்யமாக) ஒருவர்க்குக் கிட்டக்கடவதோ? | என்று | என்னுமிவ்விஷயத்தை |
| (இருவர்க்கும் இல்லாமையொன்று உண்டென்றது எவையென்னில்;) | | கூறினர் இல்லா மறையுடைய மார்க்கத்தே காண் | அபௌருஷேயமாகையாலே வக்தாக்களை யுடையதல்லாத வேதமார்க்கத்தில் கண்டுகொள். |

* * *—[இல்லை இருவர்க்கும்] எம்பெருமானுக்குமில்லை, நமக்குமில்லை. எது இல்லையென்னில்; நம்பக்கலில் ஒன்று எதிர்பார்த்திருக்குங்குறை அவனுக்கில்லை; அவனுக்கு இடலாவதோருடைமை நம்பக்கலில்லை. இப்படியிருப்பதோர் அத்யவஸாயமுண்டாகில் அவனைவென்று விடலாம்; அதாவது அவன் பக்கலில் ஸர்வஸ்வமும் பெற்று விடலாமென்கை. இவ்வத்யவஸாயம் ஒருவர்க்கு மெளிதன்று.

முதலடியில் "இல்லையிருவர்க்கும்" என்றதைத் தாமே விவரித்தருளுகிறார் *இல்லை குறையுடைமையித்யாதியால். அவன் பக்கலில் குறையில்லை, நம் பக்கலில் உடைமையில்லை. என்று முறையே அந்வயிக்கும். மூன்றுமடியில் "கூறினரெல்லாம்" என்பது பாடப்பிழை; 'கூறினரில்லா' என்பதே திருத்தமான பாடம். இது மறைக்கு விசேஷணம். வேதத்தைக் கூறினவர்கள் ஒருவருமில்லாமையாலே கூறினரில்லாமறை யென்கிறது. அபௌருஷேயமான வேதமென்றபடி. அதனுடைய மார்க்கத்தே காண்—இவ்வர்த்தம் வேத விழுப்பொருளென்றதாயிற்று. ... ... 7

வித்த மிழவின்பம் துன்பம்நோய் வீகாலம்
தத்த மவையே தலையளிக்கும்—அத்தைவிடீர்
இச்சியா னிச்சியா தேத்த வேழில்வானத்து
உச்சியா னுச்சியா னாம். 8

| | | | |
|---|---|---|---|
| வித்தம் இழவு இன்பம் துன்பம் நோய் வீகாலம் | தனலாபம் தனத்தினிழவு சுகதுக்கங்கள்வியாதி சரீரவிநாசம் ஆகிய இவையெல்லாம் | இச்சியான் | அநந்ய ப்ரயோஜனனென்று பேர்பெற்றவன் |
| தத்தம் அவையே தலை அளிக்கும் | தம் தம் கர்மாநுகுணமாக வந்து சேரும்; | இச்சியாது ஏத்த | நிஷ்காமனாய்க்கொண்டு துதி செய்யுமளவில் |
| | | எழில் வானத்து உச்சியான் | பரமபதத்துச்சியிலுள்ளானான ஸர்வேச்வரன் |
| அத்தை விடீர் | அவற்றில் கரைதலை விட்டிடுங்கள்; | உச்சியான் ஆம் | (இவன்றனது) தலையில்வந்து சேர்ந்தவனாவன். |

* * *—[வித்தம் இழவு இன்பம் துன்பம்] வித்தம் என்று தனலாபத்தைச் சொல்லுகிறது; இழவென்று அதன் நஷ்டத்தைச் சொல்லுகிறது. தனலாபமுண்டானால் இன்பமடைவதும் இழவுண்டானால் துன்பமடைவதும் உலகவியல்பாதலால் உடனே அவையும் சொல்லிற்று. இவைதவிர நோய்களும் வந்து மிடைதரும். இங்ஙனே யிருக்கசெய்தே விநாசகாலமும் ப்ராப்தமாகும். இவை அவரவர்களது கர்மாதீனமாக வந்தே நிற்கும். எவ்வகையினாலும் தடைபட்டு நில்லா. [அத்தை விடீர்] அவற்றில் மனஞ்செலுத்திக் கவலையுறுவது வேண்டாவென்றபடி. கவலையுறாதிருத்தற்கு விரகு சொல்லுவன பின்னடிகள். இச்சியான் என்று அநந்யப்ரயோஜநாதிகாரியைச் சொல்லுகிறது. ஒரு பலனையும் இச்சியாதவன்—விரும்பாதவன் என்றபடி. அவன், இச்சியாது ஏத்த—ஒன்றையும் விரும்பாமல் வாய்படைத்த ப்ரயோஜநம் பெறுவோமென்று துதிக்க; அவ்வளவிலே, [எழில் வானத்துச்சியான் உச்சியானும்] சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான் *தனியேனாருயிரே! என் தலைமிசையாய் வந்திட்டு* என்னும்படியே அவன் தலைமிசை வந்து நின்று கூத்தாடுவன் ... ... 8

தத்த மிறையின் வடிவென்று தாளிணையை
வைத்த வவரை வணங்கியிராப்—பித்தராய்
நிந்திப்பார்க் குண்டேறா நீணிரயம் நீதியால்
வந்திருப்பார்க் குண்டிழியா வான். 9

| | | | |
|---|---|---|---|
| தாள் இணையை வைத்த அவரை | தம் திருவடிகளைத் தஞ்சமாகக் காட்டிக்கொடுத்த ஆசாரியரை | ஏறா நீள் நிரயம் உண்டு | ஒருநாளும் கரையேறமுடியாத ஸம்ஸாரப்படுகுழியில் வீழ்ச்சியேயாம்; |
| தம் தம் இறையின் வடிவு என்று | தம்தம் ஸ்வாமியின் திவ்ய மங்கள விக்ரஹமென்று கொண்டு | நீதியால் வந்திப்பார்க்கு | முறைதவறாது வணங்கி வழிபடும் ஸச்சிஷ்யர்களுக்கு |
| வணங்கி இரா பித்தர் ஆய் நிந்திப்பார்க்கு | வணங்கி வழிபாடுசெய்யாத பித்தர்களாகி நிந்திக்குமவர்களுக்கு | இழியா வான் உண்டு | மீட்சியில்லாத திருநாடேயாம். |

* * *—கீழ் எட்டுப்பாட்டுக்களிலு மருளிச்செய்த பொருள்களெல்லாம் திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்தின் மஹார்த்தங்களாயிருக்கும். இவ்வர்த்த விசேஷங்களைப் பரமக்ருபையினால் உபதேசித்தருளத் தாமாகவே அபிமானிக்குமாசாரியனை நிந்திப்பார்க்கும் வந்திப்பார்க்கு முண்டாகக்கடவ பலனையருளிச் செய்கிறாரிதில். "தாளிணையை வைத்தவர்" என்றே ஆசார்யரை நிர்தேசிக்கிறார். கீழே ஞானஸாரத்தில் (36.) *மருளாமிருளோட மத்தகத்துத் தன்தான் அருளாலே வைத்தவவர்* என்றருளிச்செய்ததை யடியொற்றிப் பொருள் பணித்தால் 'தம் திருவடியைத் தலைமேல் வைத்தவர்' என்னலாம்; இராமாநுசநூற்றந்தாதியில் *ஊழிமுதல்வனையே பன்னப் பணித்த விராமாநுசன் பரன்பாதமுமென் சென்னித்தரிக்க வைத்தான்* என்றும் அரங்கன்செய்ய தாளிணையோடார்த்தான் * என்றுமுள்ள பாசுரங்களை யடியொற்றிப் பொருள் பணித்தால், 'எம்பெருமான் திருவடிகளைத் தலைமேல் வைத்தவர்' என்னலாம். இரண்டும் பொருந்தியதே. இப்படிப்பட்ட ஆசாரியரை ஸர்வேச்வரன் வடிவென்று கொள்ளாதே நிந்திப்பார் நகரத்தழுந்துவர்; நீதியால் வந்திப்பார் வானேறி வாழ்வர் என்றதாயிற்று. ... ... ... ... ... 9

இறையு முயிரு மிருவர்க்கு முள்ள
முறையும் முறையே மொழியும்—மறையை
உணர்த்துவா ரில்லாநா ளொன்றல்ல ஆன
உணர்த்துவா ருண்டான போது. 10

3737

இறையும் உயிரும் ஸர்வேச்வரனையும் சேதநனையும்
இருவர்க்கும் உள்ள முறையும் { இவ்விருவர்க்கு முண்டான சேஷசேஷி பாவ ரூபமான ஸம்பந்தத்தையும்
முறையேமொழியும் மறையை { உள்ளபடி தெரிவிக்கின்ற வேதரூபமான திருமந்திரத்தை
உணர்த்துவார் இல்லா நாள் { உபதேசிக்குமாசாரியன் இல்லாத காலம்
ஒன்று அல்ல அஸத்கல்பமே;
உணர்த்துவார் உண்டான போது { உபதேசிக்குமாசாரியர் உள்ள காலந்தான்
ஆன ஸத்தானகாலம்.

* * *—கீழ்ப்பாட்டிலருளிச்செய்த ஆசார்யவைபவத்திற்கு சேஷபூதமாக ஆசார்யோபகாரவைபவத்தை இப்பாட்டிலருளிச்செய்து இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டியருளுகிறார். பரமாத்மஸ்வரூபத்தையும் ஜீவாத்மஸ்வரூபத்தையும் இவ்விருவர்க்குமுண்டான ஸம்பந்தத்தையும் இவற்றை உள்ளபடி யுணர்த்துகிற ஸகலவேதஸாரமான திருமந்த்ரத்தையும் உணர்த்துகையே ஆசார்யக்ருத்யம்; இதுவே ஆசார்யன் செய்தருளும் மஹோபகாரம். இம்மஹோபகாரம் நிகழாதநாள் அஸத்கல்பம். இது நிகழும் நாளே ஸத்தான நாளென்று ப்ரமேயங்களில் ஸாரமான அர்த்தத்தை யருளிச்செய்து இப்பிரபந்தத்தையும் தலைக்கட்டினாராயிற்று.

முடிவில் ஒரு விண்ணப்பம். இவ்விரண்டு பிரபந்தங்களுக்கும் பல்லாண்டுகட்கு முந்தியே வியாக்கியானமெழுத ஆவல் கொண்டிருந்தும் இடையூறுமிடைதந்தது. இவ்விஜயவாண்டு கார்த்திகைத்திங்களில் அருளாளப்பெருமாளெம்பெருமானார் மஹோத்ஸவஸமய விசேஷத்தில் மிக வெளிதாக இக்கைங்கரியம் நிறைவேறிற்று,

இப்பாசுரங்களை யநுபவித்தபோது *தேனும்பாலுங் கன்னலுமமுதுமாய் அடியேனுக்குத் தித்தித்த விதத்தைத் தெரிவிக்கப் பாசுரமறிகின்றிலேன். நமது எம்பெருமானார் தரிசனத்திற்கு இவ்விரண்டு பிரபந்தங்களும் இரண்டு திவ்ய சக்ஷுஸ்ஸுக்களென்றே உறுதி கொண்டேன். உபதேசரத்தினமாலையும் திருவாய்மொழி நூற்றந்தாதியும் போலே இவையிரண்டும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நித்யாநுஸந்தேயமாகக்கடவன. 10

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

அருளாளப் பெருமாளெம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கராசாரியர் எழுதிய**

**பிரமேயஸாரவுரை**

முற்றுப்பெற்றது.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---